பூஞ்சோலை

மலர் 3	ஜனவரி, 1, 1954	இதழ் 10

பொருளடக்கம்

ஆசிரியர் சொல்லுகிறார் ... 2
வனஜாவின் அண்ணன் (தொடர்கதை) ... 3
வகுப்பிலே கிளர்ச்சி செய்த மாணவர் ! ... 18
பங்களூர் விஜயம் ... 22
பளிங்கு மண்டபம் ... 27
கேளுங்கள்: பதில் சொல்லுகிறோம் ... 31
தந்தியோ தந்தி! ... 33
நொண்டிச் சிப்பாய் ... 37
காக்கை குருவி எங்கள் சாதி ... 43
சரிக்குச் சரி! ... 47
ஆனந்தத் தீபாவளி ... 51
சின்னக் கண்ணன் ... 60
என்ன காலம்? ... 62
குருவியும் கருமியும் ... 65
பழைய புத்தகம் ... 67
இளிச்சவாயன் எழுதுகிறான் ! ... 74

பெயர் :- ....

தெரு : ....

ஊர் ....

ஜில்லா ....

18/1-54
199256
சென்னை 600 ...

புதிய தொடர் கதை

"மிகவும் முக்கியமான ஒரு நிகழ்ச்சியை—பரம ரகசியமான ஒரு விஷயத்தை இப்போது உன்னிடம் சொல்லப் போகிறேன். அதை நீ எவரிடமும் உளறி வைக்கக்கூடாது!... போலீஸாருக்குத் தெரிந்தால் ஆபத்து!" என்று வனஜாவிடம் அம்மா எச்சரித்துக்கொண்டிருக்கும்போதே, சாட்சாத் இன்ஸ்பெக்டரே அங்கு வந்துவிட்டார்! **அப்புறம் ?**

* * * *

சிங்கத்தின் வாயில் அகப்பட்டுக்கொண்டார், சர்க்கஸ் மானேஜர் கிறிஸ்தாபர். 'இவர் இனித் தப்பமாட்டார்' என்றே எல்லோரும் முடிவு கட்டிவிட்டனர். ஆனால், ரமணி செய்த சாமர்த்தியமான வேலை அவரைத் தப்ப வைத்துவிட்டது! **அவன் செய்த வேலை என்ன ?**

* * * *

ரமணிக்கு முன்னால் வந்து நின்ற வனஜா, "அண்ணா! கொஞ்சம் கிழக்கைப் பார்த்து நில்லு" என்று கட்டளையிட்டாள். **ஏன் தெரியுமா...?**

இப்படி எத்தனை எத்தனையோ புதிர்கள்! அந்தப் புதிர்களுக்கெல்லாம் மிகவும் அற்புதமான முறையில் விடை கூறப்பட்டுள்ளது, புதிய தொடர் கதையான **வனஜாவின் அண்ணனில்.** விறு விறுப்பான நடையில், அத்தியாயத்துக்கு அத்தியாயம் வியப்பூட்டும் வகையில், நல்ல தமிழில் இக்கதையை எழுதியிருக்கிறாள் தங்கை **ஜோதிர்லதா கிரிஜா.**

பூஞ்சோலையிலும், மற்றப் பத்திரிகைகளிலும் கிரிஜா எழுதிய பல கதைகளையும், நாடகங்களையும் நீங்கள் படித்து மகிழ்ந்திருப்பீர்கள். சிறுவர் பத்திரிகையில் முதல் முதலாக ஒரு பெண் எழுதும் தொடர் கதை இதுதான் என்று நினைக்கிறோம்.

ஒவ்வோர் இதழிலும் வெளிவரும் தொடர்கதைப் பகுதியைத் தனியாக எடுத்துச் சேர்த்து ஓர் அழகான புத்தகமாக்க வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுகிறீர்களல்லவா? அதற்காகவே, தொடர்கதைப் பகுதிக்குமட்டும் தனியாகப் பக்க எண் கொடுத்திருக்கிறோம். அசல் புத்தகம்போலவே அச்சிட்டும் இருக்கிறோம். அத்தியாயங்களின் பெயர்களைக்கூட வரிசைப்படுத்தி முதலில் கொடுத்துவிட்டோம். முக்கிய பாத்திரங்களையும் முன்னதாகவே உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்த இதழ் அட்டையும் தொடர் கதையில் வரும் ஒரு முக்கியமான காட்சியைக் காட்டுகிறது.

இனி, நீங்கள் தொடர் கதைக்குள் புகவேண்டியதுதான்!

சாமியப்பன்
ராமசாமி
விசாலம்
இன்ஸ்பெக்டர்
ராக்கப்பன்
கிரிஸ்தாபர்
வனஜாவின் அண்ணன்
ஜோதிர்லதா கிரிஜா

அத்தியாயங்கள்

1. பல நாள் திருடன் !
2. ஓட்டப் பந்தயம் !
3. திருடன் ! திருடன் !
4. அபாயம் குறுக்கிட்டது !
5. ஐயோ, போலீஸ் !
6. ஜிமிக்கி எங்கே ?
7. ஸ்டேஷனுக்கு அழைப்பு
8. இரும்புக் கரங்கள் !
9. 'யாரடா அங்கே ?'
10. மூர்ச்சையானார் !
11. மற்றோர் ஆபத்து !
12. ராக்கப்பன் யார் ?
13. குண்டு வெடித்தது !
14. அந்த ரகசியம் !
15. சிங்கத்தின் வாயில்...
16. வந்தவர் யாரோ ?
17. உயிருக்கு ஆபத்து !
18. போன மச்சான்...

பூஞ்சோலை, த. பெ. எண் 1803, சென்னை-1

1. பல நாள் திருடன்!

'கிண் கிண், கிணு கிணு' என்ற வெண்கல ஓசையுடன் ஒலித்தது அந்த அலாரம் கடிகாரம். அதன் அலறலைக் கேட்டதுமே 'சட்'டென்று வாரிச் சுருட்டிக்கொண்டு தன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான் ரமணி. அவனைப் பார்த்தால் அப்போதுதான் விழித்துக் கொண்டவன் மாதிரி தெரியவில்லை. கடிகாரம் மணி அடிப்பதற்கென்றே காத்துக் கொண்டிருந்தவன் போல்தான் தென்பட்டது.

அபாயம் நிறைந்த இரகசியத் திட்டத்தை நிறைவேற்றும் எண்ணத்துடன் படுக்கிறவர்களுக்குத் தூக்கமா வரும்? சுறுசுறுப்புடன் கண்களை விரலால் கசக்கித் தேய்த்துவிட்டுக் கொண்ட ரமணி, 'ஆவ்' என்று மெல்லிய குரலில் கொட்டாவி விட்டுக்கொண்டே பின்புறமாக முதுகை நெளித்துக் கொண்டான். அவனுடைய இந்தச் செய்கையால், அவனிடம் ஒட்டிக் கொண்டிருந்த 'அரைக்கால் தூக்க'மும் வந்த வழியை நோக்கி அலறிப் புடைத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தது.

நிறுத்தப்படாத கடிகாரம் இன்னும் அலறிக் கொண்டிருந்தது. அமைதி நிறைந்த அந்த இரவு நேரத்தில், கடிகாரத்தின் கிண் கிணி நாதம் இன்னிசையாக ஒலிப்பதற்குப் பதில், ஏனோ ரமணியின் உள்ளத்தில் எரிச்சலை எழுப்பிவிட்டது! படுக்கையிலிருந்து ஆத்திரத்துடன் எழுந்த ரமணி, கடிகாரம் வைக்கப்பட்டிருந்த முக்காலியை ஒரே எட்டில் நெருங்கினான். அடுத்த விநாடி, அவன் கை, கடிகாரத்தின் கிணு கிணுப்புக்கு ஒரு தாற்காலிக முற்றுப்புள்ளி வைத்தது.

கடிகாரத்தின் கிண் கிணி ஓசை தன்னைத் தவிர வீட்டில் வேறு யாரையாவது விழிக்கச் செய்து விடுமோ என்று பயந்துதான் ரமணி அப்படிச் செய்தான்.

முதல் நாளே அவன் ஒரு திட்டம் தயார் செய்து வைத்திருந்தான். அந்தத் திட்டம் இரகசியமாகவே நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், அந்த வீட்டில் அவன் ஒருவனைத் தவிர வேறு யாரும் விழித்துவிடக் கூடாதே! இப்பொழுது புரிந்ததா, ரமணி அவசரம் அவசரமாகக் கடிகாரத்தின் ஜலதரங்க ஓசைக்கு முற்றுப்புள்ளி வைத்ததன் காரணம்?

தன் படுக்கையில் மறுபடியும் உட்கார்ந்துகொண்டே அந்தக் கடிகாரத்தை உற்றுப் பார்த்தான் ரமணி. அந்த வட்ட வடிவமான கடிகார முகப்பில், அவனுடைய அப்பா ராமசாமியின்

முகம் தென்பட்டது. முதல் நாள் கூறிய வார்த்தைகளைத் திரும்பவும் அப்போது அவர் கூறுவது போலிருந்தது :

'ஏதேது! பரீட்சைக்கு இன்னும் மூன்று மாதங்களுக்கு மேல் இருக்கும்போதே துரையவாளுக்குப் படிப்பில் அக்கறை வந்துவிட்டது போலிருக்கிறதே! பேஷ்! படிப்பில் ஒருநாளும் இல்லாத திருநாளாக இன்று உனக்கு அக்கறை ஏற்பட்டிருக்கிறதே! இதில் பத்தில் ஒரு பங்காவது பரீட்சைகள் முடிவடையும் வரை நீடித்தாற்போல் உன்னிடம் இருக்க வேண்டுமே என்றுதான் கவலையாக இருக்கிறது......அலாரம் கடிகாரம் தானே வேண்டும்? தாராளமாய்த் தருகிறேன். கொஞ்சம் கவனமாக மட்டும் பாடங்களைப் படித்து இந்த வருஷம் எப்படியாவது தேறி மேல் வகுப்பிற்குப் போய் விடு! நீ என்ன வேண்டுமென்று கேட்டாலும் தட்டாமல் வாங்கித் தருகிறேன்!' என்றுதான் அப்பா முதல் நாள் கூறினுர்.

'ஐயோ, அப்பாவி அப்பாவே! சீக்கிரம் எழுந்து படிப்பதற்காகவே நான் அலாரம் கடிகாரம் கேட்டேன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் அறியாமைக்கு என் மனமுவந்த அனுதாபம் உரித்தாகுக!'—இந்த மாதிரி 'நாடக மேடைப் பாணி'யில் இலக்கணமாக முணு முணுத்துவிட்டுச் சிரித்துக் கொண்டான் ரமணி.

...அன்று காலை, "பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கிறதே அப்பா! உங்கள் அலாரம் கடிகாரத்தைக் கொஞ்சம் கொடுத்தீர்களானுல், அதிகாலையில் சீக்கிரமாய் எழுந்து படிக்கச் சௌகரியமா யிருக்கும். மாடியிலுள்ள என் அறையில் வைத்துக் கொள்கிறேன், அப்பா!" என்று மிகுந்த அக்கறையுடையவன் போல் நடித்துக்கொண்டே அப்பாவைக் கேட்டான் ரமணி.

அவனுடைய ஆர்வங்கலந்த சொற்களைக் கேட்டதும், அப்பா திகைத்துப் போனுர்.

ஏனெனில் படிப்பில் ரமணிக்கு இருந்த அக்கறையின் எல்லை அவருக்கு வெகு நன்ருகத் தெரியும். ஆயினும், அவருக்கு ரமணி கூறியதைக் கேட்டதும் மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. 'ஏதோ கடவுள் கிருபையால் ரமணி ஒழுங்காகப் படித்து முன்னேறவேண்டும். இது ஒரு நல்ல அறிகுறிதான்' என்று எண்ணி மகிழ்ந்தார். எனினும் தமக்குத் தோன்றிய மகிழ்ச்சி முழுவதையும் அவர் வெளிக்காட்டிக் கொண்டதாகச் சொல்ல முடியாது.

"ஏதேது! படிப்பில் ரொம்ப அக்கறை வந்துவிட்டது போலிருக்கிறதே, துரையவாளுக்கு!" என்று கொஞ்சம் இடக்காகவே ஆரம்பித்துத் தம்முடைய ஆனந்தத்தை ஓரளவு மட்டுமே காட்டிக்கொண்டார், அந்தக் கெட்டிக்கார அப்பா. அளவுக்கு



மீறிப் புகழ்ச்சியாகப் பேசிவிட்டால், 'பிள்ளைக்கு மூக்கு வெளுத்துவிடும்' என்ற பயம் அவருக்கு !

ரமணியிடம், 'அலறும் கடிகார'த்தை அவர் கொடுத்த போது, அவரது முகம் எவ்வகையான உணர்ச்சியைக் காட்டியதோ, அதே உணர்ச்சியைத்தான் கடிகாரத்தில் தோன்றிய அப்பாவின் முகத்தில் இப்போதும் ரமணி கண்டான். ஆனால்... ரமணி அதிகாலையில் எழுந்து பாடம் படிப்பதற்காக 'அலறும் கடிகார'த்தைக் கேட்டு வாங்கிக் கொள்ளவில்லை என்பதை அந்த அப்பாவித் தகப்பனார் அறிய நேர்ந்தால்......?

இதை நினைத்துப் பார்த்த ரமணியின் உள்ளத்தில் ஏதோ முள் போன்ற ஒரு பொருள் 'சுருக்'கென்று குத்துவது போலிருக்

தது. நேரம் போய்க்கொண்டே இருந்தது. கடிகாரத்தைப் பார்த்த ரமணி நெஞ்சிலே துணிச்சலை வரவழைத்துக் கொண்டு எழுந்து நின்றுன். கடிகாரத்தில் மணி இரண்டாகிக்கொண்டிருந்தது. திட்டத்தை அதிக அபாயத்துக்குட்படாமல் நிறைவேற்றச் சரியான நேரம் !

‘ திருடர்களுக்கும், கொலை பாதகர்களுக்கும் தூக்கம் வராத நேரம். ஆம்; எனக்கும் சாதகமான சமயம்தான் ! பார்க்கப்போனல் நானும் ஒரு குட்டித் திருடன்தான் ! பிறர் வீட்டிலிருந்து நூறு நூருய்க் கொள்ளையடிக்கப் போகும் திருடனல்ல; சொந்த வீட்டில்—அப்பாவின் பணப்பையிலிருந்து—சிறிய தொகையைக் களவாடப்போகும் குட்டித் திருடன் !...’

‘ உன் வீட்டிலேயேவா கொள்ளையடிக்கப் போகிருய் ? ரமணி ! என்ன காரியம் இது! சரியா ?’

‘ஏன் சரியில்லை? இந்த அப்பாதான் ஏராளமான சொத்துக்களைச் சேர்த்து வைத்திருக்கிருரே ! அப்படி இருந்தும், விரும்பியதை வாங்கித் தின்னத் தாம் பெற்ற பிள்ளைக்குக் கூடக் காசு கொடுக்க மனம் வரவில்லையே! பணத்தை எண்ணி அழகு பார்த்துக்கொண்டிருக்கும் இவருக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான் !’

‘உன் தந்தை அப்படியொன்றும் கருமியல்ல. அப்படியே அவர் கருமியாக இருந்தாலும், தண்டனையைக் கடவுள் அவருக்குக் கொடுத்துவிட்டுப் போகிருர்...அவரைத் தண்டிக்க நீ யார் ? நீ செய்வது மட்டும் சரியா?’

‘‘ஏன் சரியில்லை? எல்லாம் சரிதான் !’

மனச்சாட்சியின் குறுக்குக் கேள்விகளை எல்லாம் தன்னுடைய சமாதானங்களால் தகர்த்தெறிந்து விட்டு எழுந்தான், ரமணி. அடிமேல் அடிவைத்து மெதுவாகத் தன்னறையை விட்டு வெளியே வந்தான். கூடத்திலிருந்த விடிவிளக்கின் மங்கிய ஒளி மாடிப்படிகளின் மீது இலேசாய்ப் பரவியிருந்தது. கூடத்தின் ஓர் ஓரத்தில் அவனுடைய அம்மா விசாலமும், தங்கை வனஜாவும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

மிகவும் ஜாக்கிரதையாக ஓசையின்றி ஒவ்வொரு மாடிப்படியாகக் கடந்து தரைக்கு வந்துவிட்டான் ரமணி. அப்போது, தூக்கத்தில் வனஜா என்னென்னவோ உளறிக்கொண்டே புரண்டு படுத்தாள். ‘ எங்கே அவள் விழித்துக்கொண்டு விடுவாளோ !’ என்ற அச்சத்தில் அவனுடைய உடல் வியர்த்துக் கொட்டியது.

இதற்கு முன்னுல் அவன் எத்தனையோ ‘ சில்லறை வேலைத்தனங்கள்’ செய்திருக்கிருன். சாமான்கள் வாங்கி வரும்படி அவனுடைய அப்பா கொடுக்கும் காசில் ஓரணு, இரண்டணு என்று

மிச்சம் பிடித்துவிட்டுப் பலமுறை பொய்க் கணக்குச் சொல்லி யிருக்கிறான். ஆனாலும், இந்த மா திரி இருட்டு வேளையில் வெளிப் படையாகத் திருடுவது இதுதான் முதல் தடவை.

மெல்ல மெல்ல நடந்து ரேழி நடைக்கு வந்துவிட்டான் ரமணி. ரேழியில் ராமசாமி அபூர்வ இராகங்களில் குறட்டை விட்டபடியே நிம்மதியாய்த் தூங்கிக்கொண்டிருந்தார். ரேழி யறையில்தான் பணப்பை இருந்தது. குறட்டையிலிருந்து ராமசாமி ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தாரென்பது அவனுக்குத் தெரிந்தது. ஆனாலும், சிறிய ஓசைகளுக்கு அசைந்து கொடுக்கக்கூடிய தூக்கமா இல்லையா என்பதைத் தெளிவாய்த் தெரிந்து கொண்டுவிட விரும்பினான், ரமணி. ஏனென்றால், விழித்துக் கொண்டே குறட்டைவிடும் ஆசாமி களும் உண்டல்லவா?

ரேழிக் கதவில் 'லொட் லொட்'டென்று இரண்டு தடவை கள் சிறிது பலமாகத் தட்டினான் ரமணி. ராமசாமி அசையவே இல்லை. ரேழியறையின் நிலையில்தான் சாவி எப்போதும் மாட் டப்பட்டிருக்கும். கூடத்திலிருந்து வந்த வெளிச்சத்தின் உதவி யால் அந்தச் சாவியை எடுத்துப் பூட்டைக் கூடியவரை ஓசை யில்லாமல் திறந்தான் ரமணி. 'பட் பட்'டென்று அப்போது அவன் இருதயம் வேகமாக அடித்துக்கொண்டிருந்தது. அந்த ஒலி ரமணியின் செவிகளுக்கே நன்கு கேட்டது. அவனுடைய உடல், உச்சியிலிருந்து குதிகால் வரை உள்ளூர வெடவெடத்துக் கொண்டிருந்தது.

கதவைத் திறந்துவிட்டு அறையினுள் புகுந்தான் ரமணி. கதவைச் சாத்திவிட்டு முன்னேற்பாடாக எடுத்து வந்திருந்த 'டார்ச்' விளக்கைப் பொருத்தினான். பணப் பையை எடுத்தான். கைகள் உதறிய உதறலில் பையிலிருந்த நாணயங்களெல்லாம் எங்கே நழுவி விழுந்து பலத்த சத்தம் உண்டாக்கிவிடுமோ என்ற பயம் ஏற்பட்டது அவனுக்கு. கூடியவரை கை நடுக்கத் தைச் சமாளித்துக்கொண்டு பையைப் பார்த்தான் ரமணி. ஒரே ஒரு ரூபாய்மட்டும் எடுக்கும் எண்ணத்துடன்தான் அங்கே வந் தான். பையிலிருந்த நோட்டுக் கற்றைகளையும் நாணயங்களையும் கண்டதும் ரமணியின் 'சபலம்' அதிகரித்து விட்டது. 'எடுக் கிறதோ எடுக்கிறோம்; நிறைய எடுத்து விடுவோமே!'

இந்த எண்ணம் ஏற்பட்ட மறு வினாடி ரமணியின் கை, இரு பத்து ரூபாய் நோட்டுக்களை லாவகமாக உருவிவிட்டது...பையை இருந்த இடத்தில் வைத்துவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு வெளிவந்தான் ரமணி. அப்பா இன்னும் அதே நிலையில் அசையா மல் தூங்குவதைக் கண்டான். நிம்மதியாகப் பெருமூச்செறிந் தான். கதவைப் பூட்டிச் சாவியை மாட்டிவிட்டுப் பூனைபோல்

தன்னறைக்கு வந்தான். 'இருபது ரூபாயை ஒரேயடியாக எடுத்து விட்டோமே! அப்பா கண்டு பிடித்துவிட்டால்...?'

இரண்டு தினங்கள் கழிந்தன. வெளியே தம் இடுப்பிலேயே நிறையப் பணம் வைத்துக் கொண்டிருந்ததால், ரேழியறைக்குள் நுழைந்து, பணப்பையைத் திறக்கவேண்டிய தேவை ராமசாமிக்கு ஏற்படாது போயிற்று...!

'அனுபவிக்க, அனுபவிக்க ஆசை அதிகமாகிறது' என்று சொன்ன அறிஞன் எத்தகைய புத்திசாலி! ஆம், ரமணியின் ஆசை அதிகரித்தது. இருபது ரூபாயில் ஐந்து ரூபாயை இந்த இரண்டு நாட்களில் செலவழித்து விட்டான். மீதிப் பதினைந்து ரூபாய் அவனிடம்—கணக்கு நோட்டில்—பத்திரமாக இருந்தது. காசு வைத்துச் சீட்டாடும் கெட்ட வழக்கம் அந்தப் பதினன்காவது வயதிலேயே ரமணியிடம் ஏற்பட்டுவிட்டிருந்தது. அதற்காக இன்னும் ஐந்து ரூபாய் அவனுக்குத் தேவையா யிருந்தது. 'அதை மட்டும் இன்று எப்படியாவது எடுத்துவிட்டால், பிறகு இந்தத் திருட்டுத் தொழிலுக்கே போவதில்லை! கடவுளே, இந்த ஒரு முறைமட்டும் எனக்கு உதவி செய்துவிடு!' என்று அவன் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டான்.

...அன்றிரவு அதே இரண்டு மணி. ரமணி ரேழியறையில் கையில் 'டார்ச்' விளக்குடன் உட்கார்ந்திருந்தான். அதை இன்னும் அவன் ஏற்றவில்லை. ஏற்ற எண்ணிய சமயத்தில் வெளியே ராமசாமி படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் சத்தம் கேட்டது. அவ்வளவுதான்! ரமணியின் தொண்டையிலிருந்த ஈரமெல்லாம் உலர்ந்துவிட்டது. சரேலென்று அறையிலிருந்த பீரோவுக்குப் பின்புறம் பதுங்கிக்கொண்டு விட்டான். ரேழியின் விளக்கைப் போடும் ஓசை கேட்டது. அடுத்த வினடி, "அட இழவே! படுக்கப் போகும்போது கதவைப் பூட்ட மறந்துவிட்டேன் போலிருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே ராமசாமி ரேழியறைக் கதவைப் பூட்டும் சத்தம் ரமணிக்கு நன்ருய்க் கேட்டது! உள்ளே அகப்பட்டுக்கொண்ட ரமணி 'வெல வெல'த்துப் போனன்!

2. ஓட்டப் பந்தயம்!

ரேழியறையின் நாதாங்கியில், சாவியுடன் பூட்டு தொங்கிக் கொண்டிருப்பதைத் தற்செயலாக விழித்துக்கொண்ட ராம சாமி கவனித்ததும் கொஞ்சம் வியப்படைந்தார். 'இரவு படுக்கப் போகும்போது ரேழியறையை வழக்கம்போல் பூட்ட மறந்து விட்டோமோ' என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. எனவே ரமணி உள்ளே உட்கார்ந்துகொண்டிருந்த அந்த அறையின் கதவை நன்ருக இழுத்துப் பூட்டிவிட்டார். அவருக்குத் தெரி யுமா, ரமணி உள்ளே இருக்கிருனென்று? அப்படித் தெரிந்தால் தான் அவர் சும்மா விடுவாரா?

உள்ளே வகையாக அகப்பட்டுக்கொண்ட ரமணியின் உள் ளம் படாதபாடு பட்டது. அவன் பட்ட பாட்டை அவனுடைய நிலையில் இருந்து பார்த்தவர்களால்தான் முற்றிலும் உணர்ந்து கொள்ள முடியும்.

'ஆகா! 'பேராசை பெரு நஷ்டம்' என்ற வசனம் என் விஷ யத்தில் எவ்வளவு சரியாக நிரூபிக்கப்பட்டு விட்டது? அன்று களவாடிய இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களுடன் என் உள் ளம் திருப்தி யடைந்திருக்கக் கூடாதா?...எடுத்த இருபது ரூபா யில்தான் மிச்சம் பதினைந்து ரூபாய் இருக்கிறதே! அதை வைத் துக்கொண்டு திருப்தி யடைந்திருக்கக் கூடாதா? இன்னும் ஐந்து ரூபாயைத் திருடி, கையிருப்பை இருபது ரூபாயாக உயர்த்திவிட வேண்டுமென்ற பேராவல்—பொல்லாத விருப் பம்—என் உள்ளத்தில் ஏன் எழுந்தது? ஐயோ! சொந்த வீட்டி லேயே—அப்பாவின் அறையிலேயே—இந்த மாதிரி வெட்கக் கேடான முறையில் அகப்பட்டுக்கொண்டு விட்டேனே!

'காலையில் எழுந்ததும் இந்த அறையைத் திறந்துகொண்டு அப்பா உள்ளே நுழைந்தால் நம்முடைய கதி என்ன ஆகும்?... நல்லவேளையாக அறையின் கதவுக்குப் பக்கத்தில் பெரிய அல மாரி இருப்பதும் நம்முடைய 'நல்வினைப்பயன்' என்றுதான் கூற வேண்டும்...அப்பா இந்த அறைக்குள் நுழைந்தால், அது பணம் எடுப்பதற்காகத்தான் இருக்கும்! பணத்தை எடுக்கும்போது அப்பா நான் மறைந்து கொண்டிருக்கும் அலமாரியின் பக்க மாகத் தம் முதுகைத் திருப்பிக் கொள்ளத்தான் செய்வார்? அந்த மாதிரி அவர் இந்தப் பக்கம் திரும்பாமலே இருப்பதற்கு எல்லாம் வல்ல இறைவன்தான் துணைசெய்யவேண்டும்!

'அவர் உள்ளே நுழைந்து பணப்பையை எடுக்கும் சமயம் பார்த்துத் திறந்திருக்கும் கதவு வழியாகப் பூனை மாதிரி தப்பி யோட வேண்டியதுதான்! தப்பியதும் நேரே மாடிக்குப் போய் விட வேண்டியது, ஒன்றும் தெரியாத அப்பாவி மாதிரி!...நேற் றும் அதற்கு முந்திய தினமும் அப்பா இந்த அறையின் கதவைத் திறக்காமலே இருந்து விட்டாரே, அதுமாதிரி இன்னும் இரண்டு நாட்கள் வரை இந்த அறையைத் திறக்க வேண்டிய அவசியமே அவருக்கு ஏற்படாமல் போய்விட்டால்?...ஐயயோ! அப்புறம் நம்மைக் காணுமல்...நிச்சயம் அவருக்குப் பாதி ராத்திரி வேளை யில் தம்முடைய பண அறையின் கதவு திறந்து கிடந்ததன் புதிர் விளங்கிவிடும்! அப்புறம்? அப்புறம் என்ன? விஷயத்தை அப்பா ஊகித்துக்கொண்டு விடுவார்! 'தடியடி உற்சவம்' நடை பெறும்!...கடவுளே! இந்த ஒரு தடவை மட்டும் எப்படியாவது என்னைக் காப்பாற்றி விடு! இனி இந்தத் திருட்டு வேலைக்கே போவதில்லை! இது உண்மை!'

அப்போது ரமணிக்கு ஏற்பட்ட 'கடவுள் பக்தி' கண்ணப்ப நாயனுருக்குக் கூட ஏற்பட்டிருந்திருக்காதென்று உறுதியாய்ச் சொல்லலாம். 'கஷ்டம் வரும்போதுமட்டும் கடவுளை நினைக் கிறோம். எப்போதுமே கடவுளை நினைத்துக் கொண்டிருந்தால் கஷ்டமே வராது' என்ற ராஜாஜியின் பொன் மொழி ரமணிக்குத் தெரிந்துதான் இருந்தது. தெரிந்து என்ன பயன்? அந்தத் திருமொழியைச் செயலிலும் கடைப்பிடித்திருந்தால் 'பணம் திருடுவது' என்பதைப் பற்றி அவன் கனவிலும் நினைத் திருக்க மாட்டானே!

'இந்த ஒரு தடவை மட்டும் தப்பித்துக்கொண்டு விட்டால், இனிமேல் இந்தத் திருட்டுத் தொழிலை ஏறெடுத்தும் பார்ப்ப தில்லை. இத்தனை நாட்களாகச் சொல்லியிருக்கும் எத்தனையோ பொய்களுக்கும், செய்திருக்கும் எத்தனையோ சில்லறைத் திருட் டுத்தனங்களுக்கும் பிராயச்சித்தம் செய்யும் முறையில், இனி உண்மையும் நன்னடத்தையும் நிறைந்த புது வாழ்வைத் தொடங்கி விடுகிறேன். கடவுளே...!'

பீரோவுக்குப் பின்புறம் ஒளிந்தவாறு 'கொட்டுக் கொட்' டென்று வெகு நேரம் வியர்வை ஆறுய்ப் பெருக உட்கார்ந்து கொண்டிருந்தான் ரமணி. அப்போது அவனுக்கு ஒரு நிமிடம் ஒரு யுகமாகக் கழிந்தது...'டாண், டாண்' என்று சுவரில் மாட்டி யிருந்த பெரிய கடிகாரம் ஐந்து தடவைகள் அடித்து விட்டு ஓய்ந்தது. பிறகு ஆறு, ஆறரை, ஏழு, ஏழரை, எட்டு—இப்படி நேரம் ஆக ஆக மணி அடித்துக் கொண்டிருந்தது.

"என்ன, மணி எட்டு அடித்தும், ரமணி இன்னும் கீழே இறங்கிவரக் காணோம்? மாடியில் போய்ப் பார், வனஜா! நேற்று

மாதிரி பாடம் படிக்கிறானே, என்னவோ! படித்தது போது மென்று கீழே காபி சாப்பிடக் கூட்டிக்கொண்டு வா" என்று ராமசாமி இரைந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தது ரமணி யின் செவிகளில் நன்றாய் விழுந்தது.

தொடர்ந்தாற்போல, 'படிப்பில் ரமணிக்கு அக்கறை வந்து விட்டது. ஹூம்! இந்த அக்கறை நீடித்தால் அவனுக்கும் நல்லது; எனக்கும் நல்லது!' என்று ராமசாமி கவலையும் மகிழ்ச்சியும் கலந்த குரலில் மெதுவாக வாய்விட்டுக் கூறியதும் ரமணிக்குத் தெளிவாய்க் கேட்டது.

'படிப்பில் எனக்கு அக்கறை வந்துவிட்டதாக எண்ணி அகமகிழ்ந்திருக்கும் அப்பாவின் உள்ளம் உண்மையை அறிந் தால் எப்பேர்ப்பட்ட ஏமாற்றமடையும்! ...வனஜா வேறு மாடிக்குப் போயிருக்கிறாளே!... அட, கடவுளே!' என்று அறைக்குள் அடைபட்டிருக்கும் ரமணி நினைத்துக் கலங் கினான்.

சில வினாடிகளுக்கெல்லாம் மாடியிலிருந்து திரும்பிவந்த வனஜா, "அப்பா! அண்ணா மாடியில் இல்லை. படுக்கை விரித்த படியே இருக்கிறது. ஒருவேளை ஆற்றுக்குக் குளிக்கப் போயிருப் பானோ, என்னவோ?" என்றாள் ராமசாமியிடம்.

"அதெப்படி ஆற்றுக்குப் போயிருக்க முடியும்? நான்தான் ரேழியே கதியாய்க் கிடக்கிறேனே! என்னைத் தாண்டிக்கொண்டு தானே அவன் வெளியே போக முடியும்?.........ஆற்றிலே காலை வேளையில் குளிக்கும் நல்ல பழக்கம்தான் அந்தப் பயலிடம் கிடையாதே! 'ஆடிக்கொரு தடவை; அமாவாசைக்கு ஒரு தடவை' என்றுதானே அவன் குளிப்பது வழக்கம்?...சரி... எதற்கும் ஆற்றில் போய்ப் பார்" என்றார் ராமசாமி.

சிறிது நேரத்துக்குள் ஆற்றுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்த வனஜா, 'அங்கும் ரமணி இல்லை' என்பதைத் தெரிவித் தாள். ரமணி போகக்கூடிய நண்பர்கள் வீடுகளுக்கும், இன்னும் மற்ற இடங்களுக்கும் வனஜாவை உடனே அனுப்பிப் பார்த்து வரச் சொன்னார், ராமசாமி. சுமார் ஒன்பது மணிக்குத் திரும்பி வந்த வனஜா, 'எங்குமே ரமணி இல்லை' என்பதை அவரிடம் தெரிவித்தாள்.

"காபிகூடக் குடிக்காமல் எங்கே தொலைந்து விட்டான் இந்த விடியற்காலையில்?" என்று அம்மா விசாலம் அங்கலாய்த்துக் கொண்டாள். நேரம் செல்லச் செல்ல ராமசாமிக்கு வீட்டில் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. வனஜாவின் கலவரமும் அதி கரித்தது. விசாலத்தின் பெற்ற மனமோ, விவரிக்க இயலாத மனவேதனையில் மூழ்கித் தத்தளித்தது.

'எங்கேயாவது ஓடிப்போயிருப்பானோ? எதற்காக ஓட்

வேண்டும்?......பரீட்சையில் தவறியிருந்தாலாவது அப்படி நினைக்க இடமுண்டு. ரமணிக்கு இன்னும் பரீட்சையே தொடங்கவில்லையே!'...மாடிக்குத் தாமே சென்று பார்த்தார் ராமசாமி. படுக்கை சுருட்டப்படாது விரித்தவாறே கிடந்தது; அவனுடைய புத்தகங்களை எல்லாம் எடுத்து உதறினர் ராமசாமி. 'ஓடிப்போயிருக்கும் பட்சத்தில் ஏதாவது கடிதம் வைத்து விட்டுப் போயிருக்கமாட்டானு?' என்ற எண்ணம் அவருக்கு!

ஒவ்வொரு புத்தமாகப் பிரித்து உதறிக்கொண்டே வரும் போது கணக்கு நோட்டிலிருந்த ஒரு பத்துரூபாய் நோட்டும், ஓர் ஐந்து ரூபாய் நோட்டும் ராமசாமியின் கவனத்தைக் கவர்ந்தன. 'இந்தப் பயலுக்கு ஏது பதினைந்து ரூபாய்? ஹூம்!' என்று அவர் பல்லைக் கடித்தார்.

அருகிலே நின்றபடி இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த வனஜா, "அப்பா, இந்தப் பதினைந்து ரூபாயும் கணபதி, ராமு இவர்களுடைய சம்பளப் பணம். தங்களிடமிருந்தால் தொலைந்து போய்விடும் என்று நினைத்து அண்ணுவிடம் அவர்கள் கொடுத்துப் பத்திரமாக வைத்திருக்கச் சொன்னுர்கள். அந்தப் பணந்தான் இது!" என்றுள்.

வனஜா கூறியது உண்மைதான். ஆனுல், அந்தப் பணத்தைத் தன் நண்பர்களிடம் அவன் எப்போதோ திருப்பிக் கொடுத்து விட்டான் என்பதும், கணக்கு நோட்டிலிருந்தது அவனுல் திருடப்பட்ட பணம் என்பதும் அவளுக்குத் தெரியாது. ரூபாய் நோட்டுக்களைக் கணக்கு நோட்டிலேயே வைத்துவிட்டுப் பெருமூச்சுடன் கீழே இறங்கி வந்தார் ராமசாமி.

"மணி பத்தேமுக்கால் ஆகிவிட்டது! இனிமேலும் தாமதிப்பதில் பயன் இல்லை. நான் போலீஸுக்கு போன் பண்ணிவிடப் போகிறேன்!" என்று ராமசாமி கவலையுடன் சொன்னதைக் கேட்டதும், ரமணியின் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

'நம்மீது உயிரையே வைத்திருக்கும் அப்பாவுக்கு வஞ்சகமல்லவா செய்துவிட்டோம்!' என்று நினைத்து மனம் உருகினுன். பீரோவுக்குப் பின்னுல் ஒரே நிலையில் இடுக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்ததால் அவனது கைகால்கள் மரத்துப்போய்க் குறுகுறுத்தன. 'ஐயோ, கடவுளே! பிறர் கண்ணில் படாமல் இந்த அறையிலிருந்து தப்பிவிடும் சந்தர்ப்பம் கிடைப்பதற்கு அருள் செய்! திருடிய பணத்தில் செலவு செய்தது போக மீதியுள்ள பதினைந்து ரூபாயை இன்னொரு நாள் இரவு அப்பாவின் பணப்பையிலேயே வைத்து விடுகிறேன். இனிமேல் திருடுவதைப் பற்றிக் கனவுகூடக் காண்பதில்லை!' என்று பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தான்.

"மாதம் பிறந்து பத்துத் தேதியாகி விட்டதே சாமி பால்

பணம் தருகிறீர்களா?" என்று பால்காரப் பங்காருசாமி கேட்பது ரமணிக்கு அப்போது நன்ருய்க் கேட்டது. இடுப்பி லிருந்த வட்டமான டப்பியைத் திறந்து கொண்டே, "உனக்கு இருபது ரூபாய் தானே தரவேண்டும்?" என்று ராமசாமி கேட்டார். அப்படி அவர் கேட்டதும் ரமணியின் காதில் நன்ருக விழுந்தது.

"பதினைந்து ரூபாய்தான் இருக்கிறது. இரு, பெட்டியி லிருந்து எடுத்துத் தருகிறேன்" என்றபடியே ரேழியறையின் கதவைத் திறந்தார் ராமசாமி. ரமணியின் இருதயத் துடிப்பின் ஒலி அதிகரித்துக் கொண்டே போயிற்று. பீரோவுக்குப் பின்புறம் ஒண்டிக்கொண்டிருந்த ரமணி சத்தமில்லாமல் அறையை விட்டு ஓடத் தயாராக எழுந்து நின்று கொண்டான். கடவுள் அவன் பக்கம் இருந்தார்! இல்லாவிட்டால், ராமசாமி பீரோவின் பக்கம் திரும்பாமலே பணப்பையைத் திறக்க முற்பட்டிருப்பாரா?

சரேலென்று அறையை விட்டு வெளியேறிய ரமணி தலை தெறிக்கத் தெருவில் ஓட்டம் பிடித்தான்! நல்லவேளை, அப்போது அவன் அம்மாவோ அல்லது வனஜாவோ பார்க்கவில்லை! ஆனுல், ரமணி அறையிலிருந்து ஓட்டம் பிடித்ததைத் திண்ணையில் நின்றுகொண்டிருந்த பால்காரப் பங்காருசாமி மட்டும் கவனித்து விட்டார். ரமணியைத் தேடிக்கொண்டிருக்கும் செய்தி அவருக்கு இன்னும் தெரியாது. தவிர, பூட்டியிருந்த கதவைத்தான் ராமசாமி திறந்தார் என்பதையும் அவர் கவனிக்கவில்லை. இதனுல், ரமணி அந்த அறையிலிருந்து வெளிப்பட்டதைப் பற்றிப் பங்காருசாமி பிரமாதமாக எண்ண இடம் இல்லாமற் போயிற்று.

...பணப்பையில் ஏராளமான பத்து ரூபாய் நோட்டுக்கள் இருந்ததால் இரண்டு நோட்டுக்கள் குறைவாக இருப்பது உடனே ராமசாமியின் கண்களுக்குத் தெரியவில்லை. வெளியே வந்த ராமசாமி, பால்காரரின் கையில் பணத்தைக் கொடுத்து விட்டு, "எங்கள் வீட்டு ரமணியை எங்கேயாவது பார்த்தாயா?" என்று கேட்டார்.

"என்ன சாமி! உங்கள் அறையிலிருந்து இப்போதுதானே வெளியே ஓடியது தம்பி!" என்ருர் பங்காருசாமி, வாயைப் பிளந்தபடி.

"என்னது!" என்று கூவிய ராமசாமிக்கு உடனே முதல் நாளிரவு தமது அறைக்கதவு பூட்டப்படாமல் கிடந்தது ஞாபகம் வந்தது. பரபரப்புடன் அறைக்குள் நுழைந்து பணத்தை எண்ணினுர். இருபது ரூபாய் குறைந்திருந்தது. பீரோவுக்குப் பின்னுல், ரமணியின் 'டார்ச்' விளக்குக் கிடந்தது. உடனே

தம் வேலையாள் முனிசாமியைக் கூப்பிட்டு, ரமணி ஓடிய பாதையில் அவனைத் தொடர்ந்து சென்று பிடித்துவரும்படி கட்டளையிட்டார் ராமசாமி. அப்போது அவரது மீசை — அதாவது மீசை இருக்கவேண்டிய மேல் உதட்டின் தசைப்பகுதி— துடியாய்த் துடித்தது!

'கண்மண்' தெரியாமல் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்த ரமணி, யாரோ தன்னைத் துரத்திக்கொண்டு ஓடி வருவதைக் கண்டதும், பெரிதும் திடுக்கிட்டான். வருவது முனிசாமிதான் என்பதை யூகிக்க அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. ரமணியின் வேகம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டிருந்தது. முனிசாமியும் சளைக்காமல் துரத்திக்கொண்டே இருந்தான்; சிட்டுக் குருவியாய்ப் பறந்து கொண்டிருந்த ரமணியைப் பிடித்தே விடுவது என்ற உத்தேசத்துடன், கால்கள் கெஞ்சுவதையும் பொருட்படுத்தாமல் காற்றாய்ப் பறந்துகொண்டிருந்தான் அவன்!

செய்தி கேளுங்கள்!

அரசாங்கச் சின்னத்துக்குப் பரிசு !

ஆந்திர மாகாணத்துக்கு நல்ல விதமாக ஒரு சின்னம் பொறித்துக் கொடுத்ததற்காக சூரிசெட்டி ஆஞ்சநேயலு என்பவருக்கு ஆந்திர அரசாங்கத்தார் ரூ. 501 பரிசளித்தனர்.

உழவு மாணிக்கம்

இராமநாதபுரத்தில் சராசரி ஏக்கர் ஒன்றுக்கு மூவாயிரம் பவுண்டுக்குமேல் விளைவதில்லையாம். அங்கே ஒரே ஏக்கரில் 11285 பவுண்டு நெல் விளைவித்ததற்காக முதற் பரிசாக ரூ. 500ம், ஒரு தங்கப் பதக்கமும் சென்னை கவர்னரால் பரிசளிக்கப்பட்டன. ராஜாஜியும் அவருடைய திறமையைப் பாராட்டி 'உழவு மாணிக்கம்' என்ற பட்டத்தைக் கொடுத்துள்ளார்.

சைகிள் சாம்பியன் !

அக்டோபர் 2-ந் தேதியிலிருந்து டிஸம்பர் 12-ந் தேதி வரையில் சைகிளிலேயே 1700 மைல் பிரயாணம் செய்தாராம், கல்கத்தாவைச் சேர்ந்த சலன் பட்டாச்சார் எனும் இளைஞர்! இவர், 1954 பிப்ரவரியில் உலகத்தையே சைகிள் மூலம் சுற்றி வரத் திட்டமிட்டுள்ளாராம்!

மாணவனுக்கு ரூ. 300 !

1953, மார்ச் S.S.L.C, தேர்தலில் தமிழ்ப் பாடத்தில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்ற, கரூர் நகரசபை ஹைஸ்கூல் மாணவன் வி. கிருஷ்ண மூர்த்திக்கு, திருப்பனந்தாள் காசி மடாதிபதி, நினைவுப் பரிசாக ரூபாய் 300 வழங்கினார்.

ரயிலில் ஓட்டல் !

பம்பாய் ரயில் பிரயாணிகளின் வசதியை உத்தேசித்து, பம்பாய் ரெயிலில் புதிய வசதியுடன் கூடிய ஓர் ஓட்டல் வண்டியும் பிணைக்கப்பட்டுள்ளதாம். இந்த ஓட்டல் வண்டி, பம்பாய் ரயில் தொழிற்சாலையிலேயே செய்யப்பட்டதாம்! இவ் வண்டியில் வானொலி வசதியும் உண்டாம்!

வகுப்பிலே கிளர்ச்சி செய்த

ஆங்கிலேயரின் ஆணவம்!

அப்போது கல்கத்தா பிரஸிடென்ஸி கல்லூரியில், சி. எப். ஓட்டன் என்ற வெள்ளையர் சரித்திரப் பேராசிரியராக இருந்தார். அவர் எப்போதும் இந்தியர்களைப் பற்றி இழிவாகவே பேசுவார்.

ஒரு நாள், பாடம் நடத்திக் கொண்டிருக்கையில், வங்காளிகளைப் பற்றி மிகவும் கேவலமாகப் பேசி விட்டார், அந்த ஓட்டன். அவர் பேச்சைக் கேட்ட மாணவர்கள் ஆத்திரங் கொண்டனர். அவர் இந்த மாதிரி பேசுவது முறையல்ல என்றும் எடுத்துக் கூறி எச்சரித்தனர்; பயனில்லை.

அவர் திரும்பத்திரும்ப வங்காளிகளைக் கேவலப்படுத்தியே பேசிக் கொண்டிருந்தார். அவர் பேச்சைக் கேட்கக் கேட்க மாணவர்களின் ஆத்திரம் அதிகமாகியது. உடனே அவர்கள் கொதித்தெழுந்தனர். கட்டுப்பாடாக எல்லோரும் வகுப்பைவிட்டு வெளியேறி விட்டனர்!

மாணவர்களின் கிளர்ச்சியைக் கண்டு ஓட்டன் திடுக்கிட்டார். கல்லூரி அதிகாரிகள் திகைத்தனர். கடைசியில், இந்தக் கிளர்ச்சியை ஆரம்பித்தவர்களில் மிகவும் முக்கிய மானவர்கள் யார் யார் என்று பார்த்தனர். அவர்களையெல்லாம் கல்லூரியை விட்டே நீக்கிவிட்டனர். அத்துடன் விடவில்லை; இரண்டு ஆண்டுகளுக்கு வேறு எந்தக் கல்லூரியிலும் அவர்கள் சேர முடியாதபடியும் செய்து விட்டனர்!

அப்படி நீக்கப்பட்ட மாணவர்களில் நமக்கு மிகவும் வேண்டிய ஒருவரும் இருந்தார். அவர்தான் இன்று நேதாஜி என்று போற்றப்படும் சுபாஷ் சந்திர போஸ்!

தாம் செய்தது தவறு என்று கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தால், திரும்பவும் சுபாஷைக் கல்லூரியில் சேர்த்துக் கொண்டிருந்திருப்பார்கள். சுபாஷுக்குப் படிப்பில் அதிகமான ஆர்வமும் அக்கறையும் இருந்தும் அவர் அப்படிச் செய்ய விரும்பவில்லை. காரணம், "ஒரு வெள்ளையர் நம் நாட்டவரைப் பற்றிக் கேவலமாக நம்மிடமே கூறுகிறார். இது எவ்வளவு மோசமானது! நியாய மற்றது! இதைக் கண்டிக்கவே நாம் கிளர்ச்சி செய்தோம். இதில் தவறு இல்லை. நாம் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை" என்றார் சுபாஷ்.

துறவு வேண்டாம்!

கல்லூரிப் படிப்பை நிறுத்தியிருந்த காலத்தில், சுபாஷ் பல மத சம்பந்தமான புத்தகங்களைப் படித்தார். இராமகிருஷ்ண பரமஹம்சருடைய உபதேசங்களையும், மற்றும் சில மகான்களின் போதனைகளையும் ஆர்வமுடன் படிக்கலானார்.

இப்படி அவர் அதிகமாகப் படிக்கப் படிக்க அவர் மனத்திலே ஓர் எண்ணம் உதித்தது. 'நாமும் ஒரு

மாணவர்!

துறவியாக வேண்டும்' என்ற எண்ணம்தான் அது. அந்த எண்ணத்தைச் செய்கையிலும் அவர் காட்ட ஆரம்பித்துவிட்டார்!

அன்று இரவு நேரம். அப்பா அம்மா எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால், சுபாஷ் மட்டும் தூங்கவில்லை. மெதுவாகப் படுக்கையைவிட்டு எழுந்தார்; பூனை போல் நடந்து போய்க் கதவைத் திறந்தார்; வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார்!

கயா, காசி, ஹரித்துவாரம், மதுரா, பிருந்தாவனம் முதலிய புண்ணிய ஸ்தலங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுக் கடைசியாக இமாலயத்திற்குச் சென்றார்.

அங்கு தமக்கு எற்றபடி ஒரு குரு அகப்படுவாரா என்று தேடி அலைந்தார். அப்போது, சில சந்நியாசிகளை அவர் சந்தித்தார். அவர்களின் நடத்தையும், பேச்சும் சுபாஷுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. கஞ்சாப் பிடித்துக் கொண்டு கண்டபடி பாடி ஆடும் சில சந்நியாசிகளையும் அவர் பார்த்தார். உடனே, அவருக்கு அவர்கள் மீது மட்டும் வெறுப்பு எற்படவில்லை; சந்நியாசி ஆகவேண்டும் என்ற தம் எண்ணத்தின் மீதும் வெறுப்பு எற்பட்டுவிட்டது! எமாற்றத்துடன் அவர் வீடு திரும்பலானார்.

வீட்டைவிட்டு வந்தது முதல் சரியான உணவோ, உறக்கமோ இல்லாததால், பாவம், சுபாஷ் மிகவும் மெலிந்து விட்டார்.





வீடு நோக்கி வரும் வழியில், சுபாஷின் நிலையை அறிந்தார் ஒரு செல்வந்தர். உடனே, அவர் கட்டாக்கிலிருந்த சுபாஷின் அப்பா ஜானகிநாத போஸுக்குத் தந்தி கொடுத்து விஷயத்தைத் தெரிவித்தார்.

மகனைக் காணாது பல இடங்களில் சுற்றி அலைந்து மனம் ஒடிந்து போயிருந்த ஜானகிநாத போஸ் தந்தியைக் கண்டதும் ஓடோடி வந்தார்; மகனைக் கண்டார்; மனம் குளிர்ந்தார்; வாஞ்சையுடன் அழைத்துச் சென்றார்.

ஐ. சி. எஸ். படித்தும்...

சுபாஷ் சீமைக்குச் சென்றார், ஐ.சி.எஸ். படிப்பதற்காக. 1920-ம் வருஷம் ஐ. சி. எஸ். பரீட்சையில் நான்காவது மாணவராகத் தேறினார். 23-வது வயதிலேயே ஐ. சி. எஸ். பட்டம் பெற்றுவிட்டார்!

இந்தக் காலத்தில் எவ்வளவு பெரிய அதிகாரியாயிருந்தாலும், நாம் அவரைப் பிரமாதமாகக் கருதுவதில்லை. ஆனால், அந்தக் காலத்தில் ஐ. ஸி. எஸ். என்றாலே 'ஆண்டவனுக்கு அடுத்தபடி' என்றுதான் மக்கள் கருதினர்.

ஆனால், அவ்வளவு பெரிய பதவியை நம் சுபாஷ் மதிக்கவில்லை. பதவியைக் காட்டிலும், நாட்டின் விடுதலையே முக்கியமானது என்று நினைத்தார்.

சீமையிலிருந்து பம்பாய் வந்து இறங்கியதுமே, அவர் நாட்டு நிலைமையை நன்குணர்ந்துகொண்டார். அப்போதுதான் காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்துத் தீவிரமாக நடத்திக்கொண்டிருந்தார். மக்களெல்லாம் திரண்டெழுந்து விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்தனர். ஆங்கிலேயரின் அடக்கு முறையையும், மக்களின் தீவிரத்தையும் கண்ட சுபாஷ் தாம் ஓர் ஐ. ஸி. எஸ். என்பதை மறந்தார். தமக்கு எவ்வளவு பெரிய பெரிய பதவிகளெல்லாம் காத்திருக்கின்றன என்பதையும் அவர் பார்க்கவில்லை. 'விடுதலைப் போரில் நானும் ஒரு வீரனாவேன்' என்று கூறி, காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டுவிட்டார்.

மணிக்கட்டுப் பிசகியது!

ஒரு சமயம், சுபாஷ் அலிப்பூர் சிறையில் இருந்தார். அவருடன் பல அரசியல் கைதிகளும் அடைபட்டுக் கிடந்தனர். அப்போது சுதந்திர தினம் வந்தது.

நாடெங்கும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. சிறையிலும் சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று சுபாஷும், அவருடன் இருந்த மற்ற அரசியல் கைதிகளும் தீர்மானித்தனர். தீர்

மானித்தபடியே சுதந்திர தினத் தன்று சிறைக்குள் மூவர்ணக்கொடியைப் பறக்கவிட்டு மிகவும் விமரிசையாகக் கொண்டாடிவிட்டனர்!

இதையறிந்த சிறையதிகாரிகள் திடுக்கிட்டனர். "இவர்களுக்கு எப்படி மூவர்ணக் கொடி கிடைத்தது! இது நமக்குப் பெரும் அவமானமாக இருக்கிறதே!" என்று நினைத்தனர். உடனே, அவர்கள் விசாரணை நடத்தினர். சுபாஷ் போஸ்தான் இதற்குக் காரணமானவர் என்று நினைத்தனர். ஆனால், கைதிகள் அவரைக் காட்டிக் கொடுக்கவில்லை. எவ்வளவோ நிர்ப்பந்தப் படுத்தியும், உண்மையைக் கூற மறுத்துவிட்டனர். கைதிகளின் கட்டுப்பாட்டைக் கண்டு அதிகாரிகள் ஆத்திரம் கொண்டனர். பழிவாங்கத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தனர்.

ஒருநாள், அதிகாரிகள் அங்கிருந்த கைதிகளிடம் அவமரியாதையாக நடந்துகொண்டனர். இதனால் கைதிகள் கொதித்தெழுந்தனர். இருசாராருக்கும் சண்டை மூண்டது. அதிகாரிகளால் சமாளிக்க முடியவில்லை. கடைசியில் இராணுவத்தை உதவிக்கு அழைத்தனர்.

இராணுவத்தினர் கைதிகளை மிருகங்களை விடக் கேவலமாக நடத்தினர். மாடியிலிருந்து கூடச் சில கைதிகளைக் கீழே உருட்டிவிட்டனர். அப்படி உருட்டி விழுத்தப் பட்டவர்களில் நம் சுபாஷும் ஒருவர். விழும்போது அவருடைய மணிக்கட்டுப் பிசகிவிட்டது! மூன்று மணி நேரம் மூர்ச்சையாகிக் கிடந்தார். காய்ச்சலும் வந்துவிட்டது. பல மாதங்கள் சென்ற பிறகே அவரது உடல் சீரடைந்தது

ஹிட்லருடன் சிரித்தார்!

இந்தியாவிலிருந்து மாயமாய் மறைந்த சுபாஷ், ஜெர்மனிக்குச் சென்றார். அங்கு ஹிட்லரைக் கண்டார். அவருடன் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது ஹிட்லர், "இந்தியாவில் மேற்கத்திய நாகரிகத்தைப் புகுத்தியவர்களே பிரிட்டிஷ்காரர் தானும்! உங்களுக்கு நடக்கக் கற்றுக் கொடுத்ததுகூட அவர்கள் தானும்!" என்றார்.

"என்ன! எங்களுக்கு நடக்கக் கற்றுக் கொடுத்தது பிரிட்டிஷாரா!" என்று சிறிது ஆத்திரத்துடன் கேட்டார், சுபாஷ்.

உடனே, ஹிட்லர், "அப்படித் தான் இருக்கட்டுமே! பிரிட்டிஷார் உங்களுக்கு நடக்கக் கற்றுக்கொடுத்தார்கள். இப்போது, நீங்கள் அவர்களுக்கு இந்தியாவை விட்டு மான் வேகத்தில் ஓடக் கற்றுக் கொடுங்களேன்!" என்றார்.

இதைக் கேட்டதும் சுபாஷ் சிரித்தார். ஹிட்லரும் சிரித்தார். அங்கிருந்த மற்றவர்களும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தனர்! ○

★ பங்களூர்

சாதாரணமாகப் பொழுது விடிவதற்குள் ரயில் பங்களூருக்குப் போய்விடும். அன்று நான் ஏறிய ரயில் அவ்வளவு சமர்த்தாகப் போகவில்லை. வழியில் ஓர் எருமைக் கன்றுக் குட்டியின் மேல் ஏறி, அதன் காரணமாக ஒரு மணி நேரம் கழித்தே பங்களூர் சென்றது.

அதுவும் ஒரு நன்மைக்கே. இல்லாவிட்டால் பங்களூருக்குப் பெயர் வந்த கதை எனக்குத் தெரிந்திராது அல்லவா!

வெளியே, ரயில் எஞ்சினின் அடியில் அகப்பட்டு அகால மரண மடைந்த கன்றை மெதுவாக எடுத்துக் கொண்டிருந்தார்கள். வண்டியின் உள்ளே தூக்கம் கலைந்து நான் தவித்துக் கொண்டிருந்தேன்.

"எங்கே, பங்களூருக்கா போகிறாய்?" என்று கேட்டார், என் வண்டியிலிருந்த ஒரு கிழவர்.

"ஆமாம்" என்று தலையசைத்தேன்.

"எதற்காகப் போகிறாய்?"

"சும்மாதான்" என்றேன். அந்தக் கிழவர் இம்மாதிரி கேள்வி கேட்டது எனக்குப் பிடிக்கவில்லை. நான் தூங்குவதுபோல் பாசாங்கு செய்தேன். அவர் விடவில்லை. ரொம்பப் பேச்சுக் கொடுத்தார். அதன் நடுவே பங்களூருக்குப் பெயர் வந்த கதையையும் சொன்னார்.

வெகு காலத்துக்கு முன் வீர பல்லன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் வேட்டைப் பிரியன். ஒரு சமயம் வேட்டையாடும் பொழுது அவன் தன் வீரர்களை விட்டுப் பிரிந்துவிட்டான். மாலை கழிந்து இருட்டியும் விட்டது.



இது என்ன கூட்டம்? பங்களூர் ரஸ்ஸல் 'மார்க்கெட்டில்' நடைபெறும் 'மார்க்கெட் ஷோ'வைக் காணத்தான் இப்படிக் கூடுகிறார்கள்.

விஜயம் ★

எம். எஸ். ஸ்ரீநிவாஸன்

வழி தெரியாமல் காட்டில் நெடு நேரம் அலைந்த அரசன் கடைசியில் ஒரு சிறு குடிசையைக் கண்டான்.

குடிசைக்குள் ஒரு தள்ளாத கிழவி மட்டும் குடியிருந்தாள். வீரபல்லன் அன்றிரவு குடிசையில் தங்க அனுமதி கேட்டான். தங்குவதற்கு இடம் கிடைத்ததும் அரசனுக்குத் தன் பசி நினைவு வந்தது. "பாட்டி, ரொம்பப் பசியாயிருக்கிறது. சாப்பிட ஏதாவது தா" என்று கேட்டான்.

பாட்டியிடம் சமைத்துப் போட ஒன்றும் இல்லை. 'பெங்கலு' என்ற ஒருவகை அவரைக் காய் கொஞ்சம் இருந்தது. அதை நீரில் நன்றாய்க் கொதிக்க வைத்து, பக்குவப் படுத்திக் கொடுத்தாள். அறுசுவை உண்டு களித்த மன்னன் பசிநேரத்தில் அந்தஎளிய உணவை மகிழ்வோடு உண்டான். தன் குதிரைக்குப் கொடுத்தான். கிழவியைக் கேட்டு வழி தெரிந்து கொண்டு மறுநாள் அரண்மனைக்குச் சென்றான்.

கிழவியின் குடிசை ஒரு கிராமத்தின் ஒரு கோடி. அரசன் பெங்கலு தின்ற ஊர் ஆதலால் அது நாளடைவில் பெங்கலூரு ஆகிவிட்டது. சிறிது சிறிதாக நிறைய மக்கள் இங்கே குடிவரத் தொடங்கினார்கள்.

இப்படி அந்தக் கிழவர் சொன்னார். அவர் சொன்ன கதையில் எவ்வளவு தூரம் சரித்திரம், எவ்வளவு தூரம் கற்பனை என்று எனக்குத் தெரியாது.

என் ஒன்றுவிட்ட அண்ணன் ஒருவனுடைய ஒன்று



20 விதத் தொழில்களைப் போதிக்கும் ஸ்ரீ ஜயசாமராஜா தொழிற் கல்வி நிலையம்.

பறவைகளைப் போலவும், படம் எடுத்த பாம்பைப் போலவும் வெட்டி விடப்பட்ட செடிகளைக் காணலாம், இந்த 'லால் பாக்'கில்.

விட்ட அத்தான் என்னை ஸ்டேஷனில் வரவேற்றான். பங்களூரிலிருந்தபோது அவன் தான் என் வழிகாட்டியாய் இருந்தான்.

பங்களூரில் எங்கு பார்த்தாலும் பெரிய பெரிய பார்க்குகளும், பெரிய பெரிய தோட்டங்களும், பெரிய பெரிய மைதானங்களும், பெரிய பெரிய கட்டிடங்களும் இருக்கின்றன.

“இது என்ன?” “இந்தக் கட்டிடம் என்ன?” “இதன் பேர் என்ன?” என்று நான் ஓயாமல் என் அத்தானைக் கேட்ட வண்ணம் இருந்தேன்.

இருவரும் இரண்டு நல்ல சைக்கிள்களில் ஏறி ஊரைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தோம். பங்களூர் சாலைகள் மிக நன்றாய் அமைக்கப்பட்டவை. அங்கே டிராம் தண்டவாளங்களும் இல்லை. ஆகவே சைக்கிள் ஓட்டுவது அங்கே ஓர் இன்ப அனுபவம்.

பங்களூரில் ஒரு கோட்டை இருக்கிறது. இந்த நகரை அமைத்த கெம்ப கௌடா என்ற மன்னன் முதலில் மண்ணால் ஒரு கோட்டையைக் கட்டினான். பிறகு ஹைதர் அலி, அதைப் புதுப்பித்துக் கட்டினான். கோட்டையின் சுற்றுப்புறத்தில் வாணி விலாஸ் ஆஸ்பத்திரி, விக்டோரியா பிரசவ ஆஸ்பத்திரி, மிண்டோ கண் ஆஸ்பத்திரி என்ற மூன்று பெரிய ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. நல்ல வேளையாக நான் அவற்றில் ஒன்றில் கூட நுழையும்படி நேரவில்லை!

1898-ல் பங்களூரில் ப்ளேக் நோய் பரவிற்றாம். அப்போது பலர் அந்தக் கொடிய நோயிலிருந்து தப்புவதற்காக நகரிலிருந்து சிறிது தூரத்தில் பஸவங்குடி, மல்லேஸ்வரம் என்ற பேட்டைகளை ஏற்படுத்தி அங்கே குடியேறினார்கள். பிறகு பங்களூருக்கும் பஸவங்குடிக்கும் இடையிலிருந்த தூரத்திலும் மக்கள் வீடு கட்டவே, பஸவங்குடி, மல்லேஸ்வரம்

முதலிய பகுதிகள் பங்களூ ரோடு சேர்ந்துவிட்டன.

இதுபோலவே 1917-18-ல் பங்களூரில் பரவிய 'இன்புளூ வன்ஸா' சுரத்தால் விஸ் வேஸ்வரபுரம் என்ற பேட் டை எழுந்தது. அதுவும் இப் போது பங்களூரோடு சேர்ந்து விட்டது. இவ்வாறு 'பெங்க ளூரு' வளர்ந்து வளர்ந்து இன்று இருபத்தாறு சதுர மைல் உள்ள பங்களூர் ஆகி விட்டது. இனிமேல், எவ்வித மான நோயும் பரவாமலே பங்க ளூரின் விஸ்தீரணம் பரவி விடும் என்பதில் சந்தேக மில்லை!

பஸவங்குடி போன்ற சில பேட்டைகளைப் பார்க்கும் போது சென்னையிலுள்ள மாம் பலம், நுங்கம்பாக்கம் தெருக் களின் நினைவு வரும். பங்களூர் கன்னடப் பிரதேசம்தான். ஆனாலும், அங்கே அநேகமாக எல்லாருக்கும் தமிழ் தெரிந் திருக்கிறது. பங்களூரைச் சுற்றிப் பார்ப்ப தற்கு கன்னடம் தெரிந்திருக்க வேண்டிய அவ சியமில்லை! பங் களூரிலுள்ள லால்பர்க் என்ற தோட்டம் மிக வும் புகழ் பெற் றது. ஹைதர் அலி நிர்மாணி த்து, அவன் மகன் திப்பு சுல்தானின் மேற் பார்வையில் வளர்க்கப்பட் டது இது என்று சொல் கிறார்கள். இதனுள்ளே வகை வகையான மரங்கள் உள் ளன. விதவிதமாக பூச்செடி களும், கொடிகளும் வளர்த் திருக்கிறார்கள். லண்டனில் உள்ள Crystal Palace என்ற அமைப்பின் பாணியில் இங்கே கண்ணாடி மண்டபம் ஒன்று கட்டியிருக்கிறார்கள். இந்த மண்டபத்தில் சில வருஷங் களுக்கு முன் அகில இந்திய காங்கிரஸ் கூட்டம் நடைபெற் றது. தோட்டத்தையும் அதி லுள்ள பாதைகளையும் வெகு சுத்தமாக வைத்திருக்கிறார் கள். இங்கே குப்பை என்பதே கிடையாது என்று சொல்ல லாம்.

லால்பாக்கின் ஒரு பக்கத் தில் பலவகைப் புறாக்களும், கோழி வகைகளும் கொண்ட

இதுவும் 'லால் பாக்'தான். கண்ணாடி மண்ட பத்திலிருந்து பார்த்தால் இப்படித்தான் தெரியும்.

பண்ணை ஒன்றை வைத்திருக்கிறார்கள். இயற்கை அழகு நிறைந்து விளங்கும் அந்த இடத்தை விட்டுவர எனக்கு மனமே இல்லை.

கப்பன் பார்க் (Cubbon Park) என்பது பங்களூரிலுள்ள மற்றொரு பெரிய தோட்டம். இப்போது இதற்கு ஸ்ரீ சாமராஜா பார்க் என்று பெயரிட்டிருக்கிறார்கள். அத்தோட்டத்தைச் சுற்றிப் பல அரசாங்கக் காரியாலயங்களும், கல்லூரிகளும் இருக்கின்றன. பகல் நேரத்தில் அத்தனை காரியாலயங்களில் உள்ளவர்களும் தோட்டத்தில் உலாவுவதற்கும், உணவருந்துவதற்கும் வருவார்கள். மாலை நேரத்தில் சென்னைக் கடற்கரையில் கூடுவதுபோல மக்கள் அங்கே கூடுகிறார்கள்.

கப்பன் பார்க்கில் மிக அழகாகச் செதுக்கப்பட்ட சலவைக் கல் சிலைகள் சில உள்ளன. அத்தோட்டத்தின் நடுவிலே சேஷாத்ரி நினைவு மண்டபம் என்ற கட்டிடம் இருக்கிறது. இதிலேதான் பங்களூர் பொது நூல் நிலையம் இருக்கிறது.

கப்பன் பார்க்குக்கு அருகே ஸ்ரீஜயசாமராஜா தொழில் கல்வி நிலையம் இருக்கிறது. இந்தியாவிலுள்ள சிறந்த தொழில் பள்ளிக்கூடங்களில் இதுவும் ஒன்று. இங்கு சுமார் ஆயிரம் மாணவர்கள் இருபது விதத் தொழில்களில் பயிற்சி பெறுகிறார்கள்.

பங்களூரில் உள்ள கார்ப்பரேஷன் நீச்சல் குளத்தில் ஒரு முறை நீந்தப் போனேன். அப்பப்பா! என்ன குளிர்! அதுவும் டிசம்பர் மாதக் குளிர்!

பங்களூரில் இரண்டு பெரிய மார்க்கெட்டுகள் உள்ளன. அவை சுகாதார முறையில் ஒழுங்காக நிறுவப்பட்டு, கார்ப்பரேஷனின் மேற்பார்வையில் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் சமயத்தில் அங்கு நடைபெறும் 'மார்க்கெட் ஷோ' ஒரு பெரிய திருவிழா மாதிரி இருக்கும். காய்கறி விற்கும் கடைக்காரர்கள் அதை மிக உற்சாகமாகக் கொண்டாடுவார்கள். மிகவும் பெரிய பூசணிக்காய் வைத்திருக்கும் கடைக்கு ஒரு பரிசு; மிகவும் உயர்ந்த தக்காளி வைத்திருப்பவருக்கு ஒரு பரிசு; மிக நீண்ட புடலங்காய் உள்ள கடைக்கு ஒரு பரிசு என்று பல பரிசுகள் வழங்குவார்கள்.

பங்களூரைப் பற்றி நினைக்கும்போது அங்கு நான் கழித்த முதல் இரவு நினைவு வருகிறது. உடம்பின்மேல் ஒரு பனியன் அணிந்து, அதன்மேல் சட்டை மாட்டிக்கொண்டிருந்தேன். குளிர் எடுக்கவே ஒரு 'ஸ்வெட்டர்' போட்டுக்கொண்டேன். அப்படியும் குளிர் தெரிந்தது. ஒரு கம்பளிக் கோட்டுப் போட்டுக்கொண்டேன். படுக்கையில் படுத்து ஒரு கம்பளிப் போர்வையை இழுத்துப் போர்த்தபடி, "அத்தான், குளிர்கிறது!" என்று கத்தினேன். ●

பளிங்கு மண்டபம்

ரெ. சி. தெய்வசிகாமணி

22-இலட்சிய வீரன்

ஓர் அம்மாள் தலைவிரி கோலமாக முன்னால் ஓடிவந்து கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து மற்றோர் அம்மாளும், ஒரு பெரியவரும் விரைந்து வந்தனர். அவர்கள் மூவர் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

முன்னால் ஓடிவந்த அம்மாள் மாதவனை நெருங்கினாள். "மாதவா! என் கண்ணே! என்னைப்பார். நான் யார் தெரிகிறதா?" என்று கலக்கத்துடன் கேட்டாள்.

மாதவன் மெதுவாகக் கண்விழித்துப் பார்த்தான். பார்த்ததும், "அம்மா!" என்று ஆவலுடன் கூறிக்கொண்டே எழுந்திருக்க முயன்றான்; முடியவில்லை.

பிறகு, "அது யார்? அப்பாவா! அழாதீர்கள் அப்பா. யாரும் அழாதீர்கள்!" என்று சொல்லிவிட்டுத் தலையைச் சற்று திருப்பிப் பார்த்தான். அந்தப் பக்கம் விம்மி விம்மி அழுதுகொண்டு நிற்கும் மற்றொரு அம்மாளைப் பார்த்ததும், "சித்தி!" என்றான், மாதவன்.

சித்தி உடனே அவன் அருகே சென்று அவன் தலையைக் கோதி விட்டாள். பிறகு, "மாதவா, உன் கஷ்டத்துக்கெல்லாம் மூலகாரணம் நான்தான். எனக்கு மன்னிப்பே கிடைக்காது. நான் மகாப் பாவி" என்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்க் கூறினாள்.

"சித்தி, அப்படிச் சொல்லாதே! உன்னால்தான் நான் ஓரளவு உலக அனுபவம் பெற முடிந்தது. உன்னால்தான் அருமை நண்பன் மனோஹர், அன்பான கடை முதலாளி எல்லோரும் கிடைத்தார்கள். சரி, நடந்ததை மறந்துவிடு சித்தி"

"ஆஹா! மாதவா, நீ பத்தரை மாற்றுத் தங்கம். உன்னை இந்தப் பாவி பரிதவிக்க வைத்து விட்டேன்..."

"சித்தி, பழைய கதையால் பயனில்லை" என்று கூறிவிட்டு, மனி

கைக் கடை முதலாளியை அருகிலே அழைத்தான் மாதவன்.

அவர் வந்தார்.

"ஐயா, எனக்கு வியாபார லாபத்தில் பங்கு தருவதாகச் சொன்னீர்களே, அது எவ்வளவு ரூபாய் வரும்?" என்று கேட்டான்.

"தம்பி, இந்த மாதம் முதல் தேதிதானே வருஷக் கணக்கு முடித்தோம்? சரியாக உனக்குத் தரவேண்டியது ரூபாய் ஐயாயிரத்துச் சொச்சம். அத்துடன் உன் பத்திரிகை ஏஜென்ஸியை, வேறு ஒருவர் பெயருக்கு மாற்றிவிட்டதில் கிடைத்த லாபம் எழுநூற்றைம்பது. எல்லாம் கிட்டத்தட்ட ஆறாயிரம் ரூபாய் வரும்"

"சரி, அதைத் தாங்கள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? குழந்தைகளுக்காக ஓர் இலவச வாசகசாலை ஏற்படுத்தி, அதில் நல்ல நல்ல புத்தகங்களை......"

"சரி, மாதவா. அப்படியே செய்கிறேன். இந்த ஆறாயிரத்தைப் போல் இன்னொரு ஆறாயிரம் போடவும் நான் தயார்."

"இதுதான் என் கடைசி ஆசை. நான் இனிப் பிழைக்கமாட்டேன்"

"மாதவா, அப்படியெல்லாம் கூறாதே! கடவுள் காப்பாற்றுவார். இன்று அதிகமாகப் பேசிவிட்டாய். பேசாமல் தூங்கு" என்றார், கடை முதலாளி.

மாதவன் பேசாமல் கண்களை மூடிப் படுத்துவிட்டான்.

மறுநாளும், மூன்றாம் நாளும் மாதவன் எமனுடன் பலத்த போராட்டம் நடத்தினான். கடைசியில் இறந்து போய்விட்டான்! ஓர் இலட்சிய வீரன் மறைந்தான்.

மாதவன் இறந்ததை நினைத்து எல்லோரும் வருந்தினர். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வரப்போவதில்லை என்பது தெரிந்ததுதான்; ஆனாலும், மனம் கேட்கிறதா?

ஆயினும், 'இப்படி வருத்தப்பட்டுக் கொண்டே இருப்பதில் பயனில்லை. மாதவனின் கடைசி ஆசையை விரைவில் நிறைவேற்ற வேண்டும்' என்று நினைத்தான், மனோஹரன்.

மளிகைக் கடை முதலாளி முன் சொன்னதுபோல் பன்னிரெண்டாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார். மனோஹரன், தன் அப்பாவையும் நன்கொடை கேட்டான். உடனே அவர், "பணம்தானே கேட்கிறாய்? அது வேண்டாம். பள்ளியில் ஒரு மண்டபமே நான் கட்டித் தருகிறேன். அதில் 'மாதவன் நினைவு மண்டபம்' என்று பொறிக்கப்பட வேண்டும். அதில் அவன் வேண்டியதுபோல் அற்புதமான புத்தகங்களை யெல்லாம் வாங்கி வைப்போம்" என்றார்.

"அத்துடன் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாகக் கல்வியும் கற்றுக் கொடுக்கவேண்டும் அப்பா. ஆண்டுதோறும் மாதவன் நினைவு நாளன்று ஏழைக் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் இலவசமாக வேட்டி வழங்குவதும் உபயோகமாயிருக்கும்"

"சரி, அப்படியே செய்யலாம். பணம் இருந்து என்ன பயன்? மாதவனைப்போல் குணம் கிடைக்க வேண்டுமே!" அப்பா இதைச் சொல்லும்போதே மனோஹரன் கண்களில் நீர் வழிந்தது.

"சரி, கண்ணைத் துடை. ஆக வேண்டிய வேலையைப் பார்ப்போம். நாளையே மண்டபம் கட்ட ஏற்பாடு செய்வோம்" என்றார். அவர் சொன்னபடி, சில மாதங்களில் அழகாகப் பளிங்குமண்டபம் ஒன்று கட்டப்பட்டது. அதன் முகப்பில் 'மாதவன் நினைவு மண்டபம்' என்று எழுதப்பட்டது.

உள்ளே நுழைந்ததும், எதிரே மாதவனின் உருவப் படத்தைக் காணலாம். தினமும் காலையில் அப் படத்திற்கு மனோஹரன் மாலை போட்டு அழகு பார்ப்பான்.

மண்டபத்தின் உள்ளே சிறுவர் நூல்நிலையம் ஒன்று இருக்கிறது. அதில் சிறுவர்களுக்காக இதுவரை வெளிவந்திருக்கும் புத்தகங்களில் நல்ல புத்தகங்களாகப் பார்த்து வாங்கி வைத்திருக்கிறார்கள். தினமும் சுற்றுப்புறத்திலுள்ள சிறுவர் சிறுமியர் அங்குவந்து புத்தகங்களைப் படிக்க எடுத்துச் செல்வார்கள். அத்துடன், சிறுவர் பத்திரிகைகளையும் வரவழைக்கிறார்கள்.

இரவு நேரத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். மிகவும் பொறுமையும், கெட்டிக்காரத்தனமும் உள்ள ஒரு

வரைத் தலைமை ஆசிரியராகப் போட்டு, அவருக்கு உதவியாக இரண்டு ஆசிரியர்களை அமர்த்தியிருக்கிறார்கள். சுமார் 60, 70 பிள்ளைகள் அங்கு தினமும் தவறாமல் வந்து கல்வி கற்கிறார்கள்.

பளிங்கு மண்டபத்தின் எதிரே நல்ல திறந்த வெளி இருக்கிறது. அங்கே மாலை நேரத்தில் அந்த ஊர்க் குழந்தைகள் எல்லோரும் திரண்டு வந்து பலவித விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள்.

ஆண்டுதோறும் மாதவன் நினைவு நாளை நல்ல முறையில் கொண்டாடுகிறார்கள். அன்று ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகச் சாப்பாடு போட்டு உடுத்தத் துணியும் கொடுக்கிறார்கள். அன்று மனோஹரன் அப்பாவிடம், "அப்பா, புத்தகக் கல்வியுடன், தொழிற் கல்வியும் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் தொழில் பெருகும்; நாடு வளமடையும்" என்றான்.

அவரும் "சரி, விரைவில் ஆரம்பித்துவிட வேண்டியதுதான். அதற்கு வேண்டிய தொழிற்கருவிகளை வரவழைக்க இன்றே ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறினர்.

இப்போது தொழில் செய்வதற்கு வேண்டிய கருவிகளெல்லாம் வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் தொழிற் கல்வி ஆரம்பமாகிவிடும் என்று நம்பலாம்.

மாதவனின் சித்தி, அம்மா, அப்பா எல்லோரும் இப்போது அந்த மண்டபத்தின் அருகேயுள்ள ஒரு வீட்டிற்கே குடி வந்து விட்டனர். அவர்களும் தினமும் மண்டபத்துக்கு வந்து தங்களால் முடிந்த வேலைகளைச் செய்து வருகின்றனர்.

மாதவனின் சித்தி இப்போது முற்றிலும் மாறிவிட்டாள். அவளும், மாதவனின் அம்மாவும் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறார்கள், தெரியுமா?

சாமு மாமாவும் இப்போது வேலையை விட்டுவிட்டு இங்கு வந்துவிட்டார். பளிங்கு மண்டபத்தை நிர்வகிப்பதற்கு ஒரு குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில், சாமுமாமா, மளிகைக் கடை முதலாளி, மனோஹரன், அவனுடைய அப்பா, மாதவனின் தந்தை முதலியோர் இருக்கின்றனர். பளிங்கு மண்டபத்தின் சேவையும், புகழும்நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வருகின்றன.

அன்று மனோஹரன் பழைய கடிதக் கட்டுகளைப் புரட்டிக்கொண்டிருந்தான். அப்போது, மாதவன் தன் கைப்பட எழுதிய ஒரு பழைய கடிதம் மனோஹரனின் கருத்தைக் கவர்ந்தது. உடனே, அதை எடுத்துப் படித்துப் பார்த்தான். அதில் முத்து முத்தான எழுத்துக்களில் மாதவன் பாரதியார் பாட்டு ஒன்றை எழுதியிருந்தான். அப் பாட்டைத் திரும்பத் திரும்பப் படித்துப் படித்துப் பரவசமடைந்தான் மனோஹரன்:

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினுயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்குஎழுத்தறிவித்தல்'

(முற்றும்)

கேளுங்கள்: பதில் சொல்லுகிறேம்

● கார்ட்டூன் சினிமாப் படங்களைத் தயாரிக்கும் வால்ட் டிஸ்னி எந்த தேசத்துக்காரர்? அவர் எடுத்திருக்கும் படங்களில் மிகவும் பிரபலமான படங்கள் என்ன என்ன?

—என். ராஜு, சென்னை-5

அவர் அமெரிக்க தேசத்தவர். அவர் தயாரித்த மிக்கி மௌஸ் (Mickey Mouse) மூன்று குட்டிப் பன்றிகள் (Three little pigs) என்ற இருபடங்களும் உலகப் பிரசித்தி பெற்றவை.

● சென்ற வருஷம் பொங்கல் மலரில் வெளிநாட்டுத் தம்பி தங்கைகளின் கடிதங்களை வெளியிட்டிருந்தீர்களே, அதேபோல் இந்த வருஷமும் வெளியிடுவீர்களா?

—P. மனேஹரன், திருப்பதி

இல்லை. அதற்குப் பதிலாக, வெளிநாட்டிலுள்ள குழந்தைப் பத்திரிகை ஆசிரியர்கள் உங்களுக்காகவே எழுதியுள்ள கடிதங்களை வெளியிடப் போகிறேம்.

● நான் சென்னைக்கு வருகிறேன். உங்களைப் பார்க்க வேண்டுமாளுல்,முன்னதாகவே அனுமதிச் சீட்டு வாங்கிக் கொள்ள வேண்டுமா? அந்த மாதிரி நிபந்தனை இருந்தால் அனுமதிச் சீட்டை உடனே அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

—எஸ். ஜானகிராமன், உறையூர்

41 லட்சம் பிரதிகள் விற்பனையாகும் பிரிட்டிஷ் 'டெய்லி எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் ஆசிரியர் கூட, 'முன்னதாகவே அனுமதிச் சீட்டுப் பெற்றுக்கொண்டுதான் என்னைப் பார்க்க வரவேண்டும்' என்று சொல்வதில்லையே ! நான் எப்படித் தம்பி சொல்வது? அனுமதிச் சீட்டு எதுவும் இன்றியே நீ இங்கு வரலாம். உன் வரவு நல்வரவாகுக !

● 'பசலி' என்கிருர்களே, அப்படியென்ருல்—?

—என். எம். காவேரி, தஞ்சை

'பசலி' என்பது வரிவசூல், விவசாயம் முதலியவற்றிற்கு உபயோகமாக முகலாய அரசர்கள் ஏற்படுத்திய ஒரு கணக்கு. 1-7-54ல் 1364-ம் பசலி பிறக்கிறது.

● சென்னையில் முதல் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை எது?

—என். கேசவன், சென்னை-7

'மெட்ராஸ் கூரியர்' என்ற பத்திரிகைதான். 1785-ல் அது ஆரம்பிக்கப்பட்டது.

● அண்ணு, இங்கிலாந்தின் முதல் பிரதமர் சர் வால்போல்தானே?

—எம்ஜிஜே. சென்னை-1

ஆம், சர். ஆர். வால்போல்தான் முதல் பிரிட்டிஷ் பிரதமர்.

● ஒரு பவுன் என்கிருர்களே, அதன் மதிப்பு என்ன?

C. கருப்பையா, காரைக்குடி

சுமார் ரூ. 13—8—0.

● பிச்சைக்காரர்கள் பெரும்பாலும் 'அம்மா தாயே, பிச்சை போடு' என்றே கேட்கிருர்கள். ஏன் 'அப்பா, ஐயா' என்று கேட்பதில்லை?

—ஏ. சுந்தரமூர்த்தி,
Champion Reeps, K. G. F

சோறு, அரிசி கேட்கும்போது தான் 'அம்மா, தாயே!' என்கிருர்கள். காசு கேட்கும்போது 'ஐயா, சாமி' என்கிருர்களல்லவா? யாரிடம் எதைக் கேட்பது என்று தெரிந்துதான் கேட்கிருர்கள்.

● துப்பறியும் கதைகளை நாங்கள் படிப்பதால் எங்களுக்கு நன்மை விளையுமா?

—C. P. சொக்கலிங்கம், ஈரோடு

துப்பறியும் கதைகள் எல்லாமே கெடுதல் என்று சொல்ல நான் தயாராக இல்லை.

● ஸ்வாமி விவேகானந்தர் எப்போது, எங்கே பிறந்தார்? அவர் இறக்கும்போது வயது என்ன?

—ஜெ. ஆனந்தன், பழனி

கல்கத்தாவில் 1863-வது ஆண்டில் ஜனவரிமாதம் 12-ம் தேதி (சங்கராந்தியன்று) பிறந்தார். அவர் இறக்கும்போது வயது 39.

● உலகிலேயே மிகவும் சிறிய குடியரசு நாடு எது?

—ஆர். ஜகன்னுதன், திருநெல்வேலி

மிகவும் சிறிய குடியரசு நாடு 'அண்டோரா' என்பதுதான். அங்கு 6000 மக்களே வசிக்கிருர்கள்.

● மகாகவி பாரதியார் சதுரங்கம் ஆடுவதில் மிகவும் கெட்டிக்காரர் என்கிருர்களே, நிஜமாகவா?

—பி. மாதவன், கீரனூர்

'பாரதியாருக்குச் சீட்டாடுவதிலும், சதுரங்கம் ஆடுவதிலும் வெகு பிரியம். ஆனல், இந்த இரண்டு ஆட்டங்களிலும், அவருக்குப் பாண்டித்தியம் கிடையாது' என்று பாரதியாருடன் நெருங்கிப் பழகிய வ. ரா. அவர்கள் எழுதியிருக்கிருர்.

அவனே அவசரக் குடுக்கை. 'அவசரத்தின் அவதாரம்' என்பது அவன் அப்பாவின் அபிப்பிராயம். அப்படி அபிப்பிராயப்பட்டவரே அவன் பேச்சைக் கேட்டு ஏமாந்துவிட்டார்! இது வேடிக்கைதான்!

தந்தியோ தந்தி

ரேவதி

"ஏய் பரந்தாமா! இந்தாடா, இங்கே வா. நான் ஒரு வேலே சொல்லுகிறேன், செய்வாயா?" என்று கேட்டார் பரந்தாமனின் தந்தை.

"என்ன அப்பா, அவ்வளவு ரகசியமா!" என்று திருப்பிக் கேட்டான் பரந்தாமன்.

"ஆமாண்டா ஆமாம். நம் தெருக் கோடியிலே..." அப்பா முடிப்பதற்குள்,

"குப்புசாமி வீட்டிலே குடியிருக்கிற பட்டு மாமாவிடம் போய் ஒரு சிட்டிகை பொடி வாங்கி வரவேண்டும். அவ்வளவுதானே?" என்ருன் பரந்தாமன்.

"டேய், அவசரக் குடுக்கை! சொல்வதை முழுக்கக் கேளுடா. கோடி வீட்டிலே குடியிருக்கிருரே குப்பண்ணு வாத்தியார், அவர் வீட்டுக்கு......"

"போய், இரண்டு வாழை இலையை நறுக்கிக்கொண்டு வரவா?" என்று மறுபடியும் குறுக்கே பாய்ந்தான் பரந்தாமன்.

அப்பாவுக்குக் கோபம் பொங்கியது. வேருெரு சமயமாக இருந்தால், பல்லேக் கடித்துக் கொண்டு அடிமாரி பொழிந்து தள்ளியிருப்பார், அவன் முதுகில்! ஆனல், இப்பொழுது அவனல்தானே காரியம் ஆக வேண்டும்?

"டேய் அல்பாயிசு! அவசரத்தின் அவதாரமே! மரியாதையாக, நான் முழுசாகக் கூறி முடிக்கும் வரையில் கேட்க வேண்டும். நடுவிலே வாயைத் திறந்தால் உரித்து உப்புக்குள் வைத்துவிடுவேன்!" என்ருர் அப்பா.

"சரி, அப்பா. குப்பண்ணு வாத்தியாரிடம் போய்....?" என்று இழுத்தான், பரந்தாமன்.

"அவரிடம் போகவேண்டாம். அவர் வீட்டுக்குப் பக்கத்

திலே போய், ஏதாவது அழு கைக் குரல், அல்லது 'ஐயோ, அப்பா' என்ற சத்தம் ஏதா வது கேட்கிறதா பார். கேட் டால் வந்து சொல்'' என்றார் அப்பா.

"சரி அப்பா...என்ன கார ணம்?'' என்று பயந்தபடி கேட் டான் பரந்தாமன்.

"அவர் வீட்டிலே அவர் மனைவி மிகவும் அபாயமான நிலையில் இருக்கிறாள்'' என்றார் பரந்தாமனின் தந்தை.

தலையாட்டி விட்டுக் குப் பண்ணு வாத்தியார் வீட்டை நோக்கிப் பறந்தான் பரந் தாமன்.

* * *

குப்பண்ணு வாத்தியார் என்ற தும் அவர் ஒரு பள்ளிக்கூட வாத்தியாராக இருப்பாரோ என்று எண்ணிவிடாதீர்கள். அவர் ஒரு பிடில் வித்துவான். அவர் மட்டும் கம்பிகளைத் தட்டி விட்டு பிடிலை வாசிக்கத் தொடங்கிவிட்டால்... அடடா! ஆஹா! அவர் இருக்கும் தெருப்பக்கம் ஒரு பிராணிகூட எட்டிப் பார்க்காது! தெரு காலி யாகிவிடும். அவர் பிடில் வாசித் தால், ஒரு சமயம் ஆந்தை அலறுவதுபோல் கேட்கும்; சில சமயம் கதவின் இடுக்கில் எலி அகப்பட்டுக்கொண்டால் கத்துமே, அதுபோன்ற சத்தம் கேட்கும்; இன்னொரு சமயம், பழைய சாதத்தை எருமைத் தயிருடன் கலந்து குளிக்காது சாப்பிட்டுவிட்டுத் தூங்கினால் குறட்டை விடுவார்களே, அது போன்ற சத்தம் கேட்கும்; சில சமயங்களில் கூர்மை போய்த் தேய்ந்துபோன ரம்பத்தினால், தண்ணீரில் ஊறிய சவுக்குக் கட்டையை அறுத்தால் கேட் குமே, 'சர், புர்' என்ற சத்தம், அதுவும் கேட்கும். அவரது பிடிலில் கேட்காத த்வனிகள் கிடையா. குப்பண்ணு தினமும் இரவில்தான் பிடில் சாதகம் செய்வார்.

'ஏன் பள்ளி கொண்டீ ரையா?' என்ற பாட்டை அவர் இரவு வேளையில் வாசிக்க ஆரம் பித்துவிட்டால் போதும்; அந் தத் தெருவில் ஒருவர்கூடத் தூங்கமாட்டார். ஒரு முறை, பக்கத்து வீட்டில் திருட வந்த திருடன், இவரது பிடில் வாசிப் பைக் கேட்டு 'இது ஒரு புது மிருகமோ!' என்று பயந்து ஓடியே போய்விட்டான் என் றால் பார்த்துக் கொள்ளுங் களேன்!

இன்னொரு முறை என்னவா யிற்று தெரியுமா? சாதாரண மாகக் குப்பண்ணு கூடத்தில் தான் உட்கார்ந்து சாதகம் செய் வார். அன்று திடீரென்று விளக்கு அணைந்துவிட்டது. மழையும் வந்துவிட்டது. குப் பண்ணுவின் இடத்திற்கு நேராக மழைத் தண்ணீர் ஒழு கவே, அவர் சமையலறையில் சாதகம் செய்துகொண்டிருந் தார்; அந்த இருட்டிலும் விட வில்லை. அவர் மனைவிக்கு இது தெரியாது. 'கர், கொர், சர், புர்' என்று திடீரென்று சமைய லறையிலிருந்து நவரசங்களும்

பொருந்திய சத்தம் வரேவே, அவள் பெருச்சாளிதான் ரகளை செய்கிறது என்று எண்ணி விறகுக்கட்டையுடன் அடிமேல் அடி வைத்து சமையலறையை நோக்கிச் சென்று போட்டாள்-ஓங்கி ஒரு போடு! அப்புறம் எனக்குத் தெரியாது. குப்பண்ணு இன்னமும் உயிருடன் தான் இருக்கிறார்! அவரது மனைவிக்குத்தான் உடம்பு குணமில்லை!

* * *

பரந்தாமன், குப்பண்ணு வீட்டை வளைய வளைய வந்து கொண்டிருந்தான். ஏதாவது அழுகைக் குரல் அல்லது ஐயோ, அப்பா என்ற சப்தம் கேட்கிறதா என்று. அப்பொழுது குப்பண்ணு வெளியே வந்தார். விளையாடிக்கொண்டிருந்த மகன் சங்கரைப் பார்த்து. "டேய் சங்கர், ஓடுடா. ஓடிப்போய் ஒரு தந்திவாங்கிவா. உம், சீக்கிரம்!" என்றார். சங்கர் பறந்தான். பரந்தாமனும் பறந்து கொண்டிருந்தான், வீட்டை நோக்கி. வாசலில் அவன் தந்தை நின்று கொண்டிருந்தார். இரைக்க இரைக்க ஓடிவந்த அவனைக் கண்டதும் அவன் தந்தை "என்னடா, பரந்தாமா! என்ன? என்ன?" என்று பரபரப்போடு கேட்டார்.

"செத்துப் போய்விட்டாள்"

என்று கத்தினன், பரந்தாமன்.

"என்ன! என்ன! நிச்சயமாகவா?" என்று கூவினர், அவன் அப்பா.

"ஆமாம் அப்பா, குப்பண்ணுகூட யாருக்கோ தந்தியடிக்க, தந்தி பாரம் வாங்கிவர சங்கரை அனுப்பினர். இந்தக் கண்ணுல் பார்த்தேன் அப்பா" என்ருன் அவன். உடனே அப்பா, அம்மாவிடம் சென்ருர்.

"சிக்கிரம் 'டிபன்' தயாராகட்டும். காபியையும் போட்டுக் கொடுத்துவிடு" என்ருர்.

"ஏனப்பா, சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேண்டுமா?" என்று கேட்டான் பரந்தாமன்.

"உனக்குத் தெரியாதுடா. இழவுக்குப் போனல் வரநேரமாகும். அங்கே பட்டினி கிடக்க நம்மால் முடியாது" என்ருர் அப்பா. தானும் வருவதாகக் கூறி, டிபனையும் காப்பியையும் நிரப்பிக் கொண்டு அவருடன் கிளம்பிவிட்டான் பரந்தாமன்.

வீட்டு வாசல் திண்ணையிலேயே குப்பண்ணு உட்கார்ந்து கொண்டிருந்தார். முகத்தில் துக்கத்தை வரவழைத்துக் கொண்டு அப்பா அவர் அருகில் சென்று உட்கார, அப்பாவின் அருகில் போய்ப் பரந்தாமனும் அமர்ந்து கொண்டான்.

"என்ன செய்யலாம், குப்பண்ணு? கடவுள் சித்தம் அவ்வளவுதான்... உன் மனைவி மிகவும் நல்லவள்; பரோபகாரி. விதி யாரை விட்டது? இப்போதுதான் விஷயம் தெரிந்தது. உடனே, ஓடோடி வந்தேன். ஆபீஸிலிருந்து இப்பொழுதுதான் வந்தேன். இன்னும் 'டிபன், காப்பி'கூடச் சாப்பிடவில்லை" என்ருர் அப்பா.

பரந்தாமன் குட்டைஉடைக்க எழுந்து நின்ருன். அதற்குள், அவசரக் குடுக்கையான அவன் என்ன செய்வான் என்பதை எதிர்பார்த்த அவன் தந்தை, அவன் துடையில் 'நறுக்' கென்று ஒரு கிள்ளுக் கிள்ளினர். பரந்தாமன் ஒடுங்கி விட்டான்.

இதற்குள் குப்பண்ணு, "என்னப்பா இது! யார் உனக்கு என்மனைவி இறந்தாள் என்ருர்கள்? அவளுக்குச் சற்றுத் தேவலை" என்ருர். உடனே அப்பா, "என்னய்யா நீர்! தந்திக்குக் கூட சங்கரை அனுப்பினீராமே!" என்ருர்.

குப்பண்ணு சிரித்தார்.

"இன்று பக்கத்து ஊர்ப் பஜனைமடத்தில் பிடில் வாசிக்க வேண்டும் என்று திடீரென்று வந்து கூறினர்கள். என் மனைவிக்கும் சிறிது குணமாகவே ஒப்புக் கொண்டேன். ஆனல், திடீரென்று பிடில் தந்தி அறுந்துவிட்டது. கச்சேரிக்கு நேரமாகி விட்டது. அதனல் பிடில் தந்தி வாங்க சங்கரை அனுப்பினேன்" என்று கூறி மறுபடி ஓங்கிச் சிரிக்கத் தொடங்கினர், குப்பண்ணு. அப்பாபரந்தாமனை நோக்கினர்; பரந்தாமன் தரையை நோக்கினன்! ●

போர்க்களத்திற்குப் போனான். புறமுதுகு காட்டவில்லை. கடமையை நிறைவேற்றும் போது ஒரு காலைப் பலி கொடுத்தான். அவனுக்குத் தியாகி என்ற பட்டத்தையோ வீரன் என்ற பட்டத்தையோ ஊரார் அளிக்க வில்லை. பின்னர் என்ன பட்டம்தான் கொடுத்தனர்?

நொண்டிச் சிப்பாய்

★ ★ ★ ★ வி. ஆர். பாலன் ★ ★ ★ ★

ரயில் வண்டி புறப்பட இன்னும் இரண்டு நிமிஷங்கள் தான் இருந்தன. சிப்பாய் சின்னையன் பெட்டியையும், படுக்கையையும் ரயிலுக்குள் தள்ளினான். கண்கலங்கி நின்ற அவன் தாயை நோக்கி, "அம்மா! கவலைப்படாதே, நான் போய்வருகிறேன்" என்று தான் அவனால் அப்போது கூற முடிந்தது.

"சின்னையா, மாதத்துக்கு இரண்டு முறையாவது கடுதாசு போடு! உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்" என்றாள் அம்மா, கண்கலங்க.

"சின்னையா, அம்மாவுக்கு மாதாமாதம் மறக்காமல் பணம் அனுப்பு" என்று கூறினான், அம்மாவுக்குத் துணை வந்த அடுத்த வீட்டு வேலாண்டி.

'சரி' என்று சின்னையன் தலையை அசைத்ததும் வண்டி 'கூ'வென்று ஊதிக்கொண்டே புறப்பட்டது. அழுது கொண்டே நின்ற தன் தாயை சின்னையனால் மறக்க முடியவில்லை. இலேசாகக் கண்களில் நீர் கசிந்தது. அதைக் கையால் துடைத்துவிட்டு இடத்தில் வந்து உட்கார்ந்தான.

* * *

இரண்டு வருடங்களுக்கு முன்னால் சிப்பாய் சின்னையன், சோம்பேறிச் சின்னையனாகத் தான் இருந்தான். கிராமத்தில் தன் ஒரே தாயாருடன் அவன் வசித்து வந்தான். சிறு பையனாக இருக்கும்போதே அவனுடைய அப்பா இறந்துவிட்டார். அவனுடைய தாயார் தான் அவனை ஒழுங்காக வளர்த்து மனிதனாக்கியவள்.

அவர்களுக்கு இருந்தது, அவர்கள் வசிக்கும் ஒரே வீடு தான். மற்றப்படி நிலம் நீர்

என்று எதுவும் கிடையாது. அவனுடைய அம்மா கிராமப் பண்ணையில் ஏதோ வேலை செய்து வந்தாள். சின்னையன் வளர்ந்து பெரியவன் ஆனதும் தன்னைக் காப்பாற்றுவான் என்பதுதான் அந்த ஏழைத்தாயின் எண்ணம். அதனால் அவள் மிகவும் கஷ்டப்பட்டுத் தன் வயிற்றைக் காயப் போட்டு— சின்னையனைத் துக்கத்தின் சிறு சாயல்கூடப் படாமல் அருமையாய் வளர்த்தாள்.

சின்னையனுக்கு வயது இருபது ஆகியது. வாட்டசாட்டமாக ஆஜானுபாகுவாக வளர்ந்து விட்டான். ஆனால், அம்மா நினைத்தபடி அவன் எங்கேயும் வேலை செய்யப் போவது கிடையாது. சோம்பேறியாக ஊர் சுற்றினான். அவன் தண்டச் சோறு சாப்பிட்டு ஊர் சுற்றுவதைப் பார்த்த அவன் அம்மா "சின்னையா, மண்வெட்டியை எடுத்துக்கொண்டு பண்ணையாரிடம் போய் ஏதாவது வேலை கேள்; தருவார். வீணாக இப்படி ஊர் சுற்றாதே" என்று எவ்வளவோ முறை கூறினாள். ஆனால், அவன் அதைக் காதில் போட்டுக் கொண்டால்தானே!

சின்னையனின் தாயார் பண்ணையாரிடம் போய் முறையிட்டுக் கொண்டாள். பண்ணையாரும் எவ்வளவோ முறை சின்னையனை அழைத்து எவ்வளவோ நல்ல முறையில் புத்திமதிகள் கூறினார். ஆனால், சின்னையன் மூளையில் அதெல்லாம் ஏறினால்தானே! மண்வெட்டி பிடிப்பது அவனுக்கு அவமானமாக இருந்தது.

இந்தச் சமயத்தில்தான் அந்தப் பாழாய்ப்போன யுத்தம் வந்தது.

பட்டாளத்தில் சேர்ந்தால் நல்ல துணி, நல்ல சாப்பாடு, பணம் எல்லாம் கிடைக்கும் என்று சின்னையன் நினைத்தான். உடனே சிப்பாயாகச் சேர்ந்துவிட்டான். அவனுடைய தோற்றத்தைக் கண்டு ராணுவ அதிகாரியே ஆச்சரியப்பட்டுவிட்டார். சின்னையனின் அம்மா எவ்வளவோ வேண்டாமென்று தடுத்தும் அவன் பட்டாளத்தில் சேர்ந்து, ஆம்; சேர்ந்தேவிட்டான்!

தாய்: என்னடா இது, புத்தகத்தோடு குளிக்கிறாய்?

மகன்: அப்பா என்னை எப்பொழுதும் புத்தகமும் கையுமாயிருக்கச் சொல்லியிருக்கிறார், அம்மா.

சோம்பேறிச் சின்னையன் சிப்பாய் சின்னையனாக மாறினான்.

சிப்பாய் சின்னையன் பட்டாளத்தில் சேர்ந்துவிட்ட போதிலும், அவன் தன் தாயாரை மட்டும் மறக்கவில்லை. ஒவ்வொரு மாதமும் தவறாமல் ஐம்பது ரூபாய் தன் தாயாருக்கு அனுப்பிவந்தான். மாதம் இரு முறை கடிதம் எழுதி வந்தான். அவனுடைய கடிதத்திலே தான், தன் உயிரையே வைத்திருந்தாள், சின்னையனின் தாயார்.

இரண்டு வருடம் கழிந்தது.

ஒருமாத விடுமுறையில் காக்கி உடுப்புடன் தன்னுடைய பூட்ஸ் 'டக்டக்'கென்று ஒலிக்கக் கிராமத்துக்குள்—பின்னால் ஒருவன் பெட்டி படுக்கையைச் சுமந்துவர—நுழைந்தான், சின்னையன். அவன் வீட்டுக்குள் நுழைந்ததும் அவனுடைய அம்மா அவனை அப்படியே இறுகக் கட்டிக் கொண்டாள்!

பண்ணையார் வீட்டில்தான் அவனுக்கு எவ்வளவு மரியாதை! பட்டாளப் பெருமையையும்—பட்டணத்து வாழ்க்கையையும் பற்றிக் கேட்ட பண்ணையாருக்குத் தானும் பட்டாளத்தில் சேர்ந்துவிடலாமா என்று கூடத் தோன்றியது.

ஒருமாத விடுமுறையும் ஒரு நொடியில் பறந்து விட்டது! இனிமேல் மூன்று வருடம் போனால்தான் லீவு கிடைக்கும் என்று சின்னையன் தன் அம்மாவிடம்கூறினான். அதைக்கேட்ட

அவன் அம்மாவுக்குத் தன் மகனை அனுப்ப மனமே இல்லை! ஆனால் அப்படி அனுப்பாமல் இருந்துவிட முடியுமா!

சிப்பாய் சின்னையன் மீண்டும் ரயிலேறினான்.

* * *

ஆறு மாதம் ஆகியது.

மாதம் தவறாமல் சின்னையனிடமிருந்து பணமும் கடிதமும் வந்துகொண்டிருந்தன.

அன்று சின்னையன் எழுதிய கடிதத்தில், "அம்மா, நான் சௌக்கியம். எங்களையெல்லாம் பர்மாவுக்கு அனுப்பப் போகிறார்கள். சண்டை மூண்டுவிட்டது. துப்பாக்கி தாங்கிச் சண்டை போடப் போகிறோம். உன்னுடைய ஆசியால் நான் எவ்விதமான ஆபத்துமில்லாமல் திரும்பி வந்துவிடுவேன். இத்துடன் நூறு ரூபாய் அனுப்பியிருக்கிறேன்" என்று இருந்தது. அதைப் படித்த அவன் தாயார் ஒரு வாரம்வரை சாப்பிடவேயில்லை!

* * *

பர்மாவில்—

சண்டை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. இந்தியத் துருப்புக்கள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருந்தன. ஜப்பானியர்கள் பின்வாங்கினர். இந்தியத் துருப்புக்கள் ஓய்வுக்காக ஓர் இடத்தில் முகாமிட்டனர். சிப்பாய்களைப் பற்றிக் கணக்கெடுத்தபோது ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டுவிட்டனர் என்பது தெரிந்தது. எங்கு பார்த்தாலும் ஒரே புகையும் பிணமும்தான்!

சிப்பாய் சின்னையன் கூடாரத்தில் கவலையோடு அம்மாவை நினைத்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் உயிரோடு இருப்பதால்தான் அவனுடைய தாயார் சந்தோஷத்துடன் இருக்கிறாள். ஆனால், அவன் இறந்துவிட்டால்......?

சின்னையனின் நெஞ்சம் தவித்தது. தாய்ப் பாசம் அவனை வாட்டியது. அப்போது ஒரு சிப்பாய் வந்து, "சின்னையா, உன்னை 'கர்னல்' அவசரமாகக் கூப்பிடுகிறார்" என்று கூறினான். சின்னையன் உடனே எழுந்து தொப்பியை மாட்டிக் கொண்டு வேகமாக 'கர்னல்' லிடம் போனான். அவர்தான் அந்தச் சிப்பாய்களுக்கே அதிகாரி. பெரிய அதிகாரி!

'சல்யூட்' அடித்து நின்ற சின்னையனை உட்காரச் சொன்னதும், அவன் வியப்புடன் அவர் எதிரிலிருந்த நாற்காலியில் தயக்கத்துடன் உட்கார்ந்தான். 'கர்னல்' ஏதோ எழுதி ஒரு கவரில் போட்டு 'சீல்' வைத்தார். பிறகு "சின்னையா, இதோ இந்தக் கவரில் ஒரு முக்கியமான செய்தி அடங்கி இருக்கிறது. இதை ஜாக்கிரதையுடன் எழுபது மைல் தூரத்திலுள்ள 'லட்பூரி'ல் உள்ள கர்னலிடம் சேர்த்துவிட வேண்டும். அதற்கு நீதான் நம்முடைய பட்டாளத்திலேயே தகுதி உள்ளவன். ஜீப்பில் உடனே

புறப்படு” என்று கூறினார்.

சின்னையன் கவரை வாங்கி வைத்துக் கொண்டான். துப்பாக்கியுடன் தயாராக இருந்த ‘ஜீப்’பில் ஏறிக் கொண்டான். ‘ஜீப்’ புறப்பட்டது. “சின்னையா, ஜாக்கிரதை!” என்று புறப்படும்போது எச்சரித்தார் கர்னல்.

‘ஜீப்’ புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்தது.

சுமார் ஐம்பது மைல் தாண்டியிருக்கும். மேலே இரண்டு எதிரி விமானங்கள் பறந்து கொண்டிருந்தன. சின்னையன் ‘பைனாகுலர்’ (தொலை நோக்கி) மூலம் ஆகாயத்தையே நோக்கிக்கொண்டிருந்தான். விமானம் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கி வர ஆரம்பித்தது.

டிரைவர் ஜீப்பின் வேகத்தை அதிகப்படுத்தினான். ஜீப் புயல் வேகமாகப் பறந்தது.

சுமார் அறுபத்தைந்து மைல் தாண்டிவிட்டது. நேசப் படைகளின் கூடாரங்களெல்லாம் ‘பைனாகுலர்’ மூலம் பார்த்தபோது நன்கு தெரிந்தன.

விமானம் நெருங்கி வந்தது. ‘ஜீப்’ வேகமாகப் பறந்தது.

“டிரைவர், ‘ஜீப்’பை நிறுத்திவிடு! இறங்கிப் பதுங்கிவிடலாம்”...என்று கத்தினான், சின்னையன், விமானம் நெருங்குவதைக் கண்டு!

‘ஜீப்’பின் வேகம் குறைந்து நின்றபோது—

விமானத்திலிருந்து ஒரு ‘குண்டு’ விழுந்தது! ‘டமார்!’ என்னும் பெருஞ் சப்தம்



காதைத் துளைத்தது; 'ஜீப்'பைத் தூக்கி எறிந்தது! சின்னையன் கீழே குதித்துத் தரையில் படுத்து விட்டதால் அந்தக் குண்டு அவனுடைய உயிரை ஒன்றும் செய்யவில்லை. ஆனால், கீழே இறங்கி வரப் பயந்து 'ஜீப்'புக்குள்ளேயே இருந்த டிரைவர், 'ஜீப்'போடு தூக்கியெறியப்பட்ட போது இறந்து விட்டான்!

விமானம் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக மேலேறி வேறு திக்கில் பறந்தது. சின்னையன் குண்டின் அதிர்ச்சி நீங்கிக் கண் விழித்தபோது—

அவனைச் சுற்றி நிறையச் சிப்பாய்களும் 'லட்பூர்' கர்னலும் நின்றிருந்தனர். தூரத்தில் மிலிடரி லாரி ஒன்று நின்று கொண்டிருந்தது. கர்னலைக் கண்ட சின்னையன் எழுந்து நின்று 'சல்யூட்' அடிக்க முயன்றான்; ஆனால் முடியவில்லை. குண்டு அவனுடைய ஒருகாலை மட்டும் நன்றாகப் பதம் பார்த்து விட்டது! சின்னையன் கவரை அவரிடம் கொடுத்தான். அவரும் அதைப் பெற்றுக்கொண்டு சின்னையனை உடனே ஆஸ்பத்திரியில் சேர்த்தார்.

ஆறு மாதத்துக்குப் பின்—

கிராமத்தில் மிலிடரி லாரி ஒன்று நுழைந்தது. அது சின்னையனின்வீட்டு வாசலில்வந்து நின்றது. லாரியிலிருந்து ஒரு சிப்பாய் கீழே குதித்தான். மற்ளொரு சிப்பாய் சின்னையனை மெதுவாகக் கீழே இறக்கி விட்டான். கீழே இருந்த சிப்பாய் அவனை மெதுவாகக் கை கொடுத்து இறக்கினான்.

ஏன்?

ஆஸ்பத்திரியில் சின்னையனின ஒருகாலை வெட்டிஎடுத்து விட்டார்கள், முழங்காலுக்குக் கீழே! இல்லாவிடில் அவன் உயிருக்கே ஆபத்து! உயிரையும் பொருட்படுத்தாமல் அவன் செய்த வீரச் செயலுக்காக அரசாங்கம் அவனுக்கு ஐயாயிரம் ரூபாயும், ஆயுள் முழுவதும் இலவசச் சம்பளமும் அளிக்க முன்வந்தது. அவனுடைய தாயாரோ, 'என் மகனுக்குக் கால் போய் விட்டது. ஆனாலும், உயிருடனாவது திரும்பி வந்தானே!' என்று ஆறுதல் பெற்றாள்.

போர்க்களத்துக்குச் சென்று புறமுதுகு காட்டாமல், இட்ட வேலையைத் திட்டமுடன் செய்தான், சின்னையன். ஒரு கால் போன பிறகுகூடக் கடமையைச் செய்யத் தவறவில்லை. அப்படிப்பட்ட சின்னையனுக்கு அந்தக் கிராமத்தார் அளித்த பட்டம் என்ன தெரியுமா?

தியாகி சின்னையனா?-இல்லை!

வீ ர ன் சின்னையனா?-அதுவும் இல்லை!

அப்படியானால் என்ன பட்டம் தான் அவனுக்கு அளித்தனர்?

நொண்டிச் சிப்பாய்!

ஆம், நொண்டிச் சிப்பாய் என்றே குழந்தை முதல் கிழவர் வரை அவனை இன்றும் கூறி வருகின்றனர்! ★

சுந்தரிடத்தில் மளிகைக் கடை முதலாளி அன்பு காட்டினர். மளிகைக்கடை முதலாளி யிடத்தில் சுந்தர் மரியாதை செலுத்தினன். ஆயினும், அந்த முதலாளி செய்யச் சொன்ன ஒரு காரியத்தை அவன் செய்யத் தயங்கினன்; செய்வதற்கு அவன் மனம் வர வில்லை. காரணம்?

காக்கை குருவி எங்கள் சாதி

'ரோகிணி'

"டேய் சுந்தர்!...வீட்டுக்குப் போகும்போது அந்தப் பொங்கைதக் கொஞ்சம் அடைத்து விட்டுப் போ..." என்றார் முதலாளி.

'சரி...' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினன், சுந்தர். முதலாளியிடம் சரியென்று தலையை ஆட்டினனே தவிர, அவனுக்கு அந்தப் பொங்தை அடைக்க மனமே இல்லை. "ஹூம்...இந்தப் பொங்தையா அடைக்க வேண்டும்...?" என்று உள்ளம் குமுறினன் சுந்தர். அவனுடைய உள்ளம் தவியாய்த் தவித்தது. கண்கள் கலங்கின. பேசாமல் கடையைப் பூட்டிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். ஆம்...முதலாளி கூறிய அந்தப் பொங்தை அடைக்காமல் தான்! காரணம்?...

* * *

சுந்தருக்குத் தகப்பனர் கிடையாது. அவன் நான்காவது வயதை எட்டிப் பிடிக்கும் போதே அவனுடைய தகப்பனர் வானுலகை எட்டிப் பிடித்து விட்டார், மலேரியாவின் அளவுக்கு மீறிய அரவணைப்பினல்! அப்பப்பா...! அவனை வளர்க்க அவனுடைய தாயார் பட்டபாடு, கொஞ்சநஞ்சமல்ல. தன்னிடமுள்ள நகை, நட்டு, வீட்டிலுள்ள சாமான்கள் எல்லாவற்றையும் விற்றள்; அதுவும் போதாமல் போகவே, பிறர் வீட்டில் கூலிவேலை செய்து சுந்தரைக் காப்பாற்றிஞள். அது மட்டுமல்ல; அவன் படிப்புக்கும் ஏற்பாடுசெய்தாள்.

நாட்கள் கரைந்தன, நீரிலிட்ட உப்பைப் போல. சுந்தரும் வளர்ந்து கொண்டே வந்தான். இப்போது அவனுக்கு வயது பதினைந்து. எட்டாவது வகுப்புக்கு மேல் அவனைப் படிக்க வைக்க முடியவில்லை அவன் தாயாரால். அதனல், படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கப்

பட்டது. அடுத்தபடியாக வேலைதேடும் படலத்தில் ஈடு பட்டான் சுந்தர். பல நாள் அலைந்து திரிந்தான், வேலை கிடைக்காமல். கடைசியில், எப் படியோ நவகோடி நாராயணன் செட்டியாரை வந்தடைந்தான். சுந்தரைக் கண்டவுடனேயே அவருக்குப் பிடித்து விட்டது. அவனுடைய இனிமையான பேச்சும், குறு குறுப்பான தோற்றமும் செட்டியாரைக் கவர்ந்தன. முதலில் 10 ரூபாய் தருவதாகக் கூறிய அவர், சம் பளம் கொடுக்கும் போது 25 ரூபாயாய்க் கொடுத்தார். அது மட்டுமல்ல; பிரதி மாதமும் சம் பளம் 25ரூபாயே தருவதாகவும் கூறினர். காரணம்?... அவ னுடைய வருகையால் கடையில் வியாபாரம் பெருகியதேயாகும். தவிர, ஒரு சில மாதங்களில் கடைச்சாவியையும் அவனிடமே கொடுத்து விட்டார்!

ஒரு நாள் மத்தியானம் கடை பூட்டும் சமயம். 'கீச்...கீச்...' என்று சப்தமிட்டபடியே இரண்டு குருவிகள் பறந்து வந்து, கடைமுழுவதும் சுற்றிப் பார்த்தன. கடைசியில் முத லாளியின் தலைக்குமேலே உள்ள ஒரு பொந்தில் போய் அமர்ந்தன. இதையெல்லாம் அலட்சியமாகப் பார்த்தபடியே கடையைப் பூட்டிக் கொண்டு போய் விட்டான் சுந்தர்.

காலதேவனின் கடும் பசிக்கு ஆறு மாதங்கள் பலியாயின. தினமும் அந்த இரண்டு குருவி களும் பறந்து வந்து அந்தப் பொந்தில் அமரும். கடையில் சிந்திக் கிடக்கும் தானியங்களை ஆகாரமாகக் கொள்ளும். இப் படியேசென்ற ஆறுமாதகாலம் அந்தக் குருவிக் குடும்பம் வசித்து வந்தது. இப்போது அந்தக் குடும்பத்தில் மேலும் இரண்டு அங்கத்தினர் பெரு கவே மொத்தத் தொகை நான் காயிற்று.

அவைகள் அடிக்கடி பொந் தில் வந்து உட்கார்ந்து கொள் ளும். 'கீச் கீச்...' என்று கத் தும்; அங்குமிங்கும் பறந்து விளையாடும். இவற்றையெல் லாம் அடிக்கடி கவனித்துக் கொண்டுதானிருந்தான், சுந் தர். ஆனல், இதுசெட்டியாருக் குத் தலை வேதனையாய் இருந் தது. அதுவுமல்லாமல் பொந்தி லிருந்து விழும் குச்சி முதலான தூசிகள் செட்டியாரின் தலை மேலேயே விழுந்தன. இது அவ ருக்கு இன்னும் ஆத்திரத்தைக் கொடுத்தது. அந்தக் குருவி களை எவ்வளவோ முறை விரட் டிப் பார்த்தார். ஆனல், அவை போனல் தானே?... மறுபடி யும், மறுபடியும் அந்த இடத் துக்கே வந்து செட்டியாரின் ஆத்திரத்தைக் கிளப்பின.

'அந்தப் பொந்தை அடைத்து விட்டால்தான் குருவிகளின்தொல்லை ஒழியும்' எனக் கருதினர் செட்டியார். தாம் கருதியதைக் காரியத்தில் செய்யும்படி கட்டளையிட்டார் சுந்தருக்கு. ஆனல், சுந்தர் இதைச் செய்யத் தயாராக இல்லை. 'சுமார் அரை வருட

காலமாக வசித்து வரும் ஒரு குடும்பத்தைக் கலைப்பதா ?' என நினைத்தான். அதன் காரணமாகவே தான் செட்டியாரின் - முதலாளியின் கட்டளையையும் மீறி வீட்டுக்குச் சென்றான் சுந்தர்.



* * *

"நேற்றே சொன்னேன், அந்தப் பொந்தை அடைக்கும்படி...காதிலே வாங்கிக் கொள்ளாமல் போய் விட்டாயே! இன்றாவது ஓர் அட்டையை வைத்து அடைத்து விடு. இப்போதே அடைக்க வேண்டும்" என்று கட்டளையிட்டார், செட்டியார்.

'கடனே' என்று ஒரு ஸ்டூலைப் போட்டுக்கொண்டு மேலே ஏறி அந்தப் பொந்தை அட்டையால் அடைத்தான் சுந்தர். அப்பப்பா...அந்தப் பொந்தை அடைக்கும்போது அவன் பட்டபாடு...கண்களும், உள்ளமும் ஒருங்கே கலங்கின. கைகள் நடுங்கின. உடம்பு ஒரு முறை வியர்த்துக் கொட்டியது. அதுமட்டுமா?...அன்று முழுவதும் அவனுக்கு ஒரு வேலையும் ஓடவில்லை. சோடா உப்பு வேண்டும் என்றால் சூடப் பொட்டலத்தை எடுத்துக் கொடுப்பான்; முந்திரிப் பருப்பு வேண்டுமென்றால், மிளகாயை நிறுக்கப் போவான். இப்படியெல்லாம் அவன் தடுமாறினான்!

சற்று நேரத்திற்கெல்லாம் அந்த இரண்டு குருவிகளும் ஓடி வந்தன. ஆனால்...என்ன ஏமாற்றம்? அவற்றின் வீடு—பொந்து— அடைக்கப்பட்டிருந்தது! குருவிகள் இரண்டும் இங்குமங்கும் பறந்தன. 'படபட...'வென இறக்கையை அடித்துக்கொண்டன. 'கீச்... கீச்...' என்று கத்தின. ஐயோ!...அந்தக் காட்சியைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது, சுந்தருக்கு தன் மீது தூசு விழாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இன்பமாக வாழ்ந்து வந்த ஒரு குடும்பத்தைக் கெடுத்த செட்டி

யார் அதுபற்றிக் கவலைப்பட வில்லை.

'கடவுளே!...நான் ஒரு பாவமும் அறியேன்...என்னை மன்னித்துவிடு...' என்று முணுமுணுத்தன சுந்தரின்உதடுகள்.

* * *

கடையைப் பூட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுச் சற்று நேரம் கண்ணயரலாம் என்று கருதிப் படுத்தான் சுந்தர். திடீரென்று 'படபட...' வென்ற சப்தமும், 'கீச்...கீச்...' என்ற குரலும் கேட்டுத் திடுக்கிட்டான் சுந்தர். எதிரே பார்த்தான். ஆம்...சந்தேகமேயில்லை...கடையில் குடியிருக்கும் அதே இரண்டு குருவிகள்தான் அவன் முன் வந்து நின்றன. அவனைப் பரிதாபத்தோடு பார்த்தன.

"அட பாவி!...ஒரு பாவமும் அறியாத எங்களைத்தான் வீட்டைவிட்டு விரட்டினாய். பாதகமில்லை. எங்களின் குஞ்சுகள் இரண்டையும் உள்ளே வைத்து அடைத்துவிட்டாயே!... அட, நாசகாரப் படுபாதகா! நீ உருப்படுவியா..." என்று அவைகள் ஒரே சமயத்தில் கத்தின.

திடுக்கிட்டு எழுந்தான் சுந்தர். எதிரே பார்த்தான். குருவிகளைக் காணவில்லை. அப்படியானால் இவ்வளவு நேரம் கண்டது?...ஆம். கனவேதான்! மணி இரண்டுதான் ஆகியிருந்தது. இருந்தாலும் சட்டையை மாட்டிக்கொண்டு கடையை நோக்கிப் புறப்பட்டான்.

கடையைத் திறந்ததும் முதல் வேலையாக குருவியின் பொந்தை அடைத்திருக்கும் அட்டையை எடுத்துவிட்டு உள்ளே பார்த்தான். ஐயோ...! கடவுளே...! பசியால் துடித்து வாடி வதங்கிப்போன இரு சின்னஞ் சிறிய குஞ்சுகள் மயங்கிக் கிடந்தன. கடையிலிருந்து கொஞ்சம் தானியங்களையும், ஒரு டப்பாவில் சிறிது தண்ணீரும் எடுத்து அந்தப் பொந்தில் வைத்தான். அத்துடன் நிற்கவில்லை. முதலாளி உட்காரும் ஆசனத்தை அவன் நகர்த்திப் போடுவதற்கும், முதலாளி வருவதற்கும் சரியாக இருந்தது.

"சுந்தர், ஏன் நகர்த்திப்போடுகிறாய்?" என்று கேட்டார் எஜமானர்.

"பாவம்...அந்தக் குருவிகள்..." என்று ஆரம்பித்து நடந்தவற்றை நாத் தழுதழுக்கக் கூறினான் சுந்தர்.

சுந்தரின் கருணையைக் கண்டு முதலாளி வியந்தார். "சரி, இப்போது என் தலையில் தூசி விழாது. ஏதேதோ தருமம் செய்கிறோம். இந்தக் குருவிகள் தின்பதிலா குறைந்து விடப் போகிறது" என்று கூறினார் செட்டியார். இதைக் கேட்டதும், சுந்தர் மகிழ்ச்சி அடைந்தான். குருவிகளின் மகிழ்ச்சியைக் காட்டிலும், அவனுடைய மகிழ்ச்சிதான் அதிகமாயிருந்தது. அந்த மகிழ்ச்சியில், 'காக்கை குருவி எங்கள் சாதி' என்ற பாரதியாரின் பாட்டை அவன் வாய் முணுமுணுத்தது!

பரமேஸ்வர ஐயர் ஒரு சமயம் 'லாபம்' என்று நினைத்தார். மற்றொரு சமயம் 'நஷ்டம்' என்று நினைத்தார். ஆனால், கடைசியில் 'நஷ்டமும் இல்லை; லாபமும் இல்லை' என்ற முடிவுக்கு வந்துவிட்டார். எல்லாம் எதிர்பாராதவைதான்!

சரிக்குச் சரி!

'நான்'

'போஸ்ட்மாஸ்டர் பரமேஸ்வர ஐயர் காய்கறிக்காரனை 'பொட்டை'ப் பொன்னுச்சாமியோடு பேரம் பேசிக் கொண்டிருந்தார். அந்தத் தெருவில் காய்கறி கொண்டு வந்து விற்பவன் பொன்னுச்சாமி. கண் கொஞ்சம் பொட்டையாதலால் அவனுக்குப் 'பொட்டை' என்ற அடைமொழி சேர்ந்துவிட்டது.

பரமேஸ்வர ஐயர் நாலு சேர் கொத்தவரைக்காயை, மூன்று சேராக நிறுத்து ஒன்றேமுக்காலணா விலை பேசிக் காசு எடுத்து வர உள்ளே சென்றார். சிறிது நேரத்தில் ஓர் இரண்டணா நாணயத்துடன் வெளியே வந்தார்; கிழவனிடம் அதை வீசியெறிந்தார். பொன்னுச்சாமி காசைத் தடவிப் பார்த்து, அது இரண்டணாத்தான் என்று ஊர்ஜிதம் செய்து மடியில் போட்டுக் கொண்டான்.

"மீதியைக் கொடு" என்றார், பரமேஸ்வர ஐயர்.

பொன்னுச்சாமி மீதியை அவர் கையில் வைத்தான்.

"என்ன பரமேஸ்வரா? பேப்பரைப் பார்த்தாயா?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் எதிர்த்த வீட்டு ஏகாம்பரம். அவருடன் அரட்டையடிப்பதில், பரமேஸ்வர ஐயர் ஈடுபடவே, கையில் இருந்த

காசைக்கூடக் கவனிக்கவில்லை. ஏகாம்பரம் திரும்பிச் சென்றவுடன்தான் கையிலிருந்த காசைப் பார்த்தார். அது ஓர் எட்டணு நாணயம்!

"ஓஹோ! பொன்னுச்சாமி காலணுவுக்குப் பதிலாக எட்டணுவைக் கொடுத்து விட்டான். பாவம்! அவனிடம் கொடுத்து விடுவோம்" என்று தமக்குள் எண்ணியவராய் வாசற்படியை விட்டு இறங்கினுர். பொன்னுச்சாமி தெருக்கோடியில் போய்க் கொண்டிருந்தான் அவனைக் கூப்பிட நினைத்த அவர் மனத்தில் திடீரென்று ஒரு சபலம் தட்டியது. "கடவுளாகப் பார்த்து நமக்கு ஏழே முக்காலணு அளித்துள்ளார். நாம்தான் எடுத்துக் கொள்வோமே!" என்றெண்ணியவராய்க் காசைப் பையில் போட்டுக் கொண்டு உள்ளே சென்று விட்டார்.

* * *

பிற்பகல் ஒரு மணியிருக்கும். வெய்யில் பொசுக்கிக் கொண்டிருந்தது. போஸ்டாபீஸில், வாசலுக்கு நேர் அறையில், ஜன்னலருகே உட்கார்ந்து கொண்டிருந்தார், போஸ்ட்மாஸ்டர் பரமேஸ்வர ஐயர். அவர் எதிரே மேஜையில் கார்டுகள், கவர்கள், ஸ்டாம்புகள், மணியார்டர் பாரங்கள் எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பக்கத்திலிருந்த தகரப் பெட்டியில் சில்லறைகள் ரக வாரியாக அடுக்கப் பட்டிருந்தன இரண்டு மணியாக எவரும் கார்டோ, கவரோ வாங்க வரவில்லை. அவர் உடம்பெல்லாம் வியர்வை ஆருகப் பெருகி ஓடியது. 'உஸ!' என்று பெருமூச்சு விட்டுவிட்டு வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

"ஸார்! நாலு கவர்" என்று கூறிவிட்டு ஒரு ரூபாயை நீட்டிஞன் ஒரு பையன். ரூபாயை அவசரமாக வாங்கிக் கொண்டு, நாலு கவர்களேயும், எட்டணுச் சில்லறையையும்கொடுத்து அனுப்பினுர்.

சற்று நேரத்துக் கெல்லாம் ரூபாயின் மேல் பார்வையைச் செலுத்தி அதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்; திடுக்கிட்டார்! காலையில் பொன்னுச்சாமியிடம் பெற்ற காசை (எட்டணுவை) ஆச்சரியக் கண் கொண்டு நோக்கினுர். ஆனல் இப்போது இந்த ஒரு ரூபாயை ஆத்திரக் கண் கொண்டு பார்த்தார். ஆம், அந்த ரூபாய் செல்லாதது! உடனே அவருக்கு 'எளியாரை வலியார் வாட்டிஞல்...' என்ற பழமொழி ஞாபகத்திற்கு வந்தது. வேறு வழியின்றிச் செல்லாத ரூபா

யைத் தம் பையில் போட்டுக் கொண்டு, பதிலுக்குப் பையிலிருந்து ஒரு நல்ல ரூபாயை எடுத்துப் பெட்டியில் போட்டார்.

* * *

கவர்களுடன் சென்ற பையன் சந்தோஷமாகத் தன் கையிலிருந்த நான்கு கவர்களையும், எட்டணா நாணயத்தையும் பார்த்துப் பார்த்துப் பூரித்த வண்ணம் இருந்தான். சந்தோஷத்தில் சீட்டியடித்துக்கொண்டே சென்ற அவன் காலில் ஒரு வாழைப் பழத்தோல் சிக்கியது.

“ஐயோ!” என்று அலறிக்கொண்டே தெரு ஓரத்தில் இருந்த சாக்கடையின் அருகில் விழுந்தான். அவன் கையிலிருந்த எட்டணா நாணயம் தாவிச் சென்று எங்கேயோ விழுந்தது. கவர்கள் சாக்கடை விளிம்பையடைந்தன. பையன் எழுந்து வருவதற்குள் ஒரு சிறு காற்று கவர்களைப் பத்திரமாகச் சாக்கடையில் சேர்க்கவே, பிரவாகமெனப் பெருகிய சாக்கடைத் தண்ணீரில் வேகமாக ஓடின அக் கவர்கள். பையன் சமாளித்துக்கொண்டு எழுந்தான். ‘காசையாவது தேடினால் கிடைக்குமா?’ என்ற சபலத்தில் தேடினான். ஆனால், அவன் அதிர்ஷ்டம் அது கிடைக்கவில்லை.

சோர்ந்த மனத்துடன், தான் ஏமாற்றியதற்குச் சரியாக கவர்களும், எட்டணாவும் பறிபோனதை எண்ணியவனாய் வீடுபோய்ச் சேர்ந்தான் பையன்.

மாலை நேரம். “எட்டணா குறைகிறதே! எங்கே கோட்டை விட்டேன்?” என்று சிந்தித்த வண்ணம் அந்த வழியாக வந்தான் பொன்னுச்சாமி. அப்போது அவன் காலில் ஏதோ தட்டுப் பட்டது. சப்தம் கேட்கவே அதை எடுத்துத் தடவிப் பார்த்தான். வட்ட வடிவமாய் இருந்த அந்தப் பொருளைச் சுண்டிப் பார்த்தவன் அது ஓர் எட்டணா என்பதை நிச்சயப் படுத்திக் கொண்டான். தான் எங்கோ தவறுதலாய்ப் பறிகொடுத்திருந்த எட்டணாவுக்கு ஈடாக இந்த எட்டணாக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தவனாய் நடையைக் கட்டினான்.

* * *

“கிழவனை எட்டணா ஏமாற்றினேன். ஒரு ரூபாயைப் பையன் ஏமாற்றி விட்டான்! மொத்தத்தில் எனக்கு இப்பொழுது எட்டணா நஷ்டம்” என்று நினைத்துக்கொண்டே வீட்டை நோக்கி வந்தார் பரமேஸ்வர அய்யர். அப்போது “ஸார், ஸார்!” என்ற குரல் அவரை இழுத்து நிறுத்தியது.

அடுத்த வீட்டுச் சுப்புமணி ஓடோடியும் வந்தான். அவன் கையில் ஒரு 'கூபன்' இருந்தது.

"ஸார்! உங்களுக்கு 'அ ஆ இ ஈ' போட்டியில் எட்டணு பிரைஸ் விழுந்திருக்கிறது. இதோ பாருங்கள்" என்று தன் கையில் இருந்த கூபனைக் காண்பித்தான் சுப்புமணி.

அதில் "பரிசு பெற்ற கீழ் கண்ட 200 பேர்களுக்கும், பரிசுத் தொகையாகிய ரூ. 100/-ஐச் சமமாக ஆளுக்கு எட்டு அணு வீதம் பகிர்ந்து கொடுக்கப்படும்" என்று எழுதி, அதன் கீழ் பரிசு பெற்ற இருநூறு பேர்களின் விலாசமும் எழுதப்பட்டிருந்தது. ஒவ்வொருவர் பெயராகப் பார்த்துக் கொண்டே வந்தார் பரமேஸ்வர ஐயர். 199-வது எண்ணுக்கு நேராக அவருடைய பெயரும் விலாசமும் இருந்தன. உடனே, அவர் முகம் மலர்ந்தது!

"எனக்கு இப்போது நஷ்டமும் இல்லை; லாபமும் இல்லை, சரிக்குச் சரியாகி விட்டது" என்று கூறிக் கொண்டார்.

* * *

வேட்டை நாய்

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா

இந்தப் புத்தகத்தில் நான்கு கதைகள் இருக்கின்றன. நான்கும் நான்கு தேசத்துக் கதைகள்; நான்கு விதமான கதைகள்.

கனத்த மூவர்ண அட்டை. புது மாதிரி அமைப்பு. உயர்ந்த காகிதம். 64 பக்கங்கள்.

விலை 12 அணு

பூஞ்சோலை

த. பெ. எண் 1803, சென்னை-1

வறுமையில் வதங்கிய தனது குடும்பம், தனது தந்தையின் மீது சுமத்தப்பட்ட கொடும்பழி, முதலாளியின் லட்சக்கணக்கான ரூபாய், இவ்வளவையும் காப்பாற்றினான், ஆனந்தன்.

ஆனந்தத் தீபாவளி!

எஸ். சங்கரன்

1

எதிர் வீட்டு மணி மாம்பழம் தின்று கொண்டிருந்தான். 'வெவ்... வெவ்...வே' என்று ஆனந்தனுக்கு அழகு காட்டியவாறே அவன் மிகவும் கர்வத்துடன் ஆனந்தனை ஓர் அலட்சியப் பார்வை பார்த்தது 'உன்னிடம் மாம்பழம் இல்லையே! என்னிடம் தான் மாம்பழம் இருக்கிறது' என்பதுபோல் இருந்தது.

ஆனால், ஆனந்தனோ ஏக்கத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தான். மாம்பழம் தின்ன முடியவில்லையே என்ற ஏக்கமில்லை அவனுக்கு; ஆனால், எதிர் வீட்டு மணியின் கர்வத்தையும், அலட்சியத்தையும் அடக்கத் தற்சமயம் தன்னால் ஒரு மாம்பழம் வாங்க முடியவில்லையே என்ற ஏக்கந்தான். தன்னைப் பற்றிக் கூடக் கவலைப் படவில்லை அவன். தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தங்கை விமலாவைப் பற்றித்தான் அவன் கவலைப்பட்டான். தானும் மாம்பழம் தின்னவில்லையே என்று அவள் பிஞ்சு உள்ளம் ஏங்காதா என்று எண்ணியபொழுது ஆனந்தனுக்குத் தாங்க முடியாத அளவு வருத்தம் உண்டாயிற்று. இலேசாகக் கண்ணீர்த்திரை அவன் கண்களில் படர்ந்தது.

இது குழந்தை எழுத்தாளர் சங்கச் சிறுகதைப் போட்டியில் 3-வது பரிசு பெற்ற கதை.

"உனக்கு மாம்பழம் வேணுமா, விமலா?" என்றான் ஆனந்தன்.

"வேண்டாம் அண்ணா" மாம்பழம் தின்ன ஆசையாய் இருந்த போதிலும், தங்கள் குடும்பநிலையை உணர்ந்து அவள் பதிலளித்தாள்.

'தங்கைக்கு ஒரு மாம்பழம் கூட வாங்கமுடியாத அளவுக்கு வந்துவிட்டதே நம் குடும்பநிலை. சென்ற வருஷம் எவ்வளவு ஆனந்தமாக இருந்தோம்! எவ்வளவு மாம்பழம் தின்றோம்! இதெல்லாம் அப்பா வேலையில் இருக்கும் வரைதான்! அப்பாவைத் தான் அநியாயமாக வேலையிலிருந்து நீக்கி விட்டார்களே, பாவிகள்! அந்த ஆனந்தமான நாட்கள் எல்லாம் இனித் திரும்பி வருமா! அவையெல்லாம் இப்பொழுது கனவாகப் போய்விட்டனவே...' என்று எண்ணிய ஆனந்தன் பக்கம்

சென்னை-600 008

தாளாமல் விம்மி விம்மி அழுதான்.

* * *

2

ஆனந்தனுக்குப் பத்து வயதாகிறது. அவனைவிட மூன்று வயது சிறியவள் விமலா. இவர்களுடைய தந்தை சாம்பசிவம் ஒரு 'கம்பெனி' யில் சாதாரண குமாஸ்தாவாக சொற்ப சம்பளத்தில் அமர்ந்தார் முதலில். அந்தச் சொற்ப வருவாயைக் கொண்டு தான் அக்குடும்பத்திலுள்ள நான்கு பேர்களும்—ஆனந்தன், விமலா, ஆனந்தனின் அம்மா, சாம்பசிவம்—வயிற்றைக் கழுவ வேண்டியிருந்தது.

சாம்பசிவம் இயற்கையிலேயே நல்ல குணம் வாய்ந்தவர்; விடா முயற்சியும், ஊக்கமும், சுறுசுறுப்பும் உள்ளவர். அவர் கொண்டு வரும் சொற்ப வருவாயைக் கொண்டு சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தி வந்தாள், அவருக்கேற்ற மனைவி, லட்சுமி அம்மாள். தினந்தோறும் வீடு திரும்பிவரும்போது ஆனந்தனுக்கும், விமலாவுக்கும் தின்பண்டங்கள் வாங்கி வருவார் சாம்பசிவம். தந்தையை எதிர்பார்த்து நிற்பார்கள் குழந்தைகள் இருவரும். தந்தை வந்தபிறகு அவருடன் சிறிதுநேரம் உலாவச் செல்வார்கள் மாலை வேளைகளில். அவர்கள் குடும்பம் இன்பச் சோலையாக விளங்கிற்று!

காரியாலயத்தில் சாம்பசிவம் எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகுவார்; ஒழுங்காக வேலை செய்வார். ஒரு சமயம் அந்தக் 'கம்பெனி'யின் முதலாளி, சாம்பசிவம் வேலை பார்த்து வந்த அந்தக் கிளைக் கம்பெனியைப் பார்வையிட வந்தார். அவர் சாம்பசிவத்தின் வேலைத் திறமையையும் ஒழுக்கத்தையும் பார்த்துவிட்டு, அவரை வெகு சீக்கிரத்திலேயே தலைமைக் குமாஸ்தாவாக்கி விட்டார்.

இது மற்ற சிப்பந்திகளுக்குப் பொறாமையை உண்டுபண்ணியது. அந்தக் கிளையின் மானேஜருக்கும் சாம்பசிவத்தின்மேல் பொறாமை. காரணம் இதுதான்:

அந்த மானேஜர் சரியாக வேலை செய்வதே இல்லை. மிகவும் சோம்பேறி! ஆகவே, கம்பெனியைப் பார்வையிட வந்த முதலாளி அவரிடம், 'ஸார், உங்கள் வேலை சிறிதளவு கூடத் திருப்திகரமாக இல்லை. சாம்பசிவத்தைப் பாருங்கள்; எவ்வளவு ஒழுங்காக வேலை செய்கிறார். அவர் போன்றவர்களையே நான் விரும்புகிறேன். அப்போதுதான் ஒழுங்காக வேலை நடக்கும். நீங்கள் சரியாக வேலை செய்யாவிடில் உங்களை நீக்கிவிட்டுச் சாம்பசிவத்தை உங்கள்பதவிக்கு நியமித்து விடுவேன்' என்கிறமாதிரிசொல்லி விட்டுப் போய் விட்டார்.

ஆகையால், தம்முடைய வேலைக்கு ஆபத்தாக நிற்கும் சாம்பசிவத்தைத் தொலைக்க வழிதேடினார் அந்த மானேஜர். அதற்கு மற்ற சிப்பந்திகளும் உதவி புரிவதாகச் சொன்னார்கள். தெய்வமும் அவர்களுக்குத் துணை செய்ய எண்ணியதோ என்னவோ, தம் ஊருக்குச் சென்ற அந்தக்'கம்பெனி'முதலாளி, சில நாட்களில் பெருத்த சிக்கில்

படுத்த படுக்கையாகி விட்டார். ஆகவே, கம்பெனியின் வியவகாரங்களை மானேஜரே கவனித்து வரும்படி ஆயிற்று.

இப்போது அதிகாரம் முழுவதும் மானேஜர் கைக்கு வந்து விட்டது. இனி, சாம்பசிவத்தைத் தொலைக்க ஒரு தடையும் இல்லையல்லவா? இருந்தாலும் எதாவது ஒரு காரணத்தை வைத்துத்தானே வேலையிலிருந்து நீக்க வேண்டும்? ஆகவே, மானேஜரும் அவருடன் சேர்ந்த மற்ற சிப்பந்திகளுமாகச் சேர்ந்து சதித் திட்டம் ஒன்றைத் தயார் செய்தார்கள்.

* * *

3

அன்று ஆபீஸில் அதிக வேலை.

சாம்பசிவம் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு மும்முரமாக வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது ஓர் ஆள், அவரிடம் ஒரு கவரை யாரோ ஒருவர் கொடுத்ததாகச் சொல்லிக் கொடுத்து விட்டுப் போனான். வேலை மும்முரத்தில் இருந்த சாம்பசிவம் அவன் சொன்னதைக் கவனியாமல், கவரை வாங்கி அப்படியே மேஜைமேல் வைத்து விட்டு, மறுபடியும் வேலையில் ஈடுபட்டார்.

சிறிது நேரம் கழித்து மானேஜரும், அவருடைய ஆட்களும் சாம்பசிவம் அறைக்குள் நுழைந்தனர். மானேஜரைக் கண்டவுடன் சாம்பசிவம் மரியாதையாக எழுந்து நின்றார். மானேஜர் உட்கார்ந்தவுடன் அவர் உட்கார்ந்தார் ; மற்றவர்களும் அருகிலே சென்றனர்.



“டேய், முரளி மரத்திலே ஏறிப் பழத்தைப் பறித்துப் பறித்துப் போடட்டும். நாம் அவனுக்கு இல்லாமல் சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தீர்த்து விடலாம்”

“மிஸ்டர் சாம்பசிவம்! கொஞ்ச நேரத்திற்குமுன் யாரோ ஒருவன் ஒரு கவர் கொண்டுவந்து கொடுத்தானே, அது யார் கொடுத்தனுப்பியது? அதில் என்ன இருக்கிறது?” என்று சரமாரியாகக் கேட்டார், மானேஜர்.

“யாரோ கொடுத்ததாகச் சொன்னான். வேலை மும்முரத்தில் இருந்த நான் அதைக் கவனிக்கவில்லை. அதில் என்ன இருக்கிறது என்றும் தெரியாது : அதைப் பிரிக்கவில்லை. இதோ அந்தக் கவர்” என்று கூறிக் கவரை மானேஜரிடம் கொடுத்தார் சாம்பசிவம்.

மானேஜர் அதை வாங்கிப் பிரித்தார். அதில் இருபது ரூபாயும் ஒரு கடிதமும் இருந்தது. அதில் :

‘இதை இன்று நீங்கள் எதிர்பார்த்திருக்க மாட்டிர்கள். இன்று திடீரென்று சிறிது ரூபாய் கிடைத்த

தால் இதை அனுப்பியிருக்கிறேன். நீங்கள் கேட்ட மீதியை இன்னும் ஒரு வாரத்தில் கொடுத்து விடுகிறேன். நான் கேட்ட சாமான்களை இரகசியமாக என் வீட்டுக்கே நேராக அனுப்பிவிடுங்கள்.

இப்படிக்கு,
கந்தசாமி முதலியார்.'

என்று இருந்தது.

"ஹா!...ஹா! உமக்கு ஒன்றுமே தெரியாது! பச்சைக் குழந்தை!...ஆனல், நீர் பெரிய வஞ்சப் பேர்வழி என்று எமக்குத் தெரியும்... இந்தப் 'ப்ளாக் மார்க்கெட்' கந்தசாமிக்கு நீர் இரகசியமாக நம் கம்பெனியிலிருந்து சாமான்கள் அனுப்புவது தெரியாது என்று நினைத்தீர்?" என்ருர் மானேஜர்

தம் வாழ்க்கையிலேயே இம் மாதிரியான ஒரு காரியத்தை மனத்தினுலும் நினைத்தறியாத சாம்பசிவத்திற்கு இதையெல்லாம் கண்டவுடன் மயக்கமே வந்துவிடும் போல் இருந்தது.

"ஸார்! எனக்கு இதெல்லாம் ஒன்றுமே தெரியாது. கந்தசாமி யாரென்பது கூட எனக்குத் தெரியாது. என் வாழ்க்கையிலேயே இந்த மாதிரிக் காரியத்தை மனத்தால் நினைத்தது கூடக் கிடையாது. யாரோ வேண்டுமென்றே சூழ்ச்சி செய்திருக்கிருர்கள்" துக்கம் அவர் தொண்டையை அடைத்தது. கண்களிலே நீர் பெருகி வழிந்தது.

"குற்றம் செய்த தோடல்லாமல் முதலைக்கண்ணீர் வேறு விடுகிறீரோ! போதும், நீர் வேலை பார்த்த லட்சணம். உம் வேலை இன்றேடு தீர்ந்தது!" என்ருர் அந்த வஞ்சக மானேஜர்.

சாம்பசிவம் கதறினர்; புலம்பினர்; கெஞ்சினர். ஆனல், அந்தக் கல் நெஞ்சன் இணங்கவே இல்லை. ஏழை சொல் அம்பலம் ஏறுமா?

சாம்பசிவத்தின் வீட்டிலே கண்ணீரும் கம்பலையும்தான்! இன்பச் சோலையாக இருந்த குடும்பம் இப்போது ஒரு வறண்ட பாலைவனமாகப் போய் விட்டது.

எவ்வளவோ இடங்களில் வேலைக்காக அலைந்தார் சாம்பசிவம். எங்கும் வேலை காலி இல்லை என்ற பதில்தான் அவருக்குக் கிடைத்தது.

ஒரு நாள் மாலை. ஐந்து மணி இருக்கும். மாலைக் கதிரவன் தன் மஞ்சள் கிரணங்களால் மானிலத்தோரை மகிழ்வித்துக் கொண்டிருந்தான். அடிவானத்தில் சிவப்பு நிறத்தில் தோன்றிய அந்த மஞ்சள் வர்ணக் கதிரவன் கண் கொள்ளாக் காட்சியாய் விளங்கினுன்.

அந்த வீதியில் குழந்தைகளும், சிறுவர்களும், சிறுமிகளும் மகிழ்வுடன் உலகையே மறந்தவண்ணம் விளையாடிக் கொண்டிருந்தனர்.

பள்ளியிலிருந்து அந்த வீதியின் வழியாகக் கையில் பைக்கட்டுடன் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவாறு வந்து கொண்டிருந்தான் ஆனந்தன்.

'பாம்-பாம்' என்று அலறிக் கொண்டு வந்த மோட்டாரின் 'ஹாரன்' ஒலி அவன் சிந்தனையைக் கலைத்தது. நிமிர்ந்து திரும்பிப் பார்த்தான் ஆனந்தன். ஒரு 'பிளஷர் கார்' வேகமாக வந்து கொண்டிருந்தது.



திடீரென்று ஒரு குழந்தை, ஐந்து அல்லது ஆறு வயது இருக்கலாம்-வேகமாக ஓடி வந்து தெருவில் நின்றது. இதற்குள் கார் குழந்தையை நெருங்கிவிட்டது. இன்னும் ஒரு நிமிஷத்தில்—ஆ!...

நிலைமையைப் புரிந்து கொண்டான் ஆனந்தன். ஓடினான் குழந்தையைக் காப்பாற்ற!

குழந்தையை நெருங்கிவிட்டான் ஆனந்தன். ஐயோ! ஆனால் தடுக்கி விழுந்துவிட்டான்!...

'சர்...ர்...ர்...சக்' ஐயோ! ஒரே இரத்தம்! பின்னால் வந்த பிளஷர் கார், ஆனந்தனின் மேல் ஏறி நின்றது. இதைக் கண்டு பீதியடைந்த குழந்தை 'வீல்' என்று அழ ஆரம்பித்தது!

இவ்வளவு நேரம் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்ற அக் குழந்தையின் தகப்பனார் ஓடோடி வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆனந்தனிடம் ஓடினார். அவர் தான், ஆனந்தனின் அப்பா வேலை பார்த்துவந்த கம்பெனியின் முதலாளி தாமோதரன்!

ஆனந்தன் விழுந்துகிடந்த இடத்தைச் சுற்றி ஒரே கூட்டம். அவர்களை விலக்கிக்கொண்டு பார்த்தார் தாமோதரன். இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தான் ஆனந்தன். அங்கு காரில் வந்த இருவரும் நின்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் அந்த மோட்டார் டிரைவர்; மற்றொருவர் ஆம், அவர் தான் அந்தக் கம்பெனி மானேஜர்!

முதலாளி தாமோதரனைக் கண்டதும், மானேஜரின் முகம் கறுத்தது; ஏனோ அவர் உடலெல்லாம் நடுக்கம் எடுத்தது. தாமோதரனை

தாம் இந்த இடத்தில் எதிர்பார்க்கவே இல்லை என்பதை அவர் முகம் நன்கு எடுத்துக் காட்டிற்று. இருந்தாலும் ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டார். ஆனால், தாமோதரனே இவ்வளவையும் கவனித்தும் கவனிக்காதது போல் இருந்து விட்டார்.

"ஸார்! பையனைத் தூக்குங்கள். ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டும். சீக்கிரம்! சீக்கிரம்!" என்றார் தாமோதரன்.

உடனே ஒரு பெரிய துணியால் ஆனந்தனின் மேலுள்ள இரத்தத்தைத் துடைத்து அதே காரின் பின் 'ஸீட்'டில் தூக்கி வைத்தார்கள். கார் ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தது.

ஆஸ்பத்திரியில் அவனை ஒரு கட்டிலில் போட்டு, மண்டை, கை, கால்களிலுள்ள இரத்தத்தைத் துடைத்துக் கட்டுப் போட்டார், டாக்டர்.

"டாக்டர் ஸார்! அவசியம் நீங்கள் இந்தப் பையனைக் காப்பாற்றவேண்டும். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை" என்று கூறி எல்லா விஷயத்தையும் கூறினார், தாமோதரன்.

"என்னால் முடிந்தவரை பார்க்கிறேன். இப்போது பையன் மயக்கத்தில் இருக்கிறான். மயக்கம் தெளிவதற்கு மருந்து கொடுத்திருக்கிறேன்" என்றார் டாக்டர்.

இதற்குள் ஆனந்தனின் அப்பாவிற்குத் தகவல் அனுப்பப்பட்டது. போலீஸ் விசாரணைக்காக மானேஜரும், கார் டிரைவரும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றனர்.

மாலைப் பொழுது கடந்து இரவும் வந்து விட்டது.

* * *

4

கண் திறக்காமல் படுத்துக் கொண்டிருந்தான் ஆனந்தன். "ஐயோ! ஆனந்தா!" என்று அலறியவண்ணம் ஆஸ்பத்திரிக்குள் ஓடி வந்தார்கள், ஆனந்தனுடைய அம்மா, அப்பா, தங்கை விமலா மூவரும்!

கட்டிலுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டிருந்த தாமோதரனைக் கண்டதும் சாம்பசிவம் திடுக்கிட்டார்.

"நீங்களா!......நீங்களா! என் மகனை இந்நிலைக்கு ஆளாக்கிய பாவி நீங்களா!" என்று ஆத்திரத்தில் உளறினார் சாம்பசிவம்.

"ஒரு விதத்தில் நான்பாவிதான்! ஆனால், இக்காரியத்தைச் செய்த பாவி, துரோகி—நம் கம்பெனி மானேஜர்தான்" என்றார் தாமோதரன்.

"ஆ ..அடப்பாவி! என்னைக் கெடுத்தது போதாதென்று என் மகனின் உயிருக்கும் உலை வைத்து விட்டானே! பாவி! ஆனந்தா!... ஆனந்தா! டாக்டர், டாக்டர்... என் கண்மணி பிழைப்பானா டாக்டர்!" என்று கதறி அழுதார், சாம்பசிவம்.

"உஷ்! சத்தம்போடாதீர் சாம்பசிவம். ஆனந்தன் மயக்க முற்றிருக்கிறான். அவனுக்கு மயக்கம் தெளிவதற்கு மருந்து கொடுத்திருக்கிறேன். இன்று இரவிற்குள் மயக்கம் தெளிந்து விட்டால் நிச்ச

யம் பிழைத்துவிடுவான். கவலைப் படாதீர்கள்'' என்று தேற்றினர் டாக்டர்.

இருந்தபோதிலும் சாம்பசிவமும் அவர் மனைவியும் புலம்பிக் கொண்டேதான் இருந்தனர். விமலாவும் 'அண்ணா, அண்ணா' என்று அழுதுகொண்டே இருந்தாள்.

இரவு வெகு நேரத்திற்குப்பின் ஒருதடவை கண் விழித்தான் ஆனந்தன். உடனே எல்லோர் வயிற்றிலும் பாலை வார்த்ததுபோல் இருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும் கண்ணை மூடிக் கொண்டான்.

''இனிமேல், பையன் பிழைத்து விடுவான். இது நிச்சயம்'' என்றார் டாக்டர். பிறகு ஏதோ சில ஊசிகள் போட்டார் ஆனந்தனுக்கு.

இப்போது, டாக்டர் வார்த்தையில் ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டது. அங்கிருந்த எல்லோருக்கும் டாக்டருடைய இந்த வார்த்தை ஓரளவு ஆறுதலளித்தது.

* * *

5

தாமோதரனுக்கு உடம்பு குணமாகி ஒரு மாதம் ஆகிறது. ஆபீஸில் குழப்பங்களும், ஊழல்களும் அதிகமாகப் போய்விட்டது என்ற தகவல் தெரிந்தது அவருக்கு.

ஆகவே, அவர் மானேஜருக்குக் கூட தகவல் தெரிவிக்காமல் அந்த ஊருக்குப் புறப்பட்டார். வீட்டிலிருந்து புறப்படும் சமயத்தில் 'நானும் உன்னுடன் வருவேன்' என்று பிடிவாதம் பிடித்த கடைசிக் குழந்தையையும் கூட்டிக்கொண்டு வந்தார்.

அந்த ஊரில் தன் உறவினர் ஒருவர் வீட்டில் தங்கினர் தாமோதரன். அந்த உறவினர் ஆனந்தனின் தந்தை சாம்பசிவத்திற்கு நெருங்கிய நண்பர். அவருக்கு, அந்த ஊர்க் கம்பெனி மானேஜர், சாம்பசிவத்தை அநியாயமாக வேலையிலிருந்து நீக்கியதெல்லாம் தெரியும். ஆகவே, அவர் எல்லா விஷயங்களையும் தாமோதரனிடம் சொன்னர். தாமோதரன் அதைக் கேட்டவுடன் மிகவும் வருத்தமடைந்தார். மறுநாளே அந்த மானேஜரை வேலையிலிருந்து நீக்கி விடுவதாகவும், அவருக்குப் பதில் சாம்பசிவத்தை மானேஜராக நியமித்து விடுவதாகவும் சொன்னர்.

இவ்வாறு அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதுதான், தாமோதரனுடைய குழந்தை வெளியே ஓடினன். அப்போது ஒரு பிளஷர் கார் வந்து கொண்டிருந்தது. அதைக் கவனிக்காமல் அந்தக் குழந்தை நின்றுகொண்டிருந்தபோதுதான், அந்த வழியே வந்த ஆனந்தன் அச்சிறுவனைக் காப்பாற்ற ஓடிவந்து காரில் அகப்பட்டுக் கொண்டான். அந்தக் காரில் வந்தது அந்தக் கம்பெனி மானேஜர்தான்!

மேற்சொன்ன எல்லா விஷயங்களையும் சாம்பசிவத்திடம் கூறினர் தாமோதரன்.

"ஸார் சாம்பசிவம்! உங்கள் மகன் என் குழந்தையைக் காப்பாற்றியதோடு, நம் கம்பெனிக்கே ஒரு பெரிய காரியத்தையும் செய்திருக்கிறன். நேற்றுமட்டும் அந்த மானேஜரை ஆனந்தன் தடுத்து நிறுத்தியிருக்காவிட்டால் நம் கம்பெனி இன்று இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும்.''

சாம்பசிவம் ஒன்றும் புரியாதவராய்த் திகைப்புடன் தாமோதரன் முகத்தைப் பார்த்தார்.

"உமக்கு ஒன்றும் புரியவில்லையல்லவா? விளக்கமாகச் சொல்கிறேன்; கேளுங்கள். நேற்று நம் மானேஜர் கம்பெனியிலுள்ள ரொக்கப் பணம் லக்ஷத்திற்கு மேற்பட்ட ரூபாய்களுடன் கம்பி நீட்டிவிட எண்ணி அன்று பிளஷர் காரில் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று கொண்டிருக்கும்போதுதான் ஆனந்தனுக்கு ஏற்பட்ட விபத்தால் தடுத்து நிறுத்தப்பட்டான். என்னை அவன் முதலில் கண்டபோதே நடுங்க ஆரம்பித்தான். ஆனல், அதைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. பிறகு, இங்கு வந்தவுடன் அவன் போலீஸ் விசாரணைக்காக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றன். அப்போது அவன் முகம் பேயறைந்தது மாதிரி பயம் குடிகொண்டிருந்தது. இது என் சந்தேகத்தை இன்னும் அதிகப்படுத்தியது. ஆகவே, அவன் செல்லும்போது அவன் பெட்டி படுக்கை எல்லாவற்றையும் இங்கே வைத்துவிட்டுப் போகும்படி கண்டிப்பான உத்திரவிட்டேன். அவன் சென்ற பிறகு அவன் பெட்டியைச் சோதித்ததில் அதில் ஏராளமான நோட்டுக்கள் கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. உடனே, இதைபோலீஸ் ஸ்டேஷனுக்கு போன் மூலம் தெரிவித்து, அவனைக் கைதாக்கும்படி சொன்னேன். இப்போது அவன்

கைதாகி இருப்பான். ஸார்! ஆனந்தன் எனக்குச் செய்திருக்கும் உதவியை என்றுமே மறக்க முடியாது. நான் அவனுக்கு என்ன செய்தாலும் அது அவன் செய்ததற்கு ஈடாகாது"...என்று சொல்லி முடித்தார் தாமோதரன்.

* * *

6

அன்று தீபாவளி. ஆனந்தனும் விமலாவும் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டுப் பட்டாடை உடுத்தி ஆனந்தமாகப் பட்டாசு விட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய அப்பா, இப்போது அந்த ஊர்க் கம்பெனியின் மானேஜர். ஆகவே அவர் நிறையப் பட்டாசுகளும், வெடிகளுமாக வாங்கிக் கொடுத்தார், அவர்கள் இருவருக்கும்.

போதாக் குறைக்குத் தாமோதரன் வேறு ஏராளமாகப் பட்டாசுகளும், துணிமணிகளும் வாங்கிக் கொடுத்திருந்தார்.

ஆனால், எதிர்த்த வீட்டு மணியோ இவர்களைப் பார்த்த வண்ணம் பரிதாபமாக நின்று கொண்டிருந்தான்.

பட்டாஸ் விட்டுக் கொண்டிருந்த ஆனந்தன் நிமிர்ந்தான். பரிதாபமாக நின்று கொண்டிருந்த மணியைப் பார்த்தான். உடனே தங்களுடைய பழைய நிலைமை அவன் கண் முன்னால் தோன்றி மறைந்தது. ஒரு நிமிஷம்தான் இது.

ஆனால், அடுத்த நிமிஷம் 'விருட்' டென்று உள்ளே ஓடினான். கை நிறையப் பட்டாசுகளை அள்ளிக் கொண்டு வந்து, மணியைக் கூப்பிட்டு அவனிடம் கொடுத்தான்.

பார்த்தான் மணி. 'அன்று மாம் பழத்தை மிகவும் கர்வமாகத் தின்று கொண்டு அவனை அலட்சியம் செய்தோம். அப்படிப்பட்ட நமக்கு ஆனந்தன் கைநிறையப் பட்டாஸ் கொடுக்கின்றானே!' என்று வியந்தான்.

"ஆனந்தா!" என்று உணர்ச்சியுடன் கத்தியவாறே ஆனந்தனைக் கட்டிக் கொண்டான்.

ஆனந்தன், மணி, விமலா மூவரும் உல்லாசமாகப் பட்டாஸ் விட்டனர். சாம்பசிவமும், லக்ஷ்மி அம்மாளும் தங்கள் மைந்தர்களைப் பார்த்தவண்ணம் மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். ஆஹா! என்ன ஆனந்தமான தீபாவளி! இந்த ஆனந்தமான சமயத்தில் 'எல்லாம் இன்ப மயம்' என்ற கீதம் காற்றோடு கலந்து வந்து அவர்கள் காதில் ஒலித்தது!

மூடப் பழக்க வழக்கங்கள்

நம் சமூகத்தில் பல மூடப்பழக்க வழக்கங்கள் ஒரு பெரிய கோட்டையைப்போல் ஓங்கி நிற்கின்றன. அக் கோட்டையைத் துப்பாக்கியால் துளைக்க முடியாது; பீரங்கியால் பெயர்க்க முடியாது. அணுகுண்டாலும் அழிக்க முடியாது. இளைஞர்கள் மனம் வைத்தால்தான் அக்கோட்டையைத் தகர்க்கலாம்; தரை மட்டம் ஆக்கலாம்; தவிடுபொடி செய்யலாம்.

சின்னக் கண்ணன்

'தம்பி'

காலை முழுதும் அப்பா மடியில்
கண்ணன் மிகவும் சாதுதான்!
மாலை வரையில் கண்ணன் கொடிய
மன்னன் எங்கள் வீட்டிலே!

குளிக்கும் போதும், உடுக்கும் போதும்
கோலம் போடும் பொழுதிலும்
அளிக்கும் தொல்லை எத்தனையோ!
ஆனால், அக்கா கோபியாள்!

அண்ணன் வைத்த மசியைக் கொட்டி
அறையில் ரகளை பண்ணுவான்.
எண்ணத் தொலையா விஷமம் செய்தும்
எங்கள் அண்ணன் ஏசிடான்!

சமையல் அறையில் புகுந்து விட்டால்
தாயின் பாடு பாவமே!
இமைக்கும் பொழுதில் மோரைக் கொட்டி
எள்ளை அள்ளி வீசுவான்!

பிரிய மிருந்தால் தூங்கி விடுவான்.
பிடித்த மானால் உண்ணுவான்.
அரிய வேலை யாகும் அவனை
அடக்க முயலும் வேலையே!

சின்னக் கண்ணன் ஓய்வில் லாமல்
சிரித்து மழலை பேசுவான்.
கன்னங் குழியச் சிரித்து நமது
கவலை கோபம் போக்குவான்!

'துஷ்டப் பிள்ளை' என்று நாங்கள்
சொல்லு வோமே செல்லமாய்!
இஷ்டப் பிள்ளை யாவ ருக்கும்
எங்கள் சின்னக் கண்ணனே!

மாரியாத்தாள் புண்ணியத்தாலோ, எந்த மண்ணுங்கட்டி புண்ணியத்தாலோ இரிச னுக்குக் கிடைக்க விருந்த ஆபீஸ் பையன் வேலை 'அரோகரா'வாய்ப் போயிற்று! காரணம்?

என்ன காலம்?

** தங்கமணி **

சனிக்கிழமை. பகல் பன்னிரண்டு மணி இருக்கும். தீயும்வெய்யிலில் திரிந்தலைந்து விட்டுக் களைப்புடன் - ஆனால், ஏதோ...ஒருவிதக் களிப்புடன்- குடிசைக்குள் நுழைந்தான், இரிசன்.

"இரிசா...வந்து விட்டாயா! வா...உட்கார். இந்தா, இந்தக் கஞ்சித் தண்ணீரைக் குடி... ம்...என்ன ...எங்கேயாகிலும் ஏதாவது வேலை கிடைத்ததா...?" என்று, வந்ததும் வராததுமாக இரிசனை வர வேற்று உபசரித்துக் கேட்டாள், அவன் அம்மா.

இரிசன் சிரித்தான். சிரித்துக் கொண்டே பாயின் மீது உட்கார்ந்தான். அவன் சிரிப்பைக் கண்ட அம்மாவின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

"ஏனடா...சிரிக்கிறாய்! வேலை கிடைத்துவிட்டதா?..."

"கிடைத்துவிட்டதுபோலத் தான்! இன்று காலையிலிருந்து எங்கெங்கோ... சுற்றினேன். எங்கெங்கேயோ...போய் வேலை கேட்டேன். கெஞ்சினேன். வேண்டினேன். எங்குமே வேலை கிடைக்கவில்லை. கடைசியில்... மனச்சோர்வுடன் 'பாரட் அன் கோ' என்னும் ஒரு கம்பெனிக்குள் நுழைந்தேன். அது வெள்ளைக்காரர் கம்பெனி. காவலாளியைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு உள்ளே சென்றேன். நேராகத் துணிச்சலுடன் துரையிடமே சென்றேன். விஷயத்தை விளக்கிக் கூறி வேலை கேட்டேன். அவர் வெள்ளைக்காரராயிருந்தாலும் மிகவும் இரக்கமுள்ள மனிதரம்மா; கருணைக் களஞ்சியம் அம்மா. போற்றுதலுக்குரிய நல்லவரம்மா...அவர் மனம் இரங்கி என்னை ஆபீஸ் பையன் வேலைக்கு எடுத்துக் கொண்டார் அம்மா. திங்கட்கிழமை, சரியாக எட்டரை மணிக்கு வேலைக்கு வரச்சொல்லி அனுப்பினார்......"

"இன்றைக்காவது மாரியாத்தாளின் மனமிரங்கிற்றே! எல்லாம் அவளுடைய கருணை தான்!..." என்று அம்மா கூறி

விட்டு, மாடத்திலிருந்த திருவிளக்கைக் கையெடுத்துக் கும்பிட்டாள். அவளுடன் இரிசனும் கும்பிட்டான்.

பிறகு—சனியும், ஞாயிறும் கழிந்தன. திங்கள் வந்தது. இரிசன், அன்று காலை ஐந்து மணிக்கே விழித்தெழுந்து விட்டான். உடனே குளித்துப் பட்டை பட்டையாக விபூதியிட்டுக் கொண்டான். மாரியாத்தாள் கோயிலுக்குச் சென்றான். கணக்கு வழக்கின்றிக் கன்னத்தில் அறைந்து கொண்டான். தோப்புக் கரணங்களிட்டான்.

அதன் பிறகு—ஞாயிறன்று வெளுத்து வைத்திருந்த சட்டை,வேட்டியை எடுத்தான். உடுத்துக்கொண்டான். அம்மா ஆனந்தப் புளகிதமுடன் தகரக் குவளையில் ஊற்றி வைத்த கஞ்சியை எடுத்தான். அவசர அவசரமாய்க் குடித்தான். எழுந்தான். புது வேலைக்குச் செல்லும் அவன் மனத்தில் விடுதலை பெற்ற மானைப் போல் இன்பம் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. அப்படியே அவன் ஓடினான். அருகிலிருந்த 'திருவாங்கூர் டீ ஸ்டாலு'க்குச் சென்றான். 'டீ ஸ்டாலி'லிருந்த கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி எட்டு!

இரிசன் குடிசைக்குத் திரும்பி வந்தான். "அம்மா, மணி எட்டாகிவிட்டது. இன்னும் அரை மணி நேரந்தான் இருக்கிறது. போவதற்குச் சரியாயிருக்கும். நான் போய் வரட்டுமா..?" என்று தன் அம்மாவைப் பார்த்துப் புன்னகையுடன் கேட்டான்.

அம்மா "போய் வாடா... என் கண்ணே" என்று விடை கூற வாயைத் திறந்தாள்......

ஆனால், அதற்குள்—

அடுத்த வீட்டுக் கிழவர் ஒருவர் அங்கே, அவர்களிடம் வந்தார். அம்மாவை விசாரித்தார். அம்மா விஷயத்தைக் கூறினாள். அதைக் கேட்டதும், "என்ன பொன்னம்மா, நீ ஒரு புத்தி கெட்ட பெண்ணாயிருக்கிறாயே! உம்!...குழந்



தைக்கு மாரியாத்தாள் புண்ணியத்தில் வேலை கிடைத்திருக்கிறது...அதைப் போய் நாசப்படுத்தவா திங்கட்கிழமை அதுவும், சரியான இராகு காலமான எட்டு மணிக்கு வேலைக்கு அனுப்புகிறாய்! வேலை கிடைக்குமா? கிடைத்தாலும் நிலைக்குமா!... திங்கட்கிழமை ஏழரை முதல் ஒன்பது மணிவரை சரியான இராகு காலமாயிற்றே !...அடே, கண்ணு. ஒன்பது மணிக்கு மேலே வேலைக்குப் போ..." என்று கூறிவிட்டு, வந்த வழியே சென்றார், அக்கிழவர்.

அம்மாவும், அக் கிழவரின் போதனைப்படியே, தன் மகனை ஒன்பது மணிக்கு மேல்-அதாவது, இராகு காலம் கழித்தே-வேலைக்கு அனுப்பிவைத்தாள்.

இரிசன் ஒன்பதடித்ததும் ஓடினான். என்னதான் வேகமாய் விரைந்தோடியும், அவன் 'பாரட் அன் கோ'வை அடைவதற்குள் மணி ஒன்பதரை ஆகிவிட்டது.

இரிசன், சட்டை வேட்டியைச் சரிப்படுத்திக் கொண்டான். துரையிடம் சென்றான். வணக்கம் புரிந்தான். அவர் இரிசனை நிமிர்ந்து பார்த்தார். பிறகு கடிகாரத்தைப் பார்த்தார். மீண்டும் இரிசனை முறைத்துப் பார்த்துக் கேட்டார்:

"யார் நீ...?"

"சனிக்கிழமை யன்று... ஆபீஸ் பையன்...வேலைக்கு... வரச்சொல்லி..."

"ஆபீஸ் பையன் வேலைக்கு வரச் சொன்னேனு...! சரி, எத்தனை மணிக்கு வரச் சொன்னேன்...?"

"எட்டரை மணிக்கு... சார்..." என்றான், இரிசன்.

"இப்போது மணி என்ன...?"

இரிசன் அங்கிருந்த சுவர்க் கடிகாரத்தை நிமிர்ந்துபார்த்துவிட்டு "ஒன்பது முப்பத்தைந்து சார்..." என்றான்.

"ஏன் இவ்வளவு 'லேட்'?..."

"இன்றைக்குத் திங்கட்கிழமை...ஏழரை முதல் ஒன்பது மணிவரை இராகு காலம்..."

"சட்...இடியட்! கெட் அவுட்! இப்படித் தினந் தினமும் இராகு காலம் பார்த்துக் கொண்டு வந்தால்...ஆபீஸ் உருப்பட்டாற் போல்தான்..."

"சார்..."

"கெட் அவுட்! போ வெளியே! ஆரம்பத்திலேயே தாமதமாய் வருகிறவன். உம்... போ, வெளியே! ஏ... கூர்க்கா!..."

கூர்க்காவுக்கு வேலை கொடுக்க விரும்பாத இரிசன், 'விர்'ரென்று வெளியேறிக் குடிசையை நோக்கி நடந்தான். சிந்தனை அவன் உடைந்த உள்ளத்தை ஆட்கொண்டது. அப்போது அவன் உள்ளத்திலிருந்து சிதறி விழுந்தது, ஒரு கேள்வி:

"...என்னைக் கெடுத்தது இராகு காலமா? அல்லது, இராகு காலத்தை நம்பிய என் பொல்லாத காலமா...?"



குருவியும் கருமியும்

கருத்து : ஈசாப்　　　　பாடல்: வள்ளியப்பா

சிட்டுக் குருவி ஒருவீட்டின்
　　சிறிய அறைக்குள் மெதுவாக
எட்டிப் பார்த்தது. அங்கொருவர்
　　எண்ணிப் பார்த்தார், காசுகளை.

காசுகள் யாவும் பொன்னாகும்!
　　கருத்துடன் அவற்றைத் தினம்தினமும்
ஓசையில் லாமல் எண்ணிடுவார்;
　　ஒருமுறை யல்ல; பல முறைகள்!

'காசே கடவுள் எனக்கருதும்
　　கருமி, கருமி, கருமியடா.
மோசக் காரர்!' என்றவரை
　　வெறுப்புடன் ஊரார் பேசிடுவார்.

அந்தக் கருமி சிறுபொழுது
　　அயர்ந்திடக் குருவி பாய்ந்தோடி
வந்தொரு காசைத் தூக்கியது;
　　வைத்தது, அங்கொரு பொந்தினிலே.

கண்டனர் கருமி; பற்களையே
　　கடித்தனர்; கோபம் மிகமிகவே
கொண்டனர். "சிட்டே, உன்செயலால்
　　கொஞ்சமும் உனக்குப் பயனுண்டோ?

திருடிய காசைத் தின்பாயோ ?
செலவிடும் வழிதான் தெரிந்திடுமோ ?
திருகியே கொல்வேன் உன் கழுத்தை.
சிச்சீ, காசைக் கொடு" என்ருர்.

" ஐயா, உலகம் அறிந்தவரே !
அறிவுரை கூறும் பெரியவரே !
மெய்யைச் சிறிதும் உணராமல்
வீணுய்க் கோபம் கொள்ளுவதேன் ?

தேவையும், பயனும் தெரியாமல்
திருடினேன் எனவே கூறுகிறீர்.
தேவையும் பயனும் உணர்ந்திடும்நீர்
செய்திடும் வேலை தெரியாதோ ?

எவர்க்கும் உதவி செய்யாமல்,
ஏதும் இன்பம் அடையாமல்,
பவுனைச் சேர்த்துத் தினம்தினமும்
பார்த்துக் காத்து வருகின்றீர்.

ஒற்றைக் காசை நானெடுத்து
ஒளித்தது மிகமிக மிகப்பெரிய
குற்றம் என்றீர். என்னையுமே
கொல்லுவ தாக மிரட்டுகிறீர்!

ஒற்றைக் காசை ஒளித்ததற்கே
உயிரை வாங்குவ தெனச்சொன்னல்,
இத்தனை காசையும் ஒளித்தவர்க்கே,
எப்படித் தண்டனை கொடுப்பதுவோ ?"

என்றே கூறிப் பொற்காசை
எறிந்தது ; குருவி பறந்ததுவே!
ஒன்றும் கூறிட முடியாமல்
உயரப் பார்த்தனர் கருமியுமே !

—★—

பழைய புத்தகம்

'பவானி'

காட்சி 1

(அப்பா சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தவண்ணம் பத்திரிகை படிக்கிருர். அப்பொழுது கோபு வருகிருன்)

கோபு : அப்பா!

அப்பா : என்னடா?

கோபு : பாடமெல்லாம் ஆரம்பித்தாகிவிட்டது!

அப்பா : அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிருய்?

கோபு : புத்தகமெல்லாம் வாங்க வேண்டும்.

அப்பா : பள்ளிக்கூடம் திறந்தவுடன் 'சம்பளம், சம்பளம்' என்று சொல்லி என் உயிரை வாங்கிச் சம்பளம் கட்டினுய். இப்போது 'புத்தகம், புத்தகம்' என்று புலம்புகிருய். பாழாய்ப் போச்சு போ, நீ படிக்கிற லட்சணம்! எண்டா, இப்பொழுதுதானே இருபது அழுதேன்! சரியாய்ப் படிப்பதே இல்லை, ஊர் சுற்றத்தான் தெரியும்.

கோபு : இல்லையப்பா, இந்த வருஷம் நன்ருய்ப் படிக்கிறேன். புத்தகம் வாங்கித்தாப்பா.

அப்பா : ஆமாம், நான் வாங்கித் தருகிறேன். நீ தினமும் வாசனை பார். அப்படித்தானே!

கோபு : புத்தகமில்லாமல் எப்படியப்பா படிக்கிறது!

அப்பா : ம்...! படிக்கிறவர்களெல்லாம் மனுஷர் இல்லையாக்கும். உன் அப்பா—அதுதாண்டா நான், புத்தகமில்லாமலே ஒவ்வொரு பாடத்திலும் 60, 70 என்று 'மார்க்' வாங்குவேன். இவர் படிக்கிற லட்சணத்திற்குப் புத்தகம் ஒன்றுதான் குறைச்சல்!

கோபு : அதெல்லாம் எனக்குத்தெரியாது! 'விஞ்ஞானப் புத்தகமில்லாமல் வகுப்புக்குள்ளே காலை வைக்கக்கூடாது' என்று கூறிவிட்டார்......

அப்பா: அது யாரடா, அந்தப் பெரிய மனுஷன்?

கோபு: அவர் தானப்பா, விஞ்ஞான வாத்தியார் வேதாசலம்.

அப்பா: அட வேதாசலம்...ஏண்டாப்பா பையன்களிடம் சொல்லி எங்கள் உயிரை வாங்கச் சொல்கிருய்?...ஏண்டா, அவருக்குக் கல்யாணமாகி விட்டதா?

கோபு: ஏன்? நம் அக்காளை அவருக்குக் கொடுத்து, மாப்பிள்ளையாக்கி விட்டால், புத்தகம் வாங்காமலே 'டிமிக்கி' கொடுக்கலாம் என்கிறீர்களா?

அப்பா: டேய், அதிகப் பிரசங்கி! அதற்குக் கேட்கவில்லை. கல்யாணமானல் 'கஷ்டம்' தெரியும் மனுஷனுக்கு. அதனல்தான் கேட்டேன்.

கோபு: அவருக்கு இன்னும் ஒன்று பிறந்தால் சரியாக ஒரு டஜன் ஆகிவிடும்!

[அம்மா வருதல்]

அம்மா: என் பையனை இந்த மாதிரிக் கேள்விகளெல்லாம் கேட்கிறீர்கள்?

அப்பா: நீ வேறே வந்து விட்டாயா? அது கெட்டது போ!

அம்மா: எது கெட்டது? நான் வந்தால் என்னவாம்?

அப்பா: என்னவா? ஏண்டி, நீயா என்னை அதிகாரம் பண்ணுகிருய்?

அம்மா: நீங்கள்தான் அதிகாரம் பண்ணுகிறீர்கள். ஏதோ பையன் கேட்கிருன்...

அப்பா: கேட்கிருன். உடனே பெட்டிச் சாவியைக் கொடுத்து அனுப்புவதுதானே!

அம்மா: உங்களோடு மனுஷாள் பேச முடியாது.

அப்பா: அப்படியானல் இந்நேரம் பேசியது மாடா? (கோபு பக்கம் திரும்பி) அடே, சிரேஷ்ட குமாரா! உனக்கு எவ்வளவுடா வேண்டும்?

கோபு: மூன்று ரூபாய்.

அப்பா: ரொம்பக் குறைவாய்க் கேட்கிருயே! போடா மடையா! பணக் கஷ்டம் தெரிந்தால்தானே! பழைய புத்தகமாய்ப் பார்த்து வாங்கு! இந்தா ஒன்றை ரூபாய்.

(ஒரு ரூபாய் நோட்டு ஒன்றையும், எட்டணு நாணயம் ஒன்றையும் அவனிடம் கொடுக்கிருர்)

காட்சி 2

(ஸ்ரீதரன் வீடு. திண்ணையில் ஸ்ரீதரன் உட்கார்ந்திருக்கிருன். அவ்வழியாக வரும் கோபு அவனைப் பார்க்கிருன்).

கோபு: ஸ்ரீதர்!

ஸ்ரீதரன்: என்னடா?

கோபு: டேய், போன வருஷம் நீ எந்த வகுப்புடா?

ஸ்ரீதரன்: ஐந்தாவது பாரம்.

கோபு: பாஸ் பண்ணிவிட்டாயா!

ஸ்ரீதரன்: என்னடா, உன்னைப்

போல் என்னையும் கஜினி முகமது என்று நினைத்தாயா?

கோபு: சேச்சே, அப்படி ஒன்றும் இல்லை. எனக்கு விஞ்ஞானப் புத்தகம் வேண்டும்.

ஸ்ரீதரன்: வேண்டுமென்றால், புத்தகக் கடைக்குப் போவது; காசைக் கொடுத்து ஒரு புத்தகம் வாங்குவது!

கோபு: அட இழவே! புதுப் புத்தகம் வாங்குவதற்கு உன்னைக் கேட்டா வாங்கவேண்டும்? எனக்கு வேண்டியது பழைய புத்தகம்தான்.

ஸ்ரீதரன்: பழைய புத்தகமா! சரி, ஒரு ரூபாய் தந்தால் என் புத்தகத்தைத் தருகிறேன்.

கோபு: ஒரு ரூபாயா?

ஸ்ரீதரன்: ஆமாம்.

கோபு: சரி, எடுத்துவா!

ஸ்ரீதரன்: காசு கைமேலே வந்து விடவேண்டும். கடன் கிடையாது.

கோபு: ஓ! கைமேலே காசு தான்.

[ஸ்ரீதரன் புத்தகத்தை எடுத்து வருகிறான். பணத்தைக் கொடுத்து விட்டு அவசரம் அவசரமாகப் புத்தகத்துடன் வீடு செல்கிறான் கோபு]

காட்சி 3

[கோபுவின் வீடு. கோபு குதித்துக் கொண்டே ஓடிவருகிருன்]

அப்பா: ஏண்டா, வீடே இடிந்து விழுகிறமாதிரி குதித்துக் கொண்டு வருகிருய்?

கோபு: புத்தகம் வாங்கி விட்டேன், அப்பா!

அப்பா: எவ்வளவுக்கடா?

கோபு: ஒரு ரூபாய்க்கு.

அப்பா: எங்கே, புத்தகத்தைக் காட்டு, பார்க்கலாம்.

[கோபு காண்பிக்கிருன். அப்பா வாங்கிப் பார்க்கிருர்]

அப்பா: (திடுக்கிட்டு) டேய், என்னடா இது! 140-வது பக்கத்துக்குப் பிறகு 161-வது பக்கம் வருகிறதே!

கோபு: (பரபரப்புடன்) ஐயோ! ஏமாற்றிவிட்டானே!

அப்பா: 'ஏமாற்றி விட்டான்' என்று சொல்கிருய்? 'ஏமாந்து போனேன்' என்று சொல்லி அழுடா.

கோபு: ஆமாம்!

அப்பா: அட, எட்டேகால் லட்சணமே! போய் அவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டுப் பணத்தை வாங்கிவா! ஓடு, ஓடுடா!

காட்சி 4

[ஸ்ரீதரன் வீடு. இரைக்க இரைக்கப் புத்தகத்துடன் ஓடிவருகிருன் கோபு]

கோபு: ஸ்ரீதர்.

ஸ்ரீதரன்: என்னடா?

கோபு: இந்தப் புத்தகம் வேண்டாம். ஒரே கிழிசல்.

ஸ்ரீதரன்: வேண்டாமா! அப்படியானல், பழைய பேப்பர் கடையில் எடைபோட்டுப் பணத்தை வாங்கிக்கொள்! பணம் கண்டிப்பாகத் திருப்பித்தரப்பட மாட்டாது. புரிந்ததா!

கோபு: என்ன, தர முடியாதா! நீதானே இதைத் தந்தாய்?

ஸ்ரீதரன்: ஆமாம். தந்தபோது சரியாய்த்தா னிருந்திருக்கும். நீ பாதிப் பக்கங்களைக் கிழித்துவிட்டுக் கொண்டுவந்தால், அதற்கு நான பொறுப்பு! போடாபோ, வேலையற்றவனே!

கோபு: டேய், நீ உருப்படமாட்டாய். என் காசு உனக்கு ஒட்டாது.

ஸ்ரீதரன்: அடேயப்பா! பெரிய விஸ்வாமித்திரர். சாபம் போட்டுவிட்டார். போடா, போ! புத்தி கெட்டவனே!

[கோபு வருத்தத்துடன் 'மூர்மார்க்கெட்'டை நோக்கிச் செல்கிருன்]

காட்சி 5

['மூர்மார்க்கெட்'டிலுள்ள பழைய புத்தகக் கடையில் விஞ்ஞானப்புத்தகத்தை, விற்றுவிட்டு வீடு திரும்புகிருன் கோபு.]

அப்பா: டேய் கோபு, புத்தகத்தை என்னடா செய்தாய்?

கோபு: ஸ்ரீதரன் பணத்தைத் திருப்பித்தர முடியாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டான். அப்பா. பிறகு, மூர்மார்க்கெட்டுக்குப் போய், அங்கே ஒரு கடைக்காரர் தலையிலே எட்டணுவுக்குக் கட்டிவிட்டேன்.

அப்பா: அட ராமா! எட்டணு நஷ்டமா? சரி போகட்டும். நாளைக்கு நான் எப்படியும் வாங்கி வந்து விடுகிறேன். நீ ஒரு ஏமாந்த சோணகிரி! உன் கையில் பணம் தரப்படாது.

கோபு: சரியப்பா! சோமசுந்தரம் எழுதியது. பொது விஞ்ஞானம். ஞாபகம் இருக்கட்டும்.

அப்பா: சரியடா அஞ்ஞானம். சும்மா இருடா!

காட்சி 6

['மூர்மார்க்கெட்'டில் ஒரு பழைய புத்தகக் கடை]

அப்பா: 'சோமசுந்தரம்' எழுதிய பொது விஞ்ஞானம் இருக்கிறதா?

கடைக்காரன்: ஓ...இருக்கிறதே! (கனத்த அட்டை போட்ட ஒரு புத்தகத்தை எடுத்துக் காட்டி) இதோ பாருங்கள். 'பஸ்ட் கிளாஸ் பைண்ட்'. கிழிசல் இல்லாத புத்தகம்.

அப்பா: விலை என்னப்பா?

கடைக்காரன்: ஒரே விலை. ஒரு ரூபாய் எட்டணு.

அப்பா: அடேயப்பா! ஏதோ, வாங்குகிற விலையாய்ச் சொல்லப்பா!

கடைக்காரன்: சரி, 2 அணுக் குறைத்துக் கொள்ளுங்கள்.

அப்பா: ஏனப்பா, இதற்குமுன்னல் காய்கறி வியாபாரம் பண்ணிணுயோ! ஏதோ வெண்டைக்காய், கத்தரிக்காய்க்கு விலை குறைப்பது போல் ஓரணு, இரண்டணுக் குறைக்கிருயே!

கடைக்காரன்: சரி, ஒன்றே கால் ரூபாயில் தம்பிடி குறையாது!

அப்பா: சரி, கொடு.

(பணத்தைக் கொடுத்துவிட்டுப் புத்தகத்துடன் வீடு திரும்புகிருர்)

காட்சி 7

(கோபு வீடு. அப்பா கோபுவைக் கூப்பிடுகிருர்)

அப்பா: டேய் கோபு, இதோ பாரடா, புத்தகம்! வாங்கி வந்து விட்டேன். 'பஸ்ட் கிளாஸ் காலிகோ பைண்ட்!'

கோபு: எங்கே! (கையிலே வாங்கிப் பார்த்துவிட்டு) நன்ருயிருக்கிறதே!

அப்பா: பையன் தான் முட்டாள்; அப்பாவுமா முட்டாளாயிருப்பார்!

கோபு: அதற்கில்லை அப்பா. சரியாக இதிலே பக்கமெல்லாம் இருக்கிறதா என்று...

அப்பா: புரட்டிப்பார். உன்னைப்போல் ஏமாளியல்லடா நான்.

கோபு: (ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் பார்க்கிருன். திடீரென்று) அப்பா, இதை அந்தக் கடைசிக் கடையில்தானே வாங்கினீர்கள்?

அப்பா: எங்கே வாங்கினுல் உனக்கென்ன? இந்த வருஷம் சரியாகப் படிக்காமல் ஊர் சுற்று. கொன்று குழிவெட்டிப் புதைத்து விடுகிறேன்.

கோபு: அது சரியப்பா. கடைசிக் கடையில்தான் நான் ஸ்ரீதரன் தந்த புத்தகத்தை விற்றேன். அதே புத்தகத்தைத்தான் அவன் 'பைண்ட்' பண்ணி உங்கள் தலையில் கட்டி விட்டான்.

அப்பா: என்ன, அப்படியா! நிஜமாகவா?

கோபு: ஆமாம். இதோ பாருங்கள். 140 க்கு அப்புறம் 161 வது பக்கம்!

அப்பா: (தலைசுற்ற) ஆமாண்டா. அயோக்கியப் பயல்!

கோபு: நான் ஸ்ரீதரனிடம் ஏமாந்தேன். நீங்கள் அந்தக் கடைக்காரரிடம் ஏமாந்தீர்கள்! என்ன செய்வது? விட்டுப் போன 20 பக்கத்தையும், குபேரனுடைய புத்தகத்தைப் பார்த்து எழுதிக்கொள்ள வேண்டியதுதான்!

(அப்பா முகத்தில் ஈயாடவில்லை)

(திரை)

ஒரு நிமிஷம்!

பொங்கல் மலர் வெளிவருவதால், பிப்ரவரி இதழ் வெளிவராதோ என்ற சந்தேகம் சிலருக்கு ஏற்படலாம். அந்த சந்தேகம் வேண்டவே வேண்டாம். வழக்கம்போல் பிப்ரவரி இதழ் வெளிவரும். மலரில் தொடர்கதை வெளிவராது என்பதையும் முன்னதாகவே அறிவிக்கிருேம்.

பொங்கல் மலர் பொங்கலுக்கு முதல் நாளே உங்களுருக்கு வந்துவிடும். இப்பொழுதே ஏஜெண்டுகளிடம் சொல்லி வைத்து விடுங்கள்.

—நிர்வாகி

வம்புத் தம்பி

● கோவில்களில் பள்ளிக்கூடங்கள் நடத்தலாமென கவர்னர் ஸ்ரீ பிரகாசா யோசனை கூறினார்.

—கோவைச் செய்தி

கோயில்களில் நடக்கும் பள்ளிகளில் சுண்டல், பொங்கல், புளியோதரை முதலிய பிரசாதங்களும் கொடுக்கப்படும் என நம்புகிறேன்.

● கடன் தொல்லையால் தற்கொலை செய்துகொள்ள முயன்றவருக்கு ரூபாய் 20 அபராதம்.

—அருப்புக்கோட்டைச் செய்தி

"இந்த அபராதத் தொகையையும் கட்ட முடியாமல் அவர் மீண்டும் தற்கொலை செய்ய முயன்றால்...?" என்று இழுக்கிறார், ஒரு சந்தேகப் பிராணி.

● 20 ரூபாய்ப் பேனாவை பன்னிரண்டணாவுக்கு விற்றவர் கைது.

—ஸ்ரீவைகுண்டம் செய்தி

"இதென்னடா அநியாயமாயிருக்கிறது! ஒரு சாமானை நாலு மடங்கு ஐந்து மடங்கு விலைவைத்து விற்கும் கொள்ளை லாபக்காரர்களைக் கைது செய்யாமல், இப்படிக் குறைந்த விலைக்குப் பேனா விற்றவரைக் கைது செய்திருக்கிறார்களே!" என்கிறான் அப்பாவி அம்பிப்பயல்!

● 'சமைப்பது எப்படி, சிக்கனமாகக் குடும்பம் நடத்துவது எப்படி' என்று சொல்லிக் கொடுக்க கல்லூரி திறக்கப்படும் என்று அகில இந்திய மாதர் உணவு மன்ற 3-வது மகாநாட்டில் லீலாவதி முன்ஷி அறிவித்தார்.

—செய்தி

சமைப்பதிலும், சிக்கனமாகக் குடும்பம் நடத்துவதிலும் சிறந்து விளங்கும் எங்கள் பொக்கைவாய்ப் பாட்டி அந்தக் கல்லூரியில் 'புரொபஸர்' வேலைக்கு மனுப்போடப் போகிறாளாம்!

● கன்னி மேரி சிலையிலிருந்து கண்ணீர்!

—கிராகியூஸ் செய்தி

கடவுள் பெயரால் உலகில் நடக்கும் கன்றாவிகளைக் காணச் சகியாமல் கண்ணீர் விட்டிருக்கலாம்.

● மாமியாரின் மூக்கைப் பிடித்துப் பலமாகத் திருகி விட்டாள் ஒரு மருமகள்!

—சென்னைச் செய்தி

"இந்தச் செய்தியைப் படித்ததிலிருந்து என் மாமி இப்போது ரொம்ப ஜாக்கிரதையாகவே என்னிடம் நடந்து கொள்கிறாள்" என்கிறாள் எதிர் வீட்டு ஏகாம்பரத்தின் அண்ணி.

●

இளிச்சவாயன் எழுதுகிறான்!

கோடிவீட்டுக் கோடீஸ்வரர்

இப்போது என் இடுப்பு இருக்கும் உயரத்திற்கு என் தலை இருந்த போது, அதாவது 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு எனக்குப் பல சொற்களுக்கு அர்த்தம் தெரியாமலே இருந்தது. அப்படித் தெரியாமல் இருந்த சொற்களில் ஒன்றுதான் கோடீஸ்வரர் என்பதும்.

'அவர் கோடிவீட்டில் இருக்கிறார். அதனால்தான் கோடீஸ்வரர் என்று சொல்லுகிறார்கள்' என்றே எட்டாவது வயது முடியும் வரை நினைத்திருந்தேன்.

அன்று ஒன்பதாவது வயது ஆரம்பமாகும் நாள். அப்போது, எனக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. அது என்ன சந்தேகம்?

'இந்தத் தெருவில் மொத்தம் 47 வீடுகள் இருக்கின்றன. நாம் இருக்கும் வீடு 24-வது வீடு. இந்தப் பக்கம் 23 வீடுகள்; அந்தப் பக்கம் 23 வீடுகள் இருக்கின்றன. அப்படியானால் நம் வீடு நடுவே இருக்கிறது. கோடி வீட்டில் வசிக்கும் அவரைக் கோடீஸ்வரர் என்று சொல்லும்போது, நடு வீட்டில் வசிக்கும் நம்மை ஏன் 'நடு ஈஸ்வரர்' என்று கூப்பிடக் கூடாது? நான்தான் இன்னும் மேஜராகவில்லை; உண்மைதான். என்னை அந்தப் பெயர் சொல்லி அழைக்காவிட்டாலும், என் அப்பாவையாவது அழைக்கலாமல்லவா?'-இப்படி ஓர் ஆராய்ச்சியில் ஈடுபட்டேன்.

என் தாத்தாவிடமும் ஒருநாள் இதுபற்றித் தைரியமாகக் கேட்டுவிட்டேன். அவர்தான் மாஜி-அதாவது, முன்னாள் தமிழ்ப் பண்டிதராயிற்றே!

நான் அவரைக் கேட்டேனே இல்லையோ, உடனே அவர் மளமளவென்று ஆரம்பித்து விட்டார்.

"அட இளிச்சவாயா, இந்தச் சொல்லுக்குப் பொருள் தெரியவில்லையே! நீயும் ஒரு பையனா? உன்னை என் பேரன் என்று சொல்லிக் கொள்ளவே வெட்கமாயிருக்கிறதே! அந்தக் காலத்தில் நான் ஐந்து வயதுப் பையனாக இருக்கும்போதே எனக்கு இதெல்லாம் தெரியுமே! 'நிகண்டு' என்று நீ கேள்விப் பட்டிருக்கிறாயா?"

"ஓ! நண்டுதானே...?"

"அட முட்டாளே! இல்லை, நீ முட்டாள் இல்லை. 'கோடீஸ்வரர்' என்ற சொல்

னுக்குப் பொருள் தெரியாதவனிடம் நிகண்டைப் பற்றிக் கேட்டேனே, நான்தான் முட்டாள்... சரி, கவனமாய்க் கேள். கோடி ரூபாய்களுக்கு அதிபதியாயுள்ளவரைத்தான் கோடீஸ்வரர் என்கிறோம்...?"

"அப்படியானால், லட்ச ரூபாய்க்கு அதிபதியாயுள்ளவருக்கு......"

"லட்சாதிபதி என்று பெயர்"

"அது எப்படி? லட்சீஸ்வரர் என்றுதானே சொல்ல வேண்டும்? தமிழில் என் இப்படிப் பொருத்தமில்லாமல்..."

'டேய் அதிகப் பிரசங்கி! தமிழில் மட்டும்தான் இப்படி இருக்கிறதோ! ஆங்கிலத்தில் கூடத்தான் இருக்கிறது. P-u-t—புட் என்கிறாய். அதே சமயம் C-u-t—என்பதை கட் என்கிறாய். 'குட்'என்றுதானே அதைச் சொல்லவேண்டும்? இப்படியெல்லாம் ஆராய்ச்சியில் இறங்க உனக்கு இன்னும் வயதாகவில்லை. பிஞ்சிலே பழுத்து விடாதே!"

"சரி தாத்தா, நேரமாகிறது. நான் பள்ளிக்கூடம் போகவேண்டும்" என்று கூறிவிட்டு மெதுவாக அந்த இடத்தைவிட்டு நழுவினேன்.

கோடீஸ்வரர் என்றால் என்ன அர்த்தம் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன்பே, அவர் பெரிய பணக்காரர் என்பதைத் தெரிந்துகொண்டு விட்டேன்!

அவர் பங்களாவின் அகல நீள உயரத்தையும், வாசலில் நிற்கும் தர்வானையும், முகப்பிலே கட்டிக் கிடக்கும் என் தம்பி உயரமுள்ள நாயையும் பார்த்தே தெரிந்து கொண்டுவிட்டேன்!

'அந்தக் கோடீஸ்வரரின் உண்மைப் பெயரென்ன?' என்று தயவு செய்து குறுக்கே கேட்டுவிடாதீர்கள். அவருக்கு அவருடைய அப்பா அம்மா இட்ட பெயர் என்ன, பாட்டி செல்லமாக வைத்து அழைத்த பெயர் என்ன, பள்ளிக்கூடத்தில் பையன்களெல்லாம் சேர்ந்து கொடுத்த பட்டப் பெயர் என்ன என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. சத்தியமாகச் சொல்கிறேன், எனக்குத் தெரியவே தெரியாது! எனக்கு மட்டும்தானா? அநேகமாக எல்லோருக்குமே தெரியாது என்றுதான் நினைக்கிறேன். எல்லோரும் அவரைக் 'கோடீஸ்வரர், கோடீஸ்வரர்'என்றே குறிப்பிடுகிறார்கள்.

அதிகமாய்ப் போனால், 'கோடி வீட்டுக் கோடீஸ்வரர்' என்பார்கள். அதற்குமேல் தெரியாது.

அவருடைய பெயரைப் பற்றிய வியாக்ஞனமே இவ்வளவு தூரம்

வந்து விட்டதே! சரி, இனி மேலே போகலாம்.

கோடிவீட்டுக் கோடீஸ்வரர் வீட்டில் குறைந்தது 10 வேலையாட்களாவது இருப்பார்கள். அவர்களில் பாதிப்பேர் கோடீஸ்வரரின் முன்னால் எப்போதும் கையைக் கட்டிக்கொண்டே நிற்பார்கள். ஆனால், அவர் ஏதாவது வேலை சொல்லும்போதும், அப்படியே கையைக் கட்டிக்கொண்டு நிற்கமாட்டார்கள்! பம்பரமாய்ச் சுற்றிச் சுழன்று வேலை பார்ப்பார்கள். கோடீஸ்வர் 'எள்' என்பதற்குள் 'இதோ எண்ணெய்' என்று கொண்டுவந்து அவர் முன்னால் நீட்டிக்கொண்டு நிற்பார்கள்.

கோடீஸ்வரர் வீட்டு வேலைக்காரர்கள் வேலை பார்க்கும் அழகே ஓர் அழகுதான்!

கோடீஸ்வரர், "டேய் முருகா, கடைவீதிக்குப்போய்..." என்று ஆரம்பிப்பார்.

உடனேயே, முருகன் கடைவீதியை நோக்கி ஓட ஆரம்பித்து விடுவான்!

"ஒரு டஜன் முட்டை..." என்று தொடர்ந்து கூறுவார், கோடீஸ்வரர்.

அவர் கூறி முடிப்பதற்குள், வேலன் முன்னால் ஓடும் முருகனைத் தொடர்ந்து ஓடுவான்!

"...'மார்க்' பன்யன் விலை என்ன..."

இன்னும் கோடீஸ்வரர் வாக்கியத்தைப் பூர்த்தி செய்யவில்லை.

அதற்குள் முருகனும், வேலனும் ஓடிய திசையை நோக்கி ஓடுவான் முனியன்!

"என்று...விசாரித்து வா" என்று வாக்கியத்தை முடிப்பார், கோடீஸ்வரர்.

முடித்ததும், நாலாவது வேலைக்காரன் நாராயணன், முன்னே ஓடும் மூவரையும் பின் தொடர்வான்!

கடைவீதிக்குச் சென்றதும், நால்வரும் சேர்ந்து கூட்டம்போடுவார்கள். 'டேய், உன்னிடம் எஜமான் என்ன சொன்னார்?' 'டேய், உன்னிடம் என்ன சொன்னார்?' என்று ஒருவரை ஒருவர் கேட்பார்கள். கடைசியில், எல்லா வார்த்தைகளையும் தொகுத்து, அதாவது ஆங்கிலத்தில் 'Words Building' என்று சொல்வார்களே, அதே போல் கோடீஸ்வரர் சொன்ன வாக்கியத்தைக் கண்டுபிடிப்பார்கள்.

'டேய் முருகா, கடை வீதிக்குப் போய் ஒரு டஜன் முட்டை 'மார்க்' பன்யன் என்ன விலை என்று விசாரித்து வா' என்ற எஜமானர் கட்டளையை நால்வரும் சேர்ந்து நிறைவேற்றுவார்கள்!

இதமட்டுமா?

"நாராயணா, வெற்றிலைப் பெட்டியை எடு" என்று அவர் கட்டளையிட்டால் போதும்; நாராயணன் மட்டுமல்ல; கூட இருக்கும் நாலு வேலைக்காரரும் சேர்ந்து வெற்றிலைப் பெட்டியைத் தூக்க ஆரம்பித்துவிடுவார்கள்!

'ஒரு சிறு வெற்றிலைப் பெட்டியைத் தூக்க நாலைந்து பேரா? அப்படியானால் அந்த வெற்றிலைப் பெட்டி மிகமிகப் பளுவாயிருக்க வேண்டும்; அல்லது அந்த வேலைக்காரர்கள் மிகமிகச் சோனிகளாக இருக்கவேண்டும்' என்று முடிவு கட்டுகிறீர்களா?

வேண்டாம்; அப்படி அவசரப்பட்டு முடிவுகட்டிவிடாதீர்கள்! இது பெரிய இடத்து சமாச்சாரம். உஷார்!

வேலைக்காரர்கள் ஒவ்வொருவரும் 'நான் முந்தி' 'நான் முந்தி' என்று வேலை செய்வதாக எஜமானனிடத்திலே காட்டிக்கொள்கிறார்கள். வேறொன்றுமில்லை. அந்த எஜமானராவது, "அட முட்டாள்களா, ஒரு சிறு வெற்றிலைப் பெட்டியைத் தூக்க ஒருவன் போதாதோ! மற்றவர்கள் வேறு வேலை இருந்தால் பாருங்கள்; இல்லாவிடில் எங்காவது போய்த் தூங்குங்கள்" என்று சொல்லக்கூடாதோ! உம், அவர் அப்படிச் சொல்லமாட்டார்.



வீட்டுக்கு வருபவர்கள் வெற்றிலைப் பெட்டியை நால்வர் தூக்கும் இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு, 'அடேயப்பா! கோடீஸ்வரர் வீடு என்றால் கோடீஸ்வரர் வீடுதான்! அவர் வீட்டில் வேலைக்காரர்கள் எப்படி வேலை பார்க்கிறார்கள்!' என்று ஆச்சரியப்படவேண்டாமா?

ஒருநாள் எங்கள் வீதி வழியாக ஒருவர் வந்தார். நான் நிற்கும் இடத்துக்கு அருகே வந்ததும் அவர் தோளிலே போட்டிருந்த துண்டை எடுத்து இடுப்பிலே கட்ட ஆரம்பித்தார்.

எனக்கு ஆச்சரியமாயிருந்தது. 'என்ன, நாமோ சிறுவன். நம்மைக் கண்டதும் இவர் என் துண்டை எடுத்து இடுப்பிலே கட்டுகிறார்?" என்று யோசித்தேன்.

அதே சமயம் அவர் துண்டை இடுப்பிலே கட்டிக்கொண்டு இரு கைகளையும் கூப்பி வணக்கம் செலுத்துவார் என எதிர்பார்த்தேன். 'அவர் வணக்கம் செலுத்துவதற்கு முன், நாமே வணக்கம் போட்டு விடலாம்' என்று நினைத்து 'வணக்கம்' என்றேன்.

ஆனால், அவர் ஒன்றும் பதில் கூறாமல் மேலே நடந்தார்.

எனக்கு ஏமாற்றமாய்ப் போய் விட்டது. ஆனாலும், நான் அவரை விடவில்லை. பின் தொடர்ந்தேன். அவர் வேறு எங்கும் போகவில்லை. நேராகக் கோடி வீட்டுக்குத்தான் போனார். கோடீஸ்வரரைக் காணவே வந்திருக்கிறார்.

இதை அறிந்ததும் எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. 'அடராமா, கோடி வீட்டுக் கோடீஸ்வரரைப் பார்க்க வருபவர் எவ்வளவு தூரத்திலேயே துண்டை இறக்கி மரியாதை காட்ட ஆரம்பித்து விட்டார்!' என்று எண்ணி எண்ணிச் சிரித்தேன்.

கோடீஸ்வரர் எங்காவது வெளியில் போவதானால் மோட்டாரிலே தான் போவார். நடக்கவே மாட்டார். அவருக்கு நடக்கத் தெரியுமா தெரியாதா என்பதுகூட இன்னும் சந்தேகமாய்த்தானிருக்கிறது எனக்கு!

அவர் மோட்டார்காரில்

போகும்போதெல்லாம், அவருடன் கூட எப்போதும் நாலைந்து பேர் போவார்கள்.

என் அப்பாவைப் போன்றவர்கள் இதேபோல் ஒரு மோட்டார் வைத்திருந்து, இதேபோல் நாலைந்துபேர்களையும் கூட அழைத்துக் கொண்டு மோட்டாரில் போனால், பார்த்தவர்கள் என்ன சொல்லுவார்கள்?

"டேய் டேய், இந்த மோட்டார் அடிக்கடி வழியிலே நின்றுவிடும் போலிருக்கிறதடா! அதனால்தான் தள்ளுவதற்கு எப்போதும் நாலைந்து பேரைக் கூடவே அழைத்துப் போகிறார்!' என்று கதை கட்டி விடுவார்கள். ஆனால், அவரோ கோடீஸ்வரர். அவரைப் பற்றி அப்படிச் சொல்லலாமா? கூடாது; கூடாது! அப்புறம் ஆபத்துத்தான்!

அவரைப்பற்றி வெளியில் பேசுவதே ஆபத்து என்பார், என் அப்பா. அப்படியிருந்தும், அவரைப்பற்றி இவ்வளவு தூரம் தைரியமாக உங்களிடம் கூறிவிட்டேன். அதற்காக என்னை நீங்கள் அவசியம் பாராட்ட வேண்டும்.

இதற்குமேல் அவரைப்பற்றி எழுத என் கைகள் நடுங்குகின்றன. அதற்காக என்னை அவசியம் நீங்கள் மன்னிக்கவேண்டும். என்ன, மன்னிப்பீர்களா? 'மன்னித்தோம்' என்று ஒரு வார்த்தை சொன்னால் தான் விடுவேன். இல்லாவிடில், இன்னும் எழுதிக் கொண்டே போவேன்!

என்ன, மன்னித்துவிட்டீர்களா? சரி, நிறுத்திக் கொள்கிறேன். வணக்கம். ○

அறிவு மலர்கள்

'கண்மணி'

அறிவாளியின் மனத்தை டாம்பீகத்தால் கவர முடியாது.

—ஸ்பினோஸா

மமதையான மனிதனைக் கண்டு வெற்றி விலகி விடுகிறது.

—டெனிக்லான்

குழந்தையிடம் கொஞ்சம் அன்பு காட்டு. அது அந்த அன்பைக் கொள்ளை கொள்ளையாகத் திரும்பவும் கொட்டுகிறது!

—ரஸ்கின்

இளமையில் தூய வாழ்க்கை நடத்தாதவர்கள் முதுமையில், மீனில்லாத குளத்திலே இரை தேடிக் காத்துக் கிடக்கும் கிழட்டுக் கொக்கைப் போலச் சோர்ந்து அழிவடைவார்கள்.

—புத்தர்

காலடியில் கிடப்பதைக் காணுவதே விவேகம்.

—டெரன்ஸ்

அழியாப் புகழை விரும்புகிறவன் தன் உயிரைத் திரணமாக மதிக்க வேண்டும்.

—லூக்

பல குழந்தைகள்! பல கவலைகள்! ஆனால், ஒரு குழந்தையும் இல்லா விட்டால் ஒருவித இன்பமும் இல்லை.

—பௌலி

குழந்தையின் எதிர் காலம் தாயின் செயலில் அடங்கியுள்ளது. —நெப்போலியன்



பொன்மொழி

மக் அடாக் களைகளே தமைகுல் மக்யா அடிய செதல்.

'இது எந்த நாட்டுப் பழமொழி?' என்றுதானே கேட்கிறீர்கள்? எந்த நாட்டுப் பழமொழியும் அல்ல. நம் நாட்டுக் கவிஞர் ஒருவரின் பொன்மொழிதான் இது! ஆம், கவி தாகூர் கூறிய ஒரு பொன்மொழி இப்படிச் சிதறிக்கிடக்கிறது. இதைச் சீர் செய்து படியுங்கள், பார்க்கலாம்.

விடை : மக்களை மக்களே அடிமையாக்குதல் அடாத செமல்.

—'பத்மா', தூனே

மனம் நாடுதே!

நீரோடை அருகினிலே
நெடும்பாறை மீதினிலே
மாடுகளைத் தேடியே
மதுரகுழல் இசைப்பவனே,
மர்டுகள வாராவிடினும்
மாங்குயில்கள் வெட்கிடினும்
நர்டுதே என் மனந்தான்
நலமிகும் உன் இசையினிலே.

—ர. தங்கவேலன், திருச்சி

ம ழை

வெட்டும் மின்னல்
முட்டும் இடி
நெட்டும் சுழல் காற்றும்,
கொட்டு மேளம்
தட்டிக் காட்டக்
கெட்டி மழை ஆடுதே!

—'கோல்டுபெல்'

* * *



இப்படிப் பார்த்தால் ஆறு 'டின்'கள் தெரிகின்றன. திருப்பிப் பார்த்தால்—?

—'சந்திரன்'

திருடன் பட்டபாடு

வெங்கலத்தால் செய்த
பூட்டைத்
திருடன் உடைத்தே
விளக்க மாற்றைத் திருடிக்
கொண்டு ஓடிப்போனானே!
எங்கெங்கேயோ தேடிப்
பார்த்தும்
மாற்றைக் காணோமே!
ஏதுசெய்வோம் என்று சலிப்
புற்றிருந்தோமே!

எங்கள் பாட்டிஎதிர்த்தவீட்டில்
சென்றிருக்கையில்
எடுத்த திருடன் மாற்றை விலை
கூறி நின்றானாம்;
எங்கள்பாட்டி என்னசெய்தாள்
சொல்லத் தேவையோ?
எடுத்த மாற்றை வாங்கி
ரெண்டு
சாத்துச் சாத்தினாள்!

—எஸ். பி. நாபன், கோத்தான்குளம்

19925

Edited, Printed and Published by Rama. Arunachalam
at Shanti Press, 135, Coral Merchant St., Madras-1.
Hon. Editor: AL. Valliappa.

(2-வது அட்டைப் பக்கத் தொடர்ச்சி)

○ **அபூர்வ வண்டிகள் :**

மாட்டுவண்டி, குதிரைவண்டி முதலியவற்றைத்தான் நம் நாட்டில் நாம் பார்க்கின்றோம். நாம் பார்க்காத பல அபூர்வ வண்டிகளை மலரில் பார்க்கலாம். என்னென்ன வண்டிகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதையும் அறியலாம்.

○ **மகான்கள் சொன்ன கதைகள் :**

புத்தர், ஏசு, காந்தி போன்ற மகான்கள் கூறிய குட்டிக் கதைகள் விசேஷப் படங்களுடன் வெளிவருகின்றன.

○ **மாஸ்டர் குமார் :**

'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்று 'ஔவையா'ரில் கேட்கும் மாஸ்டர் குமார் தான் ஔவையாரில் சேர்ந்தது பற்றியும், தனக்கு ஏற் பட்ட அனுபவம் பற்றியும் அழகாகக் கூறுகிறான்.

○ **'பேப்பர்' விற்ற பெரியார்கள் :**

சிறிய வயதில் பேப்பர் விற்ற பலர் மிகமிகப் பிரபலமாகி விட்டனர்! அவர்களின் இருவர்ணப் படங்களையும் காணலாம்.

மேலும் பல அறிஞர்கள், உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர்கள் எழுதிய கதை கட்டுரை கவிதைகளும், **பாரதியார்—பல உடைகளில், இங்கும் அங்கும், 'இப்படியும் பேசுமா'?, நடனமாடும் தங்கை, போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்!** முதலிய கார்ட்டூன்களும் மலரில் உள்ளன.

விலை 1 ரூபாய்

தயாராகிறது !

மலர் உங்களூரில் பொங்கலுக்கு முதல் நாளே கிடைக்கும். ரிஜிஸ்தர் தபால் மூலம் வேண்டுவோர் ரூ. 1-8-0 அனுப்பவேண்டும்.